தமிழரசு
அக்டோபர் 2004

International Human Rights Defence Committee, Ukraine

(A Chartered consultative body of United Nations)

Presentation of

# Golden Star of Honour and Dignity Award
# to
# Selvi J Jayalalithaa

Chief Minister of TamilNadu





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
புரட்டாசி – ஐப்பசி
மலர்:36 இதழ்: 4
அக்டோபர் 2004
விலை ரூ.10

**இந்த இதழில்...**

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரத்ததான தினச் செய்தி ..... 2

★ மக்களின் நன்மைக்காகவே அனைத்துச் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும் ..... 3

★ விவசாயிகளின் நலனுக்கு என் இதயத்தில் எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு ..... 9

★ திரைப்படத் தொழிலை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அரசு செயல்படுத்தவிருக்கும் தொகுப்பு நடவடிக்கைகள் ..... 11

★ தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் ..... 14

★ தமிழகத்தில் வறட்சி நிலையை ஆராய மத்தியக் குழுவை உடனடியாக அனுப்ப வேண்டும்
*– மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை* ..... 21

★ குற்றம் இல்லா சமூகமும் அச்சமில்லா சுதந்திரமான வாழ்வுமே அமைதிக்கான அடிப்படைக் கூறுகளாகும் ..... 25

★ தமிழகத்தில் வறட்சி நிலையை விரிவாக ஆய்வு செய்ய மத்தியக் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தல் ..... 31

★ புதிய வீராணம் திட்டம் ..... 33

★ இலக்குகளை விரைவில் எய்தும் பாதையில் ஏறுநடை போடும் தமிழ்நாடு ..... 37

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி ..... 45

★ தியாகி திருப்பூர் குமரன் ..... 49

★ பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா ..... 51

★ தமிழ்நாடு அரசின் சார்பில் மகாத்மா காந்தியடிகளின் 136ஆவது பிறந்த நாள் விழா ..... 54

★ அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் ..... 57

★ காற்று (சிறுகதை) ..... 62

★ அண்ணல் காந்தியடிகளின் அமுத மொழிகள் ..... 68

★ இந்தியாவிலேயே முதன்முதலாக கணினிமயமாகும் கிராம ஊராட்சிகள் ..... 69

★ தமிழக அரசின் சார்பில் மருது பாண்டியர் நினைவு நாள் மற்றும் மருது பாண்டியர் நினைவு தபால் தலை வெளியீட்டு விழா ..... 73

**அட்டைப்பட விளக்கம்**

**முதலாம் பக்க அட்டை** : நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத் தாரகை விருது வழங்கும் விழா.

**இரண்டாம் பக்க அட்டை** : திருப்பூர் குமரன்

**மூன்றாம் பக்க அட்டை** : இந்தியாவிலேயே முதன்முதலாக கிராம ஊராட்சிகள் கணினி மயமாக்கும் திட்டம் தொடக்கம்.

**நான்காம் பக்க அட்டை** : மகாத்மா காந்தியடிகளின் 136ஆவது பிறந்தநாள் விழா.

*ஆசிரியரும் வெளியிடுபவரும்* :**வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# தேசிய தன்னார்வ இரத்த தான தினம்

அக்டோபர் 1, 2004

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**இரத்த தான தினச் செய்தி**

உயிர் காக்கும் ஒப்பற்ற திரவம் இரத்தம். எனவேதான், எத்தனையோ தானங்கள் இருந்தாலும் இரத்த தானம் தலை சிறந்த தானமாய் உலகெங்கும் போற்றப்படுகிறது.

இன்றைய சூழலில் சாலை விபத்துகளினாலும், தீ விபத்துகளினாலும், அறுவை சிகிச்சைகளின்போதும் ஏற்படும் பெருமளவு இரத்த இழப்பை, இரத்தத்தைப் பிறரிடம் இருந்து பெறுவதன் மூலம் மட்டுமே ஈடு செய்ய இயலும். பணத்திற்காக இரத்த தானம் செய்வது என்ற நிலை மாறி, தமிழகத்தில், தற்பொழுது, தன்னார்வ இரத்தக் கொடையாளர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. மேலும், சிறப்பாகச் செயல்படும் இரத்த வங்கிகளை ஊக்குவிப்பதற்காக சுழற் கோப்பைகளையும், தன்னார்வ இரத்தக் கொடையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தங்கப் பதக்கங்களையும் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் வழங்கி வருகிறது. இன்று இந்தியாவில் தன்னார்வ இரத்த தானத்தில் தமிழகம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அரசு இரத்த வங்கிகளும், தனியார் இரத்த வங்கிகளும் அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களும், தன்னார்வ இரத்த தானப் பணிகளில் ஈடுபட்டுத் தமிழகம் முதலிடம் அடைய எனது அரசு முனைப்புடன் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஆண்டுதோறும் அக்டோபர் முதல் தேதி இரத்த தான நாளாக அனுசரிக்கப்படுகிறது. சில தனி நபர்கள் மட்டும் முன் வந்து இரத்த தானம் செய்வது போதாது. இரத்த தானம் என்பது ஓர் இயக்கமாக மாற வேண்டும். இரத்தக் கொடையாளர்கள் உயிர் காப்பவர்கள். ஆதலால், உங்கள் மனித நேயத்தை உங்கள் இரத்த தானத்தால் வெளிப்படுத்துங்கள்!

**இரத்த தானம் செய்யுங்கள்!**
**உயிர்களைக் காப்பாற்றுங்கள்!**

# மக்களின் நன்மைக்காகவே அனைத்துச் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும்

புதுடில்லியில் **18.9.2004** அன்று நடைபெற்ற
முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.



**நா**ட்டுமக்களின் மனதில் சட்ட ஆட்சியின் மாட்சிமை பற்றிய எண்ணத்தை வலுப்பெறச் செய்யும் நோக்கில் வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்குரிய புதிய செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும் நாட்டில் சட்ட ஆட்சி முறையை நிலைநிறுத்துவதில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்வதற்காகவும் கூட்டப் பட்டுள்ள இந்த முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் பேருவகை கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வளர்ச்சிதான் சுதந்திரம் என்ற கோட்பாட்டை திரு. அமர்த்தியா சென் போன்ற பிரபல பொருளாதார நிபுணர்கள் விரிவாக எடுத்துரைத் துள்ளார்கள். அரசியல் சுதந்திரம், பொருளாதார வாய்ப்புகள், சமூக வசதிகள், ஒளிவுமறைவற்ற நடவடிக்கைகளுக்கான உத்தரவாதம், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட நிலை ஆகியவை தொடர்பாக குடிமக்களுக்குள்ள உரிமைகள் மற்றும் வாய்ப்புகளே மனித சுதந்திரம் மேம்படத் துணைபுரியும் உள்ளிணைந்த காரணிகள் என்று திரு. அமர்த்தியா சென் கூறியுள்ளார். இதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, நம்முடைய சமூக அமைப்பில் அமர்த்தியா சென் குறிப்பிட்ட அந்த ஐந்து சுதந்திரங்களோடு நாட்டிலுள்ள அனைவரும் நீதித்துறையை எளிதில் அணுகும் வசதி அல்லது அவற்றைப் பெறுவதற்குரிய வாய்ப்பும், தனிமனித சுதந்திரத்தை உயர்த்தக் கூடிய உரிமையாகக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். சமத்துவத்திற்கான அடிப்படை உரிமையைப் பொறுத்த வரையில், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலையை நமது அரசியலமைப்புச் சட்டம் அனைவருக்கும் வழங்கியுள்ளது. இருந்தாலும், சமுதாயத்தில் மற்றவர்களுக்குக் கிடைக்கின்ற கல்வி அல்லது பொதுச் சுகாதாரம் அல்லது அங்காடி வாய்ப்புகள் என்னென்ன சமூக – பொருளாதாரக் காரணிகளால் நலிந்த பிரிவினருக்குக் கிடைக்கவில்லையோ, அதே காரணிகளால் அவர்களால் பல்வேறு நிலைகளில் நீதியமைப்புகளையும் அணுகி பயன்பெற முடியவில்லை. இதனால், அப்பிரிவினரின் பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள், பறிபோகிற நிலை உருவாகின்றது. அறியாமை, அதிகப்படியான செலவு, நீண்டு கொண்டே செல்கின்ற வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தாக்குப் பிடிக்க முடியாத நிலை காரணமாக அவர்களால், நீதிமன்றம் மூலமாக விரைவான பயனுள்ள நிவாரணம் பெற முடியவில்லை.

இச்சூழ்நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டச் சிற்பிகளான நமது முன்னோர்கள் வழி காட்டிக் கொள்கைகளாக நமக்கு உருவாக்கித் தந்துள்ள சட்ட



ஆட்சி முறைமையின் மாட்சியை உயர்த்திப் பிடிக்கவும், நமது குற்றவியல் நீதிமுறையின் நியாயத் தன்மையை நிலை நிறுத்தவும், நாம் போதிய அளவுக்கு அணியமாக இருக்கிறோமா என்பதை இந்த மாநாட்டில் நாம் மதிப்பிட வேண்டியுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, ஓர் ஆட்சியின் மூன்று உறுப்புகளான சட்டமன்றம், நிருவாகம் மற்றும் நீதித்துறை ஆகிய இழைகளைக் கொண்டு நேர்த்தியாக நெய்யப்பட்டதோர் ஒப்பற்ற ஓவியத் திரை ஆகும். இது ஓர் உறுப்பின் செயல்பாடு. மற்றோர் உறுப்பினால் பாதிக்கப்படாத வகையில் தடுப்புகளும், எதிரீடுகளும் ஒத்திசைவான முறையில் அமையப் பெற்ற உள் கட்டமைப்பைக் கொண்டு விளங்குகிறது. நிருவாகம், சீர்குலைவுச் சக்திகளை ஒரு கட்டுக்குள் வைத்து, நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கமைதியைப் பாதுகாப்பதுடன், விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அதன் மூலம், சட்டமன்றமும் நீதித்துறையும் தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்குத் தேவையான சுமூகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு அமைப்பும் மற்ற அமைப்புகளின் செயல்பாட்டில் அத்துமீறி நுழையாமல் அவற்றை மதித்துச் செயல்பட வேண்டும்.

இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ள குறிப்பான பொருள் குறித்துப் பேசுவதற்கு முன்னதாக, இம் மாநாடு வாயிலாக, நாம் உணர்த்த வேண்டிய உட்பொருள் பற்றி ஒரு சில வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். ''தாமதப்படும் நீதி தடுக்கப்படும் நீதி''யாகும் என்ற வில்லியம் கிளாட்ஸ்டன்ஸ் அப்ஹாரிசம் முதுமொழி சுட்டிக்காட்டும் தளையைத் தகர்த்து வெளிவரக் கூடிய ஒரு சகாப்தத்திற்கு இந்த மாநாடு அடித்தளம் அமைக்க வேண்டும். நீதி மன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்ற ஒரு கடினமான சூழலில் நாம் சிக்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நீதிமன்ற நடவடிக்கைகள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவிடாதவாறு வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. நீதிமன்றங்களில் அளவிற்கு அதிகமாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைந்து முடித்துத் தீர்வுகாணத் தேவையான புதிய உத்திகளையும் அணுகு முறைகளையும் வகுக்க வேண்டிய கடினமான பொறுப்பு இந்த மாநாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பான்மையான மாநிலங்கள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில், அவை தம் வசமுள்ள நிதி ஆதாரங்களை ஏழை, எளிய மக்களுக்கும் தேவைகள் உள்ள மக்களுக்கும் நேரடியாகப் பயனளிக்கக் கூடிய திட்டங் களுக்காகச் செலவிட வேண்டிய கட்டாயம் அம்மாநிலங்களுக்கு உள்ளது.

என்னுடைய தலைமையிலான அரசு, தமிழ்நாட்டில் நீதித்துறைக்கு இயன்ற அளவுக்கு அதிகபட்ச நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையை ஏற்படுத்த ரூ.65.44 கோடி அளவுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளையைத் திறக்கும் சிறப்புமிகு திட்டம் முடிக்கப்பட்டு, கடந்த 24.7.2004 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டின் தென் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவு மெய்ப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு நாங்கள் தொடர்ந்து அளித்து வந்த ஆதரவும் நிதியுதவியும் சட்ட ஆட்சியின்பாலும், நீதி நிருவாகத்தின்பாலும் எங்களுக்குள்ள உறுதி பாட்டையே உணர்த்துகின்றன. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தீர்த்து வைக்கும் வழக்குகளின் வீதம் அதிகமாக உள்ள சில உயர்நீதிமன்றங்களுள், சென்னை உயர்நீதிமன்றமும் ஒன்று என்ற சாதனை படைக்கப்பட்டிருப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்வதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும் நிலை உருவாகாதிருக்க வேண்டுமாயின், குறித்த காலத்தில் வழக்கு நிலுவைகளை முடிப்பதற்கு, மத்திய அரசின் தாராள நிதியுதவித் திட்டம் அவசியம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அனைத்து வசதிகளையும் கொண்ட புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய தக்கதொரு திட்டத்தை இம்மாநாட்டின் ஒரு பகுதியாக இறுதி செய்யவேண்டும் என்கிற என்னுடைய அவாவினை இங்கே நான் எடுத்துரைக்க விழைகிறேன்.

தமிழ்நாட்டில் உண்மையான பாலின நிகர்மையை எய்த வேண்டும் என்பதில் நான் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். சட்டத்தின்முன் பெண்களுக்குச் சமஉரிமை கிடைக்கச் செய்யும் இலக்கை நோக்கிய பயணத்தில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழகம் முழுவதும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும், மகளிருக்கான நீதிமன்றங்களையும், குடும்ப நீதிமன்றங்களையும் ஏற்படுத்தி மேற்சொன்ன சாதனையை எய்திட நான் காரணமாக இருந்திருக்கிறேன். 1992–இல் நாட்டிலேயே முதல் முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் தொடங்கி வைத்தேன். இன்று தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் அனைத்துக் காவல்துறை உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்படுவதை உறுதி செய்துள்ளேன். இம்மாநிலத்தில் இது வரையிலும், முற்றிலும் மகளிரால் நிருவகிக்கப்படுகிற 195 காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடமாடும் ஆலோசனை மையங்களையும் நான் ஏற்படுத்தியுள்ளேன். மகளிர், எவ்வித அச்சமுமின்றி, தங்களுடைய குறைகளை எடுத்துக்கூற முன்வர இயலும் வகையில், மகளிரிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஓர் அமைப்பாக இந்தக் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த விழிப்புணர்வின் காரணமாகக் குறைகளை விரைந்து களைய வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுந்து வருகின்றன. அதன் காரணமாக, ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 6 மகளிர் நீதிமன்றங்களோடு கடலூரில் ஒன்றும், பெரம்பலூரில் இன்னொன்றுமாக மேலும், இரண்டு மகளிர் நீதிமன்றங்களை ஏற்படுத்த அண்மையில் நான் ஆணையிட்டுள்ளேன். நிருவாகத்தின் தரத்தை உயர்த்தும் திட்டத்தின் ஓர் அங்கமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு மகளிர் நீதிமன்றமாவது ஏற்படுத்தப்படுவதற்கு ஏதுவாக அனைத்து மாநிலங்களுக்கும் போதிய நிதிகளை ஒதுக்க வேண்டுமென, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம், பன்னிரண்டாவது நிதி ஆணையத்தை அணுகிக் கோரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சமுதாயத்தில் ஆழமாக வேர் விட்டுள்ள பாலினப் பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளை நாம் திறம்பட சமாளிக்க வேண்டுமாயின், கட்டாயமாக இவ்வாறு நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

1984–ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும், தமிழ்நாட்டில் 6 குடும்ப நீதிமன்றங்களை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். ஒரு மில்லியனுக்கும் அதிகமாக மக்கள்தொகை கொண்ட மாநகரங்களில் மட்டுமே இத்தகைய நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்றாலும், மக்கள்தொகை, இன்னும் ஒரு மில்லியனைத் தாண்டாத, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் போன்ற மாநகரங்களிலும் நாங்கள் குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2001–ஆம் ஆண்டில் இந்த நீதிமன்றங்கள் 4,897 வழக்குகளைத் தீர்த்து வைத்தன என்பதையும், 2003–ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 7,163 ஆக அதிகரித்துள்ளது என்பதையும், 2004–ஆம் ஆண்டில் இதுவரையிலும் 7,381 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2002–2003–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம், முன்னரே குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்திய மாநிலங்களுக்குச் சாதகமாக இல்லாதது துரதிருஷ்டவசமானதாகும். இத்திட்டம் தொடங்கப் படுவதற்கு முன்னரே, ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தகைய குடும்ப நீதிமன்றங்களையும், மத்திய அரசு, இத்திட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவந்து, அவற்றிற்கும் நிதி வழங்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிதியுதவியின் அளவு மிகவும் சொற்பமாக உள்ளது என்பதும், அது அதிகரிக்கப்பட வேண்டும் என்பதும் என்னுடைய கருத்தாகும். தாராள நிதியுதவி திட்டம், மாநிலங்கள் மேலும் அதிக மாவட்டங்களில் விரைந்து குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

வழக்குகளை விரைவாகத் தீர்த்துவைப்பதை எளிதாக்கும் பொருட்டும், சட்ட நடவடிக்கைகளில் இயல்பாக ஏற்படக்கூடிய காலதாமதங்களைக் களைவதற்காகவும் நவீனமயமாக்கும் திட்டத்திற்கு எனது அரசு முன்னுரிமை அளித்துள்ளது. நாட்டிலேயே "தொலை நீதி" "(Tele Justice)" திட்டத்தைத் தொடங்கிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை மதிப்பிற்குரிய இம்மாமன்றத்தில் நான்

பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏற்பாட்டின் மூலம், தமிழ்நாட்டிலுள்ள மகளிருக்கான தனிப்பட்ட இரண்டு சிறைகள் உட்பட, 9 சிறைகளும், 270 நீதிமன்றங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் உள்ள 78 இடங்கள் ரூ.8.61 கோடி செலவில், இந்த ஏற்பாட்டின் மூலம் இணைக்கப் பட்டுள்ளன. இந்த வசதியினால், வீடியோ கலந்தாய்வு மூலம், நீதித்துறை நடுவர்கள், நீதிமன்றத்தில், தங்களுடைய அறைகளில் இருந்துகொண்டே, சிறை வளாகங்களில் இருக்கும் கைதிகளின் காவல் கால அளவை நீட்டிக்க இயலும். இத்திட்டத்தினால், சிறைக் கைதிகளுக்குப் பாதுகாப்பளித்தல், நீதிமன்றங்களில் நீதித்துறை நடுவர்கள் முன்னிலையில் அவர்களை ஆஜர்படுத்துதல் ஆகிய வகையிலான இடையூறு நிறைந்த நடைமுறைகளைத் தவிர்க்க முடிகிறது. மேலும், கைதிகளை அழைத்துச் செல்லும்போது, அவர்கள் தப்பிச் சென்றுவிடுதல் அல்லது சிறை வளாகங்களுக்குள் குற்றத்திற்குள்ளாக்கும் பொருட்களைக் கள்ளத் தனமாகக் கடத்துதல் மற்றும் நீதிமன்றங்களில் பெரும் கூட்டம் சேர்தல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் அற்றுப் போவதுமன்றி, வழிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்ற காவலர்கள் குறித்த செலவு மற்றும் எரிபொருள் செலவுகள் ஆகியவற்றிலும் கணிசமான மிச்சமேற் படுவதால், இது முழுக்க முழுக்க ஒரு வெற்றித் திட்டமாகும். ஏனைய மாநிலங்களும் இத்திட்டத்தைப் பின்பற்றலாம் என நான் பரிந்துரைப்பதோடு இத்திட்டத்திற்காக மத்திய அரசு, மாநில அரசுகளுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து எனது அரசு, ஏற்கெனவே அதற்காக, ரூ.2.80 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில், சென்னை உயர்நீதி மன்றத்தையும் மதுரையில் உள்ள உயர்நீதிமன்றக் கிளையையும் கணினி மயமாக்குவதற்காக மத்திய அரசின் பங்காக அளிக்கப்பட்ட ரூ.1.42 கோடியும் அடங்கும். இருப்பினும், நாம் மேலும் முன்னேறிச் சென்று, தகவல் தொழில்நுட்பத்தின் அனைத்து வசதிகளையும் தொடர்ந்து அளிப்பதற்கான திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டும். அத்தகைய இரு திட்டச் செயற்குறிப்புகள், அதாவது, ரூ.5 கோடி செலவில், சென்னை உயர்நீதிமன்றத்திற்கான திட்டமொன்றும், ரூ.2.54 கோடி செலவில், மதுரையில் உள்ள உயர்நீதிமன்றக் கிளைக்கான மற்றுமோர் திட்டமும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இச்செயற்குறிப்புகளுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி வழங்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல நீதிமன்றங்கள் பாழடைந்த பழைய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன; அவற்றிற்குப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. மேலும், நீதித்துறை அதிகாரிகளுக்குப் போதிய வீட்டுவசதிகள் அளிக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது. ரூ.140 கோடி செலவில், நீதிமன்றக் கட்டடங்களும் நீதித்துறை அதிகாரிகளுக்குரிய வீடுகளும் கட்டுவதற்கான விரிவான செயற்குறிப்பு ஒன்றை எனது அரசு அனுப்பி வைத்துள்ளது. இந்தச் செயற்குறிப்புகளைச் செயற்படுத்த மத்திய அரசு, மாநிலத்திற்குக் கணிசமான நிதியுதவி அளிக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும்.

விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இதுவரையிலும், நாங்கள், 49 விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். இந்நீதிமன்றங்கள் வாயிலாக 1,05,395 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. இது, நாட்டில் வேறு எந்த மாநிலமும் எய்தாத ஒப்பற்றதோர் சாதனையாகும். இந்த வேகத்தில் தொய்வில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே, மத்திய அரசு, போதிய நிதி உதவிக்கு வகை செய்யும் திட்டம் வாயிலாக, இந்த விரைவு நீதிமன்றங்களுக்கு 31.3.2005–ஆம் நாளுக்கு அப்பாலும் தொடர்ந்து நிதியளிக்க வேண்டும். அவ்வாறு நிதியுதவி கிடைக்குமாயின் சென்னை உயர்நீதிமன்றம் கோரியுள்ளவாறு, விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

தமிழ்நாட்டில், தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு மாற்று அமைப்புகளுக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளோம். 1987–ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகாரமன்றச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட மக்கள் நீதிமன்றத் (லோக் அதாலத்) திட்டத்தில்அபார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் அண்மையில், ரூ.1.85 கோடி செலவில் மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றத்திற்காகத் தனியே கட்டடம் ஒன்றைக் கட்டித் தந்துள்ளோம். ஒவ்வொரு மாவட்ட நீதிமன்ற வளாகத்திலும் பொருத்தமான சட்ட உதவி மையங்களைக் கட்டுவதற்கான திட்ட மொன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். மக்கள் நீதி மன்றங்களை நடத்துவதற்கு இது வசதியாக இருக்கும். வட்ட அளவிலும் நாங்கள் இத்தகைய அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளோம். வட்ட அளவிலான 141 சட்டக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றம், சட்டம் பற்றிய விழிப்புணர்வையும், சட்ட அறிவையும் மக்களிடம் பரப்புவதை ஓர் இயக்கமாக மேற்கொண்டு வருகிறது. மக்கள் தொடர்பு ஊடகம், குறுவட்டுகள், சிற்றேடுகள்,செய்திப் படங்கள் உட்பட வெவ்வேறு தகவல் தொடர்பு உத்திகளைப் பயன்படுத்தி செய்தி, கல்வி, தகவல் தொடர்பு இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 14, 184 குடியிருப்புகளில், சட்ட அறிவு குறித்த முகாம் ஏற்கெனவே நடத்தப்பட்டுள்ளது. செலாவணி முறிச்சட்டம் தொடர்பான வழக்குகள் உட்பட,



புதிய வழக்குகள் மக்கள் நீதிமன்றங்களின் செயல்வரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. சிறப்பு மக்கள் நீதிமன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பான வழக்குகளைக் கூட தீர்த்து வைக்கின்றன. சட்ட அறிவுக்கு அப்பாற்பட்ட சட்டக் கல்வி பற்றிய ஏற்பாட்டு முறை ஒன்றினை நாம், திறம்பட்ட வகையில் செயல்படுத்த வேண்டும். அதனால், மக்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து அறிந்து கொள்ள முடியும். இது, அவர்களுடைய உரிமைகள் மீறப்படுகிற போது, அதற்கான பரிகாரங்களைக் காண்பதற்கு அவர்களுக்கு உதவும். வழக்குத் தொடுப்பதால் ஏற்படுகிற செலவைத் தவிர்க்க, இணக்கமான முறையில் தகராறுகளைத் தீர்த்துக் கொள்கிற முறைக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

கைதிகள் நீதிமன்றத் திட்டம் (Prisoners Adalat) தமிழ்நாட்டில் நன்கு செயல்பட்டு வருகிறது. இந் நீதிமன்றம், சென்னை மத்திய சிறையில் முதலில் தொடங்கப்பட்டது. தற்போது, ஏனைய மத்திய சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால், கைதிகள், நீதித்துறை அதிகாரிகளை அணுகுவது எளிதாக இருப்பதால் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

நீதித்துறையின் சுதந்திரமானச் செயல்பாடு நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சமாகும். நீதியின் மாண்பினை நிலைநிறுத்த உதவும் இந்தச் சுதந்திரமானச் செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, நீதித் துறையின் பணி நிலைமைகளில் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பழுத்த அனுபவம் நமக்குப் பயன்பட, உயர்நீதிமன்ற நீதிபதியின் ஒய்வு பெறும் வயதினை 62–லிருந்து 65 ஆகவும் உச்சநீதிமன்ற நீதிபதியின் ஒய்வு பெறும் வயதினை 65–லிருந்து 67 ஆகவும் நாம் உயர்த்த வேண்டும். உச்சநீதிமன்ற நீதிபதிகள் முற்றிலும் வேறுபட்ட தனி வகையினராகக் கருதப்பட்டு, அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்திற்கு நிகரான ஒய்வூதியமும், வாகன வசதி, தனிப் பணியாளர்கள் முதலியன உள்ளிட்ட அவர்கள் பணியில் இருந்த போது பெற்று வந்த அனைத்துப் பயன்களும், வசதிகளும் பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின்னரும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. பல நீதிபதிகள், பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின்னர் விசாரணை ஆணையங்களின் நீதிபதிகளாகவும், நடுவர்மன்ற நீதிபதிகளாகவும் அரும்பணியாற்றுகின்றனர். அவர்களுக்குப் பணியிலிருக்கும் நீதிபதிகளுக்கு வழங்கப்படுவது போன்ற வசதிகளையும், சலுகைகளையும் அளிப்பதே பொருத்தமாக இருக்கும்.

அண்மைக் காலத்தில் வெளியான சட்ட நூல்கள், குறித்த கால வெளியீடுகள், பத்திரிகைகள் ஆகியவற்றைப் படித்து, அன்றாட விவரங்களை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு, ஆண்டொன்றுக்கு, சிறப்பு ஒதுக்கீடாக ரூ.50,000 வழங்கப்பட வேண்டும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறுகிற மாநாடுகளில் நீதிபதிகள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அவர்கள் மேற்கொள்கிற வெளிநாட்டுப் பயணங்களுக்கு

உச்சவரம்பு எதுவும் விதிக்காமல் மாநில அரசுகள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இந்த வசதி, பணியிலிருந்து ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பரந்த அனுபவத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டின் தூதர்கள், ஆளுநர்கள் முதலிய உயர் பதவி நியமனங்களில் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இன்று, நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள பொருள்கள் மீதான என்னுடைய கருத்துகளைச் சுருக்கமாகத் தெரிவித்துள்ளேன். உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்துரைகளின் அடிப்படையில், நீதித்துறை அதிகாரிகளுக்கு நல்ல வசதிகளையும், பணி நிலைமைகளையும் உருவாக்கித் தருவதுடன் ஊதியமும் வழங்க தமிழ்நாட்டில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டியபடி பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ், மாநில அரசுகளுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்க வேண்டும். விரைவு நீதிமன்றங்கள் உட்பட புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்த, முற்றிலும் புதிய மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டம் ஒன்று அவசியம் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். இதனால் மட்டுமே நீதித் துறைக்குப் புதிய உத்வேகம் அளிக்க முடியும்.

நமது நிலையை மதிப்பீடு செய்து விரைவில் நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதான குறிப்பான செயல் திட்டங்களை வகுக்கும் ஒரு முயற்சியாக, நிருவாகத் துறையையும், நீதித்துறையையும் ஒரே இடத்தில் அமரச் செய்துள்ள வகையில் இந்த மாநாடு தனிச் சிறப்பைப் பெறுகிறது. தற்போது பெருகி வரும் புதிய வழக்குகளைச் சமாளிப்பதற்கான இடைவிடாத போட்டியில் தேவைப்படுகிற உத்வேகத்தை அளிக்க, இந்த விவாதங்கள் நிச்சயம் உதவும். சட்டம் மற்றும் நீதி நிருவாகத்தை நிலை நிறுத்துவது, அதன் மேன்மையை மிளிரச் செய்வது என்ற பொதுவான குறிக்கோளை எட்ட வேண்டுமேயானால், தகராறைத் தீர்த்து வைக்கும் மாற்று அமைப்புகள் உட்பட விரைவான நடவடிக்கைகளை நாம், தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது.

நீதி நிருவாகம் திறம்படச் செயல்படுவதற்காக, தேவையான ஆதாரங்களையும், வசதிகளையும் அளிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென்றாலும், நீதித்துறை, தனக்கென மிக உயரிய தொழில் ரீதியான தரங்களையும் நன்னெறிகளையும் வரையறுத்துக் கொண்டு சட்ட நிருவாகத்தின் மாண்பினை நிலை பெறச் செய்ய வேண்டியது அதன் கடமையாகிறது. சுய நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றி பதில் சொல்லும் பொறுப்பையும் கட்டுப்பாட்டமைதியையும் உருவாக்க வேண்டும் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். நாட்டின் உயரிய நீதி நிருவாகத்தில் உள்ளவர்களை வேறு எந்த வெளி அமைப்பும் கட்டுப்படுத்த வேண்டியதில்லை. நாட்டின் உயரிய நீதி நிருவாகத்தில் உள்ளவர்கள் தங்களுக்குள்ளாகவே சுயக்கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொண்டு, அதனடிப்படையில் பணியாற்றும்போதுதான் நீதித்துறையின் மேன்மை மிளிரும் என்பதில் முழு நம்பிக்கையும் உறுதியும் நமக்கு இருக்கிறது.

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள நம் முன் உள்ள வினா இதுதான் – நாம் மக்களுக்குச் சேவை செய்வது எந்த முறையில் ஆட்சி அதிகாரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களாகவா ? அல்லது மக்களுக்குப் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அரசு பணியாளர்கள் என்ற முறையிலா ? அல்லது நீதி வழங்கும் ஆயத்தில் இடம்பெற்றுள்ள நீதிபதியாகவா, இது தொடர்பாக ஹென்றி புரௌஹாம் அவர்களின் வார்த்தைகளை இங்கே மேற்கோள் காட்ட விழைகிறேன்:

“ரோமப் பேரரசு, நான் வரும்போது, வெறும் செங்கற்களாலான கட்டடமாக இருந்தது. அதை பளிங்கு மாளிகையாக மாற்றிவிட்டு வந்தேன் என்று அகஸ்டஸ் மன்னன் பெருமை கூறி மார்தட்டிக் கொண்டார். ஆனால், அதற்குப் பதிலாக நான் பார்க்கும்போது முத்திரையிடப்பட்ட புத்தகமாக இருந்த சட்டத்தை உயிரோட்டமுள்ளதாக மாற்றிவிட்டு வந்தேன்; செல்வந்தர்களின் பரம்பரைச் சொத்தாக இருந்ததை வறியவர்களின் உரிமைச் சொத்தாக மாற்றிவிட்டு வந்தேன்; ஒரு புறம் தந்திரம், மற்றொருபுறம் அடக்குமுறை என இருபுறமும் கூர் தீட்டப்பட்ட வாளாக இருந்ததை, நேர்மையின் செங்கோலாகவும், ஏதுமறியாத அப்பாவிகளின் கேடயமாகவும் மாற்றிவிட்டு வந்தேன் என்று அவர் மார்தட்டியிருந்தால் அது அம்மன்னன் புகழுக்கு பெருமை சேர்த்திருக்கும்”.

“மக்களின் நலன்தான் முடிவான சட்டமாகும்” என்று சிசெரோ கூறியுள்ளார். ஒரு ஜனநாயக நாட்டில், அரசின் ஆதார சுருதியாக விளங்குவது மக்களின் நலன்தான். மக்களின் நன்மைக்காகவே அனைத்து சட்டங்களும் இயற்றப்பட வேண்டும். அது, சட்டமன்றத்திற்குள்ள புனிதமான கடமையாகும். இதே கருத்து ஜனநாயகத்தின் மற்றொரு தூணாக விளங்கும் நீதித்துறைக்கும் பொருந்தும். எனவே, வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்கு மட்டுமின்றி, வழங்கப்படும் நீதியின் தரத்தை உயர்த்தத் தேவையான வசதிகளையும், உதவியையும் அளிப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு முயற்சி மேற்கொள் வோமாக.

* * *

# விவசாயிகளின் நலனுக்கு என் இதயத்தில் எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு



“என்னுடைய அரசு, வளமான காலமோ, வறட்சிக் காலமோ, எப்போதுமே, விவசாயிகளின் தோழனாகவே இருந்து வந்துள்ளது. தமிழக விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் வேகமாக முன்னேற்றம் அடைவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு, நான் எப்போதுமே உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளேன். விவசாய உற்பத்தித் திறன், தண்ணீர் உள்ளிட்ட இடுபொருட்களின் திறமையான பயன்பாடு மற்றும் பயிர்ச் சாகுபடியைப் பல்திறப்படுத்தி, பாசனத்திற்குக் குறைவான தண்ணீரே தேவைப்படக்கூடியப் பயிர்களான, காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலமே இதனைச் சாதிக்க வேண்டியுள்ளது. இந்நோக்கத்தை அடைய, தொலைநோக்குடன் கூடிய திட்டங்கள் தேவைப்படும். வேளாண்மைத் துறையில் உண்மையான முன்னேற்றம் காண இவற்றை எல்லாம் செய்ய நான் திட்டமிட்டுள்ளேன்.

2001–ஆம் ஆண்டு மே திங்களில், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதுமே, நமது விவசாயிகள், தங்களுக்கு விவசாயத்திலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக, புதுப் புதுத் திட்டங்களை மேற்கொள்ள உதவுவது என முடிவு செய்தேன். இந்த நோக்கத்தில்தான் ஒரு பெரும் நிவாரண நடவடிக்கையாக, விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி வகையில் செலுத்த வேண்டி இருந்த மொத்தம் 310.50 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து நான் உத்தரவிட்டேன். இதனால், கூட்டுறவு அமைப்புகளுக்குப் பாதகம் வராமல் பாதுகாக்க அரசிடமிருந்து, அவ்வமைப்புகளுக்கு உரிய இழப்பீடு கிடைப்பதை நான் உறுதி செய்தேன். 2001–ஆம் ஆண்டு, மே திங்களில், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, நான் மேற்கொண்ட இந்த நடவடிக்கையானது, விவசாயிகளின் நலனுக்கு என் இதயத்தில் எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
**(24.9.2004)**

2002–2003ஆம் ஆண்டில், தமிழ்நாடு கடும் வறட்சியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அது போதாதென்று, காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படையில் நமக்குச் சேரவேண்டிய தண்ணீரைக் கர்நாடக அரசு வழங்க மறுத்துவிட்டதால், காவிரி டெல்டா மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. முந்தைய தி.மு.க. ஆட்சி விட்டுச் சென்ற நெருக்கடியான நிதி நிலைமையின் பிடியில் சிக்கித் தவித்த என்னுடைய அரசுக்கு, இது ஒரு கடும் சவாலாக அமைந்தது. எங்களுடைய இடத்தில் வேறு எந்த அரசு இருந்திருந்தாலும் நிச்சயமாக, எங்களைப் போல நிலைமையைத் திறம்படச் சமாளித்திருக்க முடியாது. 2002–2003ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள்

பயன்பெறுகின்ற விதத்தில் தொகுப்பு நிவாரண நடவடிக்கைகளை நான் மேற்கொண்டேன்.

2002–2003 ஆம் ஆண்டில், 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க் கடன்களை, மத்திய காலப் பயிர்க் கடன்களாக மாற்றி என்னுடைய அரசு ஆணையிட்டது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு, சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைகின்ற விதத்தில், 2002–2003ஆம் ஆண்டில், 61.05 கோடி ரூபாய் அளவுக்கு வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து நான் உத்தரவிட்டேன்.

மீண்டும், 2003–2004–ஆம் ஆண்டிலும் வறட்சி ஏற்பட்டது. அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சிகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எப்படியேனும் உதவிட வேண்டுமென என்னுடைய இதயம் துடித்தது. ஆகவே 2003–2004ஆம் ஆண்டில், மற்றொரு தொகுப்பு நிவாரண நடவடிக்கைகளை நான் அறிவித்தேன். 1.4.2002 முதல் 31.3.2004 வரையிலான கால அளவில், விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் இழப்பை ஈடுசெய்து, அவர்கள் மீண்டும் வேளாண்மைப் பணிகளைத் தொடங்கிட வழங்கப்பட்ட 325.56 கோடி ரூபாயையும் சேர்த்து, என்னுடைய அரசு வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக மொத்தம் 850.44 கோடி ரூபாய் வழங்கியது. மேலும், 2003–2004–ஆம் ஆண்டில், பயிர்க் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி வகையில் விவசாயிகள் செலுத்த வேண்டி இருந்த பாக்கித் தொகை 62 கோடி ரூபாயையும் என்னுடைய அரசு தள்ளுபடி செய்தது.

இந்த ஆண்டிலும் (2004–2005), வறட்சி தொடருமோ என்ற அச்சுறுத்தல் இருந்தது. 2004ஆம் ஆண்டு, செப்டம்பரில், நிலைமை சிறிது சீரடைந்துள்ளது. இதனால், மக்களிடையே மகிழ்ச்சியும், நம்பிக்கையும் துளிர்த்துள்ளது. விவசாயிகள் இந்த ஆண்டில் நல்ல விளைச்சல் கண்டுஅவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும். அதே நேரத்தில், அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினாலும், கூட்டுறவு நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகளை விவசாயிகள் செலுத்தாததாலும், அந்த கூட்டுறவு நிறுவனங்கள் தற்போது புதிய கடன் வழங்க முடியாத அளவுக்கு அவற்றின் நிதி நிலைமையில் முடக்கம் ஏற்பட்டுள்ளது. சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு நல்ல விளைச்சல் காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் விவசாயிகள் இருக்கின்ற இத்தருணத்தில், கூட்டுறவுக் கடன் நிறுவனங்களால், அவர்களுக்குத் தேவையான கடனை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பது கடும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

தொலைநோக்குப் பார்வையுடனும், விவசாயிகளின் நலனின்பால், என்னுடைய அரசுக்கு உள்ள உண்மையான அக்கறையினாலும், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள், விவசாயிகளுக்கு இந்த ஆண்டில் வழங்குகின்ற கடனைக் கணிசமான அளவுக்கு உயர்த்திட நாங்கள் உறுதி செய்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 2003–2004ஆம் ஆண்டில், பயிர்க் கடனாக 688 கோடி ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக, 2004–2005ஆம் ஆண்டில், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் இதனை 1,037 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கிட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மேலும் பயன் அடைவதை உறுதி செய்யும் வகையில், 2004–2005ஆம் பருவ ஆண்டில், பயிர்க் கடன்கள் மீதான வட்டி விகிதம் ஆண்டு ஒன்றுக்கு 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு, புத்துயிர் ஊட்டி, வலுப்படுத்துவதன் மூலம், 1,037கோடி ரூபாய் என்ற உயர்த்தப்பட்ட இலக்கை எய்துவது சாத்தியமாகும். இந்த இலக்கை அடைய, என்னுடைய அரசு கூட்டுறவு வங்கிகளுக்கு ரொக்க உதவியாக 217.32 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

பொதுவாக, கூட்டுறவுக் கடன் நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாமல் மிகைப் பற்று வைத்துள்ள விவசாயிகளுக்குப் புதிதாக கடன் வழங்கப்பட மாட்டாது. அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, பெரும்பாலான விவசாயிகள் புதிய கடன் பெறும் தகுதியை இழந்து விட்டார்கள். இக்கடன் பாக்கியைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவர்களுக்குப் போதிய அவகாசம் அளிக்கப்பட வேண்டும். அதிலும் முக்கியமாக, இந்தப் பருவத்தில்,அவர்களுக்கு மேலும் புதிதாகக் கடன் வழங்கி அவர்கள் அமோக விளைச்சல் காண்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

விவசாயிகள் புதிதாகக் கடன் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு ஏதுவாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில், 31.3.2004 நிலவரப்படி, ஒவ்வொரு உறுப்பினர் கணக்கிலும், நிலுவையாக உள்ள குறுகிய காலக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணையை மாற்றி அமைக்க நான் உத்தரவிட்டுள்ளேன். தமிழக விவசாயப் பெருமக்களின் நலன் கருதி, 2,598 கோடி ரூபாய் அளவுக்கான குறுகிய கால பயிர்க்கடன்களை, முதல் இரண்டாண்டு கால கடன் தவணைகளை ஒத்தி வைத்து, அதற்குப் பிறகு 3 ஆண்டுகளில் அந்தக் கடன்களைச் சம தவணைகளாகத் திருப்பிச் செலுத்தும் வகையில், மொத்தம் 5 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தத்தக்க நீண்ட காலக் கடன்களாக மாற்றி அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்த ஏற்பாட்டின் மூலமாக, ஏற்கெனவே பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாததால் புதிதாகக் கடன் பெறும் தகுதியை இழந்துள்ள விவசாயிகளும், புதிதாகக் கடன்பெற முடியும். இதனால், கூட்டுறவு வங்கிகளும், நடப்பாண்டுக்குரிய (2004–2005) இலக்கான 1,037 கோடி ரூபாய் அளவுக்கு, விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்க இயலும். அனைத்து விவசாயிகளும், இந்தப் பருவத்தில், புதிதாகக் கடன்பெற்று, சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள வசதியாக, ஒரு பெரும் நிவாரண நடவடிக்கையாக குறுகிய காலக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணையை நான் மாற்றி அமைத்து ஆணையிட்டுள்ளேன். ◆

# திரைப்படத் தொழிலை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அரசு செயல்படுத்தவிருக்கும் தொகுப்பு நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 27.9.2004



**க**டந்த 23.9.2004 அன்று, ஒட்டுமொத்த தமிழ்த் திரைப்படத் துறையினர் சென்னை மாநகரில் ஒரு பெரும் பேரணியை நடத்தி அன்று என்னைச் சந்தித்து, தமிழ்த் திரைப்படத் துறை சந்தித்து வருகின்ற பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர். இந்தச் சந்திப்பின் போது, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் தமிழ்த் திரைப்படத் துறை சந்தித்து வருகிற பல்வேறு பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறியதுடன், அந்தப் பிரச்சினைகளைச் சீர்படுத்தி தமிழ்த் திரைப்பட உலகிற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். திரைப்படத் துறையின் ஓர் அங்கமாக நானே முன்னர் இருந்த காரணத்தால், திரைப்படத் தொழிலைப் பாதிக்கின்ற அனைத்து பிரச்சினைகள் குறித்து நானும் அறிவேன். திரைப்படத் துறைப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற விரிவான ஆலோசனைக்குப் பின், கடும் வீழ்ச்சியில் இருக்கும் தமிழ்த் திரைப்படத் தொழிலை இந்தச் சரிவில் இருந்து மீட்டு முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல உதவிடும் நோக்கத்துடன் தொகுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் முடிவெடுத்து உள்ளேன். என்னுடைய அரசு செயல்படுத்தவிருக்கும் தொகுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:–

திரைப்படம் பார்ப்பவர்களை திரையரங்குகளுக்கு வர விடாமல் செய்கின்ற, திருட்டு வீடியோ பிரச்சினை தான் தமிழ் திரைப்படத் துறை சந்தித்து வரும் மிக முக்கியமான பிரச்சினை ஆகும். இவ்வாறு திரைப்படத் தொழிலை வெகுவாகப் பாதிக்கின்ற திருட்டு வீடியோ தயாரிப்பை ஒடுக்க கடுமையான புதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று திரைப்படத் துறையின் பிரதிநிதிகள் என்னைக் கேட்டுக் கொண்டனர். திருட்டு வீடியோவுக்கு எதிராக நான் ஏற்கெனவே கடுமையான நிலை எடுத்து, மிகவும் திறமான நடவடிக்கைகளால் இந்தத் தொல்லைக்கு ஒரு முடிவு கட்டுமாறு கண்டிப்பாக உத்தரவுகள் பிறப்பித்துள்ளேன். என்னுடைய உத்தரவின் காரணமாகவே 1995–ஆம் ஆண்டில் 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்த 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளும் திருட்டு வீடியோ தொல்லையைத் தடுத்து நிறுத்த தங்களால் இயன்ற அளவு சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. 2003–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த 9 ஆண்டு காலத்தில் 2,354 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 12 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவால் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால், என்னுடைய கண்டிப்பான உத்தரவின் பேரில், 2004–ஆம் ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் 959 குற்றங்கள் கண்டறியப்பட்டு, 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. திருட்டு வீடியோவைத் தடுப்பதற்கு எனது அரசின் சிறப்பான நடவடிக்கைகள் எத்தகைய பயன்களை விளைவித்துள்ளன என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு ஆகும்.

திருட்டு வீடியோவை ஒழிப்பதற்கு எனது அரசு எடுத்துள்ள கடுமையான நடவடிக்கைகளுக்கு தங்களது

பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்ட தமிழ் திரைப்படத் துறையின் பிரதிநிதிகள், வீடியோ திருட்டு திறம்படத் தடுக்கப்படுவதை உறுதி செய்ய புதிய வழிவகைகள் காணப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். நான் இந்தக் கோரிக்கை மீது முழுமையான ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் திருட்டு வீடியோவைத் திறம்படத் தடுக்கும் வகையில் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானித்து உள்ளேன். பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், திரையிட அனுமதிக்கப்படாத திரைப்படங்கள், அதுவும், தணிக்கை செய்யப்படாத திரைப்படங்கள் உள்ளிட்ட பல திரைப்படங்கள் திருட்டு வீடியோக்கள் மூலம் மக்களுக்குக் காட்டப்படுகின்றன. 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மற்றும் குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982) வரம்பின்கீழ் வீடியோ திருட்டு செய்பவர்களையும் கொண்டு வரும் வகையில் திருத்தம் செய்ய எனது அரசு முடிவெடுத்து உள்ளது. பொது ஒழுங்கிற்குக் குந்தகம் விளைவித்து அரசுக்கு நிதி இழப்பையும் உருவாக்குகின்ற இந்த வீடியோ திருட்டை மிகவும் திறம்படத் தடுப்பதற்கு இது உதவும். சமூக விரோத சக்திகள் அமைப்பு ரீதியான குழுக்களாக இயங்கி, திருட்டு வீடியோ தயாரிப்பு வேலைகளைச் செய்து வருகின்றன. இதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை அவர்கள் மற்ற சமூக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்துகிறார்கள். இதன் விளைவாக இத்தகைய குழுக்களுக்கிடையே மோதல்கள் உருவாகி பொது அமைதிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆக, வீடியோ திருட்டையும் இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதையே இவை எல்லாம் சுட்டிக் காட்டுகின்றன. எனவே, இவ்வாறு சட்டத்தில் திருத்தம் செய்திட எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

1982–ஆம் ஆண்டின் சட்டம் 14–ன் கீழ் திருட்டு வீடியோவைத் திறம்பட தடுக்கும் நடவடிக்கையை அறிமுகப்படுத்துவதுடன், 1957–ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தையும் (மத்திய சட்டம்) கண்டிப்புடன் செயல்படுத்த எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இந்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற குற்றங்கள், ஆறு மாதங்களுக்குக் குறையாமல் ஆனால் 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறை தண்டனையும், 50,000 ரூபாய்க்குக் குறையாமல் ஆனால் 2 இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய அபராதமும் விதித்து தண்டிக்கப்படத் தக்கனவாகும். 1957–ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் மேலும் திறம்பட நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். சாட்சிகளை ஆஜர்படுத்துவது, சிறை தண்டனை உள்ளிட்ட உரிய தண்டனை கிடைக்கும் வகையில் வழக்கை விரைவாக நடத்துவதை உறுதிப்படுத்துவது ஆகியவை இதில் அடங்கும். இதன் பொருட்டு, தற்போதுள்ள 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளுடன், கூடுதலாக மேலும் 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் உருவாக்கப்படும். இதனால் மொத்த வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை 12–ஆக உயரும். அத்துடன் தற்போதுள்ள 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளும் உடனடியாக வலுப்படுத்தப்படும்.

தொலைபேசி எண் 100–ஐத் தொடர்பு கொண்டு, காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கலாம். புகார் கிடைக்கப் பெற்றவுடனே அவர்கள் திருட்டு வீடியோ பிரிவை உஷார்படுத்துவர். இதன் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுப்பது உறுதிப்படுத்தப்படும்.

அடுத்தப்படியாக, பேருந்துகளில் பரவலாக திருட்டு வீடியோ திரைப்படங்கள் காட்டப்படுவது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பேருந்துகளில் திருட்டு வீடியோ திரைப்படம் எதனையும் காட்டக் கூடாது என அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தகைய திருட்டு வீடியோ திரைப்படங்கள் திரையிடாதவாறு பார்த்துக் கொள்ளும், தவிரவும் தனியார் பேருந்துகளில் இத்தகைய திருட்டு வீடியோ திரைப்படங்களைத் திரையிடக் கூடாது என தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு திருட்டு வீடியோ திரைப்படங்கள் காட்டுவதானது, தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு வீடியோ பேழைகள், பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு மூலமாக தொலைக்காட்சிகளில் திரைப்படங்கள் காட்டல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/84) கீழ் குற்றமாகும். இச்சட்டத்தின் விதித் துறைகளை மீறுகின்ற பேருந்து உரிமையாளர்கள் மீது, இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டும் விதிக்க வகை செய்து இச்சட்டத்தின் 15(2) பிரிவைத் திருத்தவும் என்னுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு விதிக்கப்படுகின்ற அபராதமானது 1 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமலும் 5 இலட்சம் ரூபாய் வரையிலும் இருக்கும். திரும்பத் திரும்ப இக்குற்றம் புரிபவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத்தை அதிகரிக்க வகை செய்தும் 15(2) பிரிவு திருத்தப்படும்.

திரைப்படத் தொழில் சந்தித்து வருகின்ற இன்னல்களைக் கருத்தில் கொண்டு கேளிக்கை வரி குறைக்கப்பட வேண்டுமெனவும் திரைப்படத் தொழில் சார்ந்த பிரதிநிதிகள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். கேளிக்கை வரி விதிப்பு தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் நான் கவனமாகப் பரிசீலித்தேன். திரைப்படத் தொழிலுக்கு உயரளவு ஊக்கமும் உத்வேகமும் அளிக்கின்ற விதத்தில் கேளிக்கை வரி விதிப்பு முறையில் பெரிய அளவில் மாற்றங்கள் செய்ய நான் முடிவு செய்துள்ளேன்.

தற்போது மாநகராட்சிப் பகுதிகளிலும் சிறப்புநிலை நகராட்சிப் பகுதிகளிலும் புதிய திரைப்படங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற மொத்தத் தொகையில் 25 சதவிகிதம், பழைய திரைப்படங்களுக்கு வசூலிக்கப் படுகின்ற தொகையில் 20 சதவிகிதம் என்ற அளவில் கேளிக்கை வரிகள் விதிக்கப்படுகின்றன. இது புதிய படங்களுக்கு 15 சதவிகிதமாகவும் பழைய படங்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த வரி விகிதமானது இந்த உள்ளாட்சிப் பகுதிகளிலிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நிரந்தரமான மற்றும் ஓரளவு நிரந்தரமான திரையரங்குகளுக்கும் பொருந்தும்.

மற்ற பகுதிகளில், காட்சி ஒன்றுக்கு அல்லது வாரம் ஒன்றுக்கான இணக்க வரி அடிப்படையில் கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது. இந்த இணக்க வரி விதிப்பு முறையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக இப்பகுதிகள் அனைத்திலும் வசூலிக்கப்படுகின்ற மொத்தத் தொகையில் 10 சதவிகிதம் என்ற எளிமையான வரி விதிப்பு முறையை அறிமுகப்படுத்த நான் முடிவு செய்துள்ளேன்.

கேளிக்கை வரி விதிப்பு மூலமாகக் கிடைக்கின்ற வருமானத்தில் 90 சதவிகிதம் தற்போது உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு வரி விகிதங்கள் கடுமையாகக் குறைக்கப்படுவதனால் உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படக்கூடும். உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாய் இழப்பு எதுவும் ஏற்படாதவாறு பாதுகாக்க அவற்றுக்குத் தக்க இழப்பீட்டு ஏற்பாடுகள் செய்யப்படும்.

நல்ல கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு குறைந்த செலவில் தயாரிக்கப்படுகின்ற திரைப் படங்களுக்குக் (Low Budget Films) கேளிக்கை வரி விதிப்பிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. சமூகத்தில் நல்ல சிந்தனையை உருவாக்கி நல்ல செய்திகளைப் பரப்புகின்ற விதத்தில் தயாரிக்கப் படுகின்ற குறைந்த செலவிலான திரைப்படங்கள், கேளிக்கை வரி விதிப்பிலிருந்து முழுமையாக விலக்குப் பெற தகுதி பெறும்.

திரைப்படக் கட்டணங்கள் கடைசியாக திருத்தியமைக்கப்படுவதற்கு முன்னதாக பராமரிப்புச் செலவுத் தொகைகள் அனுமதிக்கப்பட்டு வந்தன. அரங்குகளையும், திரைப்படக் கொட்டகைகளையும் நல்ல முறையில் பராமரிப்பதற்கு வசதியாக முன்னர் வழங்கப்பட்டு வந்த பராமரிப்புக் கட்டணங்கள் மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு குளிர்சாதனை வசதி இல்லாத திரையரங்குகளைப் பொறுத்த வரையில் அனுமதிச் சீட்டு ஒன்றுக்கு 50 காசு என்ற வீதத்திலும், குளிர்சாதன வசதி உள்ள திரையரங்குகளைப் பொறுத்த வரையில் அனுமதிச் சீட்டு ஒன்றுக்கு ரூபாய் ஒன்று என்ற வீதத்திலும் பராமரிப்புச் செலவினம் அனுமதிக்கப்படும்.

திரைப்படத் தொழில் தற்போது சந்தித்து வருகின்ற இக்கட்டான நிதிநிலைமையில் வெளிப்புறப் படப்பிடிப்பு பிரிவுகள், திரைப்படச் சாதனங்களை வாடகைக்கு விடுவோர், படப்பிடிப்பு அரங்கங்கள், ஆய்வுக் கூடங்கள், ஒலிப்பதிவு அரங்குகள், ஆடியோ, வீடியோ, சேட்டிலைட் உரிமைகள் ஆகியவற்றுக்கான குத்தகையின் மீது 12 சதவிகிதத்தில் விற்பனை வரி விதிக்கப்படுவது இன்னலை ஏற்படுத்துவதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவே திரைப்படத் தொழில் சார்ந்த இத்தகைய குத்தகை நடவடிக்கைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது என நான் முடிவு செய்துள்ளேன். இம்முடிவினைக் கருத்திற்கொண்டு அத்தகைய குத்தகைகள் மீது விற்பனை வரி வசூலிக்க எடுக்கப்பட்ட தண்டனை நடவடிக்கைகளும் திரும்பப் பெறப்படும்.

தமிழ்நாட்டில் திரைப்பட படப்பிடிப்புகள் நடத்தப்படுவதை ஊக்குவிக்குகின்ற வகையிலும் நலிந்து வரும் திரைப்படத் தொழிலுக்கு, கைகொடுத்து உதவுகின்ற வகையிலும் பொது இடங்களில் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டண வீதங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும் திரைப்படத் தொழில் சார்ந்தவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். கல்லூரிகள், கொடைக்கானல் மற்றும் உதகை ஏரி, வன விலங்கு உய்விடங்கள், மருத்துவமனைகள் முதலிய வகை–Iஐச் சேர்ந்த இடங்களில் படப்பிடிப்புகள் நடத்த தற்போது நாள் ஒன்றுக்கு 50,000 ரூபாய் கட்டணம் விதிக்கப்படுகிறது. இக்கட்டணம் நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாயாகக் குறைக்கப்படும். ஏனைய பொது இடங்களை உள்ளடக்கிய வகை–IIஐச் சேர்ந்த இடங்களுக்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு 25,000 ரூபாயிலிருந்து நாள் ஒன்றுக்கு 5,000 ரூபாயாகக் குறைக்கப்படும். ராஜாஜி ஹாலில் படப்பிடிப்பு நடத்துவதற்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து நாள் ஒன்றுக்கு 25,000 ரூபாயாகக் குறைக்கப்படும்.

திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கின்ற விதத்தில் முன்னர் மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அரசுக்கு 2000–ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட கடும் நிதி நெருக்கடி காரணமாக இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த இயலவில்லை. திரைப்படத் தொழில் சந்தித்து வருகின்ற இக்கட்டான நிலைமையைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும் என திரைப்படத் துறையினர் ஒரு கோரிக்கை வைத்துள்ளனர். மொத்தம் 25 பிரதிகளுக்கு மேல் எடுக்கப்படாத மற்றும் 3,000 மீட்டர் நீளத்திற்கு மேற்படாத குறைந்த செலவிலான திரைப்படங்களுக்கு, திரைப்படம் ஒன்றுக்கு 7 இலட்சம் என்று உயர்த்தப்பட்ட வீதத்தில் மானியம் வழங்குகின்ற புதிய திட்டம் 2003–ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். □



# தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள்

கடும் வீழ்ச்சியில் இருந்த தமிழ்த் திரைப்படத் தொழில் மீட்சியுறும் வகையில் பல்வேறு சலுகைகளை அறிவித்து ஆக்கமும், ஊக்கமும் அளித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் வகையில், **2000, 2001** மற்றும் **2002** ஆகிய ஆண்டுகளுக்கான, சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில் நுட்பக் கலைஞர்கள், கலைத்துறை வித்தகர்கள், மற்றும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகிய விருதுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் பெயர்களை **30.9.2004** அன்று அறிவித்துள்ளார்கள்.

தமிழ்த் திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து, தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளை வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் இந்தத் திட்டத்தின்கீழ், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மேலும், தமிழ்த்திரைப்படத் தொழிலின் மேம்பாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, சாதனைகள் படைத்து, சிறந்த சேவையாற்றி வருகின்ற சாதனையாளர்களுக்கு, கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இவ்வகையில் 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு, இவ்விருதுகளுக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ள சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில் நுட்பக் கலைஞர்கள், கலைத்துறை வித்தகர்கள், மற்றும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரின் பெயர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.9.2004 அன்று அறிவித்தார்கள்.

தமிழ்த் திரைப்படத் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையிலும், தமிழ்த் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் உற்சாகமும், புத்துணர்வும் பெறும் வகையிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள விருதுகள் விவரம் :

## 2000–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த படம் | முதல் பரிசு | வானத்தைப்போல |
| 2 | சிறந்த படம் | இரண்டாம் பரிசு | வானவில் |
| 3 | சிறந்த படம் | மூன்றாம் பரிசு | வெற்றிக்கொடி கட்டு |
| 4 | சிறந்த படம் | சிறப்புப் பரிசு | பாரதி |
| 5 | பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் | சிறப்புப் பரிசு | இனிய உதயம் |
| 6 | அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம் | முதல் பரிசு | பட்ஜெட் பத்மநாபன் |
| 7 | அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம் | இரண்டாம் பரிசு | முகவரி |
| 8 | அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம் | மூன்றாம் பரிசு | உயிரிலே கலந்தது |

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த நடிகர் | முரளி | (கடல் பூக்கள்) |
| 2 | சிறந்த நடிகை | தேவயானி | (பாரதி) |
| 3 | சிறந்த நடிகர் | சிறப்புப் பரிசு | ஜெயராம் (தெனாலி) |
| 4 | சிறந்த நடிகை | சிறப்புப் பரிசு | ஷாலினி(அலை பாயுதே) |
| 5 | சிறந்த வில்லன் நடிகர் | பிரகாஷ்ராஜ் | (வானவில் / அப்பு) |
| 6 | சிறந்த நகைச்சுவை நடிகர் | வடிவேலு | (வெற்றிக்கொடி கட்டு) |
| 7 | சிறந்த இயக்குநர் | விக்ரமன் | (வானத்தைப் போல) |
| 8 | சிறந்த கதையாசிரியர் | மனோஜ்குமார் | (வானவில்) |

| | | | |
|---|---|---|---|
| 9 | சிறந்த உரையாடலாசிரியர் | சேரன் | (வெற்றிக்கொடி கட்டு) |
| 10 | சிறந்த இசையமைப்பாளர் | தேவா | (குஷி / உயிரிலே கலந்தது / சந்தித்த வேளை) |
| 11 | சிறந்த பாடலாசிரியர் | தாமரை | (தெனாலி) |
| 12 | சிறந்த பின்னணிப் பாடகர் | ஹரிஷ் ராகவேந்திரா | (பாரதி) |
| 13 | சிறந்த பின்னணிப் பாடகி | பவதாரணி | (பாரதி) |
| 14 | சிறந்த ஒளிப்பதிவாளர் | ஆனந்தகுட்டன் | (கண்ணுக்குள் நிலவு) |
| 15 | சிறந்த ஒலிப்பதிவாளர் | சிவகுமார் | (ரிதம்) |
| 16 | சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) | மோகன் ராஜ் | (சீனு) |
| 17 | சிறந்த ஆர்ட் டைரக்டர் | ஜி. கிருஷ்ணமூர்த்தி | (தெனாலி / வானவில்) |
| 18 | சிறந்த சண்டைப் பயிற்சியாளர் | ஸ்டண்ட் சிவா | (கண்ணுக்குள் நிலவு) |
| 19 | சிறந்த நடன ஆசிரியர் | பிருந்தா | (முகவரி) |
| 20 | சிறந்த ஒப்பனைக் கலைஞர் | கிரிசன் | (சீனு) |
| 21 | சிறந்த தையற்கலைஞர் | ஜி. கிருஷ்ணமூர்த்தி | (பாரதி) |
| 22 | சிறந்த குழந்தை நட்சத்திரம் | யுவகாந்த் | (மாயி) |
| 23 | சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) | ராஜீவ் | (பாரதி) |
| 24 | சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) | சவீதா | (பிரியமானவளே) |

## 2000–2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த இயக்குநர் | வி. அறிவழகன் | (புதினம்) |
| 2 | சிறந்த ஒளிப்பதிவாளர் | வினோத் குமார் | (சிறகுகள்) |
| 3 | சிறந்த ஒலிப்பதிவாளர் | தமிழ்வாணன் | (வெளிச்சம்) |
| 4 | சிறந்த படத் தொகுப்பாளர் | ஜெயா | (ஐயா) |
| 5 | சிறந்த படம் பதனிடுபவர் | நரசிம்மலு | (சிறகுகள்) |
| 6 | சிறந்த நடிகர் | விஜய் ராகவேந்திரா | (மலரட்டும்) |

## கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் – 2000

| | | |
|---|---|---|
| 1 | அறிஞர் அண்ணா விருது | திருமதி. அஞ்சலிதேவி |
| 2 | கலைவாணர் விருது | திருமதி. பத்மினி |
| 3 | ராஜா சாண்டோ விருது | திரு. குன்னக்குடி வைத்தியநாதன் |

| | | |
|---|---|---|
| 4 | எம்.ஜி.ஆர். விருது | திருமதி. ஜமுனா |
| 5 | கவிஞர் கண்ணதாசன் விருது | திருமதி. S. வரலட்சுமி |
| 6 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது | திருமதி. சுகுமாரி |
| 7 | தியாகராஜ பாகவதர் விருது | திருமதி. எம்.என். ராஜம் |

## 2001–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த படம் | முதல் பரிசு | விரும்புகிறேன் |
| 2 | சிறந்த படம் | இரண்டாம் பரிசு | பாண்டவர் பூமி |
| 3 | சிறந்த படம் | மூன்றாம் பரிசு | ஆனந்தம் |
| 4 | சிறந்த படம் | சிறப்புப் பரிசு | நந்தா |
| 5 | பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் | சிறப்புப் பரிசு | ஜமீலா |
| 6 | அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம் | முதல் பரிசு | சொன்னால்தான் காதலா |
| 7 | | இரண்டாம் பரிசு | பூவெல்லாம் உன் வாசம் |
| 1 | சிறந்த நடிகர் | சூர்யா | (நந்தா) |
| 2 | சிறந்த நடிகை | சினேகா | (விரும்புகிறேன் / ஆனந்தம் / புன்னகை தேசம்) |
| 3 | சிறந்த நடிகர் | சிறப்புப் பரிசு | அஜீத் (பூவெல்லாம் உன் வாசம்) |
| 4 | சிறந்த நடிகை | சிறப்புப் பரிசு | சுவலெட்சுமி (ஜமீலா) |
| 5 | சிறந்த வில்லன் நடிகர் | அலெக்ஸ் | (மிட்டா மிராசு) |
| 6 | சிறந்த நகைச்சுவை நடிகர் | வடிவேலு | (தவசி) |
| 7 | சிறந்த இயக்குநர் | சுசி கணேசன் | (விரும்புகிறேன்) |
| 8 | சிறந்த கதையாசிரியர் | சாரா அபுபக்கர் | (ஜமீலா) |
| 9 | சிறந்த உரையாடலாசிரியர் | ஷாஜகான் | (புன்னகை தேசம்) |
| 10 | சிறந்த இசையமைப்பாளர் | வித்யாசாகர் | (தில் / தவசி / பூவெல்லாம் உன் வாசம்) |
| 11 | சிறந்த பாடலாசிரியர் | சினேகன் | (பாண்டவர் பூமி) |
| 12 | சிறந்த பின்னணிப் பாடகர் | உன்னிகிருஷ்ணன் | (தில்) |
| 13 | சிறந்த பின்னணிப் பாடகி | சுஜாதா | (தில்) |
| 14 | சிறந்த ஒளிப்பதிவாளர் | ரத்னவேலு | (நந்தா) |
| 15 | சிறந்த ஒலிப்பதிவாளர் | சத்யா | (சாக்லெட்) |

| | | | |
|---|---|---|---|
| 16 | சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) | காசி விசுவநாதன் | (ஆளவந்தான்) |
| 17 | சிறந்த ஆர்ட் டைரக்டர் | பிரபாகரன் | (பூவெல்லாம் உன் வாசம்) |
| 18 | சிறந்த சண்டைப் பயிற்சியாளர் | சூப்பர் சுப்பராயன் | (தவசி / மிட்டா மிராசு) |
| 19 | சிறந்த நடன ஆசிரியர் | சின்னி பிரகாஷ் | (தவசி) |
| 20 | சிறந்த ஒப்பனைக் கலைஞர் | நாகேஸ்வர ராவ் | (தில்) |
| 21 | சிறந்த தையற்கலைஞர் | சாய் | (பூவெல்லாம் உன் வாசம் / தவசி) |
| 22 | சிறந்த குழந்தை நட்சத்திரம் | டி.ஆர்.குறளரசன் | (சொன்னால்தான் காதலா) |
| 23 | சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) | சாய் ரவி | (தில்) |
| 24 | சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) | ஸ்ரீஜா | (தில்) |

## 2001–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் (முதல் தடவையாக)

| | | |
|---|---|---|
| 1 | சிறந்த குணச்சித்திர நடிகர் | ராஜ்கிரண் (பாண்டவர் பூமி / நந்தா) |
| 2 | சிறந்த குணச்சித்திர நடிகை | ஈஸ்வரி ராவ் (விரும்புகிறேன்) |
| 3 | சிறந்த நகைச்சுவை நடிகை | கோவை சரளா (பூவெல்லாம் உன் வாசம்) |

## 2001–2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

| | | |
|---|---|---|
| 1 | சிறந்த இயக்குநர் | சம்பத்குமார் (பயணம்) |
| 2 | சிறந்த ஒளிப்பதிவாளர் | பிரேம்குமார் (பரமபதம்) |
| 3 | சிறந்த ஒலிப்பதிவாளர் | ஜெகன் (தாத்தா) |
| 4 | சிறந்த படத் தொகுப்பாளர் | பாலாஜி (சுவடுகள்) |
| 5 | சிறந்த படம் பதனிடுபவர் | சேதுரகுராமன் (பரமபதம்) |

## கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் – 2001

| | | |
|---|---|---|
| 1 | அறிஞர் அண்ணா விருது | திரு. பாரதிராஜா |
| 2 | கலைவாணர் விருது | திருமதி. ராஜ சுலோசனா |
| 3 | ராஜா சாண்டோ விருது | திரு. கே. பாலாஜி |
| 4 | எம்.ஜி.ஆர். விருது | திருமதி. பி.எஸ். சரோஜா |
| 5 | கவிஞர் கண்ணதாசன் விருது | திருமதி. வாணிஸ்ரீ |
| 6 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது | திரு. ரவிச்சந்திரன் (நடிகர்) |
| 7 | தியாகராஜ பாகவதர் விருது | திருமதி. வைஜயந்திமாலா |

# 2002–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த படம் | முதல் பரிசு | ரமணா |
| 2 | சிறந்த படம் | இரண்டாம் பரிசு | கன்னத்தில் முத்தமிட்டால் |
| 3 | சிறந்த படம் | மூன்றாம் பரிசு | உன்னை நினைத்து |
| 4 | சிறந்த படம் | சிறப்புப் பரிசு | கிங் |
| 5 | பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம் | சிறப்புப் பரிசு | குருவம்மா |

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த நடிகர் | மாதவன் | (ரன் / அன்பே சிவம் / கன்னத்தில் முத்தமிட்டால்) |
| 2 | சிறந்த நடிகை | மீனா | (இவன்) |
| 3 | சிறந்த நடிகர் | சிறப்புப் பரிசு | பிரபு (சார்லி சாப்ளின்) |
| 4 | சிறந்த நடிகை | சிறப்புப் பரிசு | நந்திதா தாஸ் (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| 5 | சிறந்த வில்லன் நடிகர் | நாசர் | (தமிழ்) |
| 6 | சிறந்த நகைச்சுவை நடிகர் | விவேக் | (ரன்) |
| 7 | சிறந்த இயக்குநர் | மணிரத்னம் | (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| 8 | சிறந்த கதையாசிரியர் | சுசி கணேசன் | (பைவ் ஸ்டார்) |
| 9 | சிறந்த உரையாடலாசிரியர் | ஏ.ஆர்.முருகதாஸ் | (ரமணா) |
| 10 | சிறந்த இசையமைப்பாளர் | சிற்பி | (உன்னை நினைத்து) |
| 11 | சிறந்த பாடலாசிரியர் | ரவிசங்கர் | (உன்னை நினைத்து / வருஷமெல்லாம் வசந்தம்) |
| 12 | சிறந்த பின்னணிப் பாடகர் | உன்னிமேனன் | (உன்னை நினைத்து / வருஷமெல்லாம் வசந்தம்) |
| 13 | சிறந்த பின்னணிப் பாடகி | சின்மயி | (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| 14 | சிறந்த ஒளிப்பதிவாளர் | அர்ஜுன் ஜெனா | (காதல் வைரஸ்) |
| 15 | சிறந்த ஒலிப்பதிவாளர் | கணேசன் | (ரமணா) |
| 16 | சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) | வி.டி. விஜயன் | (ரன்) |
| 17 | சிறந்த ஆர்ட் டைரக்டர் | சாபு சிரில் | (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| 18 | சிறந்த சண்டைப் பயிற்சியாளர் | ஜாக்குவார் தங்கம் | (பகவதி) |

| | | | |
|---|---|---|---|
| 19 | சிறந்த நடன ஆசிரியர் | தினேஷ் | (கிங்) |
| 20 | சிறந்த ஒப்பனைக் கலைஞர் | வி.பி. ராஜன் | (அன்பே சிவம்) |
| 21 | சிறந்த தையற்கலைஞர் | எஸ். ராஜேந்திரன் | (அன்பே சிவம்) |
| 22 | சிறந்த குழந்தை நட்சத்திரம் | கீர்த்தனா,பி.எஸ். | (கன்னத்தில் முத்தமிட்டால்) |
| 23 | சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (ஆண்) | முரளிகுமார் | (ரன்) |
| 24 | சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (பெண்) | அனுராதா | (ரோஜாக் கூட்டம்) |

## 2002–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் (முதல் தடவையாக)

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த குணச்சித்திர நடிகர் | ஜனகராஜ் | (கிங்) |
| 2 | சிறந்த குணச்சித்திர நடிகை | அனுஹாசன் | (ரன்) |

## 2002–2003ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த இயக்குநர் | ஜெ. நந்தினி | (ஓட்டம்) |
| 2 | சிறந்த ஒளிப்பதிவாளர் | பிரபாகர் | (பின்குறிப்பு) |
| 3 | சிறந்த ஒலிப்பதிவாளர் | அன்பரசு | (சித்தார்த்) |
| 4 | சிறந்த படத் தொகுப்பாளர் | ராஜேஸ்வரி | (ஓட்டம்) |
| 5 | சிறந்த படம் பதனிடுபவர் | எஸ். சுரேஷ் | (பின்குறிப்பு) |

## கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் – 2002

| | | |
|---|---|---|
| 1 | அறிஞர் அண்ணா விருது | செல்வி ஜமுனா ராணி |
| 2 | கலைவாணர் விருது | திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ் |
| 3 | ராஜா சாண்டோ விருது | திரு. ஏ.வி.எம். சரவணன் |
| 4 | எம்.ஜி.ஆர். விருது | திருமதி. ஈ.வி.சரோஜா |
| 5 | கவிஞர் கண்ணதாசன் விருது | திரு. எம்.எஸ். விஸ்வநாதன் |
| 6 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது | திருமதி. எம். சரோஜா |
| 7 | தியாகராஜ பாகவதர் விருது | திருமதி. ஜி. சகுந்தலா |

* * *



# தமிழகத்தில் வறட்சி நிலையை ஆராய மத்தியக் குழுவை உடனடியாக அனுப்ப வேண்டும்

– மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை

தமிழ்நாட்டில் செயல்படுத்த வேண்டிய பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16.9.2004 அன்று புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அப்போது தமிழக நலன்கள் தொடர்பான வளர்ச்சிப்பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்த விரிவான ஓர் அறிக்கையையும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் நிலவிவரும் கடுமையான வறட்சி நிலையை பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இது தொடர்பாக கடந்த 28.8.2004 அன்று தமிழக அரசின் சார்பில் வறட்சி நிலைமை குறித்து மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கை குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் நிவாரணத் தொகை மற்றும் உதவிகளை தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்காக, தமிழ்நாட்டில் நிலவும் வறட்சியான சூழ்நிலை குறித்து ஆய்வு செய்து அது தொடர்பான

அறிக்கையை மத்திய அரசுக்கு வழங்குவதற்காக ஒரு மத்தியக் குழுவை அமைத்து, அதனை தமிழ்நாட்டிற்கு அனுப்பி ஆய்வு செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழகத்தில் நிலவும் வறட்சி சூழ்நிலை குறித்து ஆராய்வதற்காக மத்தியக்குழு விரைவில் உருவாக்கப்படும் என்றும் விரைவில் அக்குழு தமிழ்நாட்டில் ஆய்வுகள் மேற்கொண்டு அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு வறட்சி நிலவும் மாநிலங்களுக்கு வழங்கும் நிதியுதவி மற்றும் நிவாரணத்தொகை வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு அதற்குரிய பங்கான நீரை கர்நாடக அரசு திறந்துவிடாமல் இருந்துவரும் சூழ்நிலையால் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கடுமையான சூழலுக்கு ஆளாகியுள்ள நிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

கடந்த 2 ஆண்டுகளாக ஒருபோகம்கூட விளைச்சலை செய்ய இயலாத நிலையில் மிகவும் மோசமான நிலைக்கு காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தள்ளப்பட்டு அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து பிரதமரின் சிறப்பு கவனத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். நடப்பாண்டிலும் விவசாயிகள் சம்பா சாகுபடியைச் செய்ய இயலாத நிலையில் உள்ளனர். தற்போது கையிருப்பில் உள்ள நீரின் அளவைப் பொறுத்து விவசாயிகள் சம்பா சாகுபடியைத் தொடங்கியுள்ளனர். சம்பா சாகுபடியின் அறுவடையானது 2005 ஜனவரியில்தான் நடைபெறும். கர்நாடகாவில் தற்போது 97.38 டி.எம்.சி. அடி அளவுக்குத் தண்ணீர் கையிருப்பில் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவு வெறும் 43 டி.எம்.சி. அடிதான் உள்ளது.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் உத்தரவின்படி மேட்டூர் அணைக்கு கர்நாடக அரசு தன்னுடைய அணையில் தேக்கி வைத்துள்ள நீரிலிருந்து விடுவிக்க வேண்டிய 35.36 டி.எம்.சி. நீரைத் திறந்துவிட வேண்டும். காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் உத்தரவின்படி கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய அதற்குரிய பங்கை உடனடியாக விடுவிக்காவிட்டால் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் மோசமான நிலையை எட்டக்கூடும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தார்கள்.

சம்பா சாகுபடியானது கடந்த 2 ஆண்டுகளில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. நடப்பாண்டு சம்பா சாகுடியானது தற்போதுதான் தொடங்கியுள்ளது. அதனை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். காவிரி நதிநீர் ஆணையத்தை விரைவில் கூட்டி தமிழ்நாட்டிற்கு காவிரி நதிநீரில் உள்ள உரிய பங்கை கர்நாடக அரசு உடனடியாகத் திறந்துவிடத்தேவையான உத்தரவுகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளை தடுத்து நிறுத்தும் வண்ணம் கர்நாடக அரசு எடுத்துவரும் முயற்சிகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்போது காவிரி நடுவர் மன்றம் தன்னுடைய இறுதி உத்தரவை வழங்கக்கூடிய இறுதிக்கட்ட நிலையில் உள்ளது குறித்தும் நினைவூட்டினார்கள். ஏற்கெனவே காவிரி நதிநீர் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு 14 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் தற்போது அந்த நடுவர் மன்றம் தன்னுடைய இறுதி உத்தரவை வழங்கக்கூடிய சூழ்நிலையில் இதுபோன்ற தவறான முயற்சிகளுக்கு வழி ஏற்படுத்தித் தந்துவிடக்கூடாது என்று பிரதமரிடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்மொழியின் தனித்தன்மையையும் அதனுடைய உயர்ந்தபட்ச இலக்கியச் சிறப்பையும் பிரதமரிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். ஏற்கெனவே உயர் தனிச் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ள சமஸ்கிருதம், பெர்சியன் மற்றும் அராபிக் ஆகிய மொழிகளை ஒத்து தமிழ் மொழியையும் உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 8–ஆவது அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மற்றும் பிற மொழிகளுக்கு இந்திய அரசின் ஆட்சிமொழிக்கான அந்தஸ்தை வழங்கி அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

திருக்குறளின் இலக்கிய நடையின் சிறப்பு மற்றும் அதில் அடங்கியுள்ள கருத்துகள், நீதிபோதனைகள் மற்றும் பன்னாட்டு அளவிலான இலக்கியத்தில் அதற்கென்று உள்ள தனித்தன்மைகள் குறித்தும் பிரதமரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும், முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்றும் அப்போது வேண்டுகோள் விடுத்தார்கள்.

பொடா சட்டத்தைத் திரும்பப்பெற மத்திய அரசு திட்டமிட்டிருப்பதன் மூலம் மாநில அரசுகள் தீவிரவாதத்தை ஒருங்கிணைந்த வகையில் தடுக்கும் அதிகாரங்களை செயலிழக்கச் செய்வதாக அமைந்துவிடும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். பொடா சட்டத்தை திரும்பப்பெறும் எந்த ஒரு முயற்சியும் தீவிரவாத மற்றும் பயங்கரவாத அடிப்படை சக்திகளால் பல்வேறு மாநில அரசுகளுக்கு உருவாகியுள்ள ஆபத்துக்களைத் தடுப்பதற்குரிய ஒரு வலிமையான அமைப்பை இல்லாமல் செய்வதற்கு ஏதுவாகிவிடும் என்று தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் பிரதமரிடம் கோரிக்கை ஒன்றை வைத்தார்கள். அதன்படி பொடா சட்டம் 2002ஐ திரும்பப் பெறும் மத்திய அரசின் முடிவையும், அச்சட்டத்தைக் கைவிடுவதையும் உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இந்தியக் கடற்பகுதிகளில் தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை கடற்படையால் மிகவும் அதிக அளவில் தாக்குதலுக்கு உள்ளாகும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் கச்சத்தீவை நீண்டகாலக் குத்தகைக்கு எடுப்பது ஒன்றே நிரந்தரத் தீர்வாக அமையும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் எடுத்துக் கூறினார்கள்.

பொதுவிநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், நதிகளை இணைப்பது, குறிப்பாக தீபகற்ப நதிகளின் "தொகுப்பை" உருவாக்குவது.மேலும் உள்ளாட்சி அமைப்புகளில் ஈரடுக்கு அமைப்பாக மாற்ற சட்டத்திருத்தம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியில் அமைந்துள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையை மறுசீரமைப்பு செய்வது குறித்தும் அப்போது மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

*"திருக்குறளின் இலக்கிய நடையின் சிறப்பு மற்றும் அதில் அடங்கியுள்ள கருத்துகள், நீதிபோதனைகள் மற்றும் பன்னாட்டு அளவிலான இலக்கியத்தில் அதற்கென்று உள்ள தனித்தன்மைகள் குறித்தும் பிரதமரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும், முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்றும் அப்போது வேண்டுகோள் விடுத்தார்கள்."*

தமிழகத்தை வளர்ச்சி பெற்ற மாநிலமாக மாற்றுவதற்காகச் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களான சேது சமுத்திரக் கால்வாய் திட்டம், குளச்சல் துறைமுக வளர்ச்சித் திட்டம், சென்னையில் புதிய பன்னாட்டு விமான நிலையம் மற்றும் எரிவாயுத் தொகுப்பைத் தமிழகத்தில் அமைப்பதற்கு ஏதுவாக சென்னையில் திரவ நிலையில் உள்ள எரிவாயு முனையம் ஒன்றை உருவாக்குவது ஆகியவை குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் சென்னை மாநகரில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக மாநில அரசின் கீழ், நாள் ஒன்றுக்கு, 300 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்து வதற்குத் தேவையான நிதியுதவியைத் தமிழக அரசுக்கு மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள சிறு குளங்கள் மற்றும் ஏரிகளைப் புனரமைப்பதற்காக ஒருங்கிணைந்த நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் மற்றும் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதற்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்பு ஆகிய திட்டங்களுக்கு மத்திய அரசு தேவையான நிதியுதவியைச் செய்துதர வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தினார்கள். ★

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் ஆய்வுக் கூட்டம்

**ஆ**திதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை ஆய்வு செய்ய ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களால் 04.10.2004 அன்று மேற்குறிப்பிட்ட கூட்டம் நடத்தப்பட்டது. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு. பாண்டுரங்கன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, தாட்கோ தலைவர் டாக்டர் வி. சரோஜா, மற்றும் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களும், அவரவர் துறை அதிகாரிகளுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.எம்.அபுல் ஹசன், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். விவாதத்தை மேலாண்மை இயக்குநர் தொடங்கி வைத்தார். தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கு அவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக நிதியுதவி அளித்து செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றிய தொகுப்பை அளித்தார்.

நிலம் வாங்கும் திட்டம், சுயஉதவிக் குழுக்களுக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கான நிதியுதவி, இளைஞர்களுக்கான தொழிற்கல்விப் பயிற்சி, துப்புரவுத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டம், கறவை மாடுகள் அளிப்பது, ஆடு வளர்ப்பது போன்றவற்றிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கு கடன் உதவி செய்தல் ஆகியவை தாட்கோவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களாகும். இத்திட்டங்களின் நோக்கங்கள் மற்றும் இவற்றைச் செயல்படுத்துவதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் விரிவாகக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் சிறப்பானக் கருத்துகளை எடுத்துக்கூறி வங்கிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கடனுதவி அளிப்பதில் தாராளப் போக்கைக் கடைபிடிக்க வேண்டும் என்றார். மேலும், நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் நிலம் தெரிவு செய்யும்பொழுது தொலை உணர்வு தொழில்நுட்ப வரைப்படம் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும்



என்றும் தெரிவித்தார். மாவட்ட அளவில் அமைக்கப்படும் குழுக்களில் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமிப்பதினால் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டெனில் அதனையும் ஆராய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

முடிவில், கூடுதல் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார் ❖

# குற்றம் இல்லா சமூகமும் அச்சமில்லா சுதந்திரமான வாழ்வுமே அமைதிக்கான அடிப்படைக் கூறுகளாகும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**




மாண்புமிகு தமிழக அமைச்சர்களே!

உள்துறை செயலாளர் திருமதி ஷீலா ராணி சுங்கத் அவர்களே!

தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு.ஐ.கே.கோவிந்த் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் (பயிற்சி) திரு.எஸ்.ரமணி அவர்களே!

இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இக்கருத்தரங்கில் பங்கேற்க வருகை தந்திருக்கும் பெரியோர்களே!

தமிழக அரசின் அதிகாரிகளே!

சீர்சால் விருந்தினர்களே! பெருமக்களே!

தமிழ்நாடு காவல்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, "இந்தியாவில் பயங்கரவாதம் உருவெடுக்கும் முறைகளும், காவல்துறையின் நடவடிக்கைகளும்'' எனும் தேசிய அளவிலான இக்கருத்தரங்கத்தை இன்று தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். காவலர் பயிற்சிக் கல்லூரியின் இந்த முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். அண்மையில், 10.8.04 அன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றிய போது "பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் மற்றும் அடிப்படை மதவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் எந்தவிதமான சுணக்கத்தையும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது" என்று நான் தெரிவித்திருந்தேன். இம்மாநிலத்தில் பயங்கரவாதக் கும்பல்களும் அடிப்படை மதவாத சக்திகளும் ஒடுக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாட்டில் மட்டுமின்றி நாடு முழுவதும் பயங்கரவாதம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்திற்கு ஒத்திசைவான முறையில் இந்தத் தேசியக் கருத்தரங்கம் இன்று நடத்தப்படுகிறது.


ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர், 2003–ஆம் ஆண்டு ஜனவரியில் இதே அரங்கில் "குற்றத் தடுப்பு நிருவாகம் – ஒரு பல்முனை அணுகுமுறை'' என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கை நான் தொடங்கி வைத்து உரையாற்றும்போது, "இன்றைய உலகம் எங்கணும் வியாபித்திருக்கிற வன்முறை, பயங்கரவாதம் மற்றும் குற்ற நடவடிக்கைகளால் சீர்குலைந்து காணப்படுகிறது. தொடர் குண்டு வெடிப்புச்

சம்பவங்கள், திட்டமிடப்பட்ட வன்முறைச் செயல்கள் ஆகியவை, மூன்றாம் உலக நாடுகள் மட்டுமே தனியே நின்று சமாளிக்க வேண்டிய ஒரு பிரச்சினை அல்ல; வன்முறை இன்று உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்து தொற்று நோய்க்கிணையாக பரவி வருகிறது'' என்று குறிப்பிட்டேன். பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தவர்களை மீட்கும் போராட்டத்தில் தெற்கு ரஷ்யாவிலுள்ள பள்ளி ஒன்றில் 350க்கும் மேற்பட்ட அப்பாவி பள்ளிச் சிறார்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பயங்கரவாதிகளால், பகிரங்கமாகக் கொடூரமான வகையில் 'நேபாள தேசத்தைச் சார்ந்த 12 நபர்கள்' தலை துண்டித்துக் கொல்லப்பட்ட கொடுமை ஆகியவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில், 2003–ஆம் ஆண்டில், ஜம்மு – காஷ்மீரத்தில் மட்டுமே பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் காரணமாக, பொதுமக்கள் 658 நபர்கள் கொல்லப்பட்டனர் என்று "சவுத் ஏசியா டெரரிசம் போர்டல்'' என்ற பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது. மேற்சொன்ன புள்ளிவிவரங்கள் உள்ளபடியே மிகுந்த வேதனையைத் தருவதோடு கடுமையான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்துகின்றன.

உலகமயமாக்கல் இன்றைக்கு உலகின் எந்த ஒரு முனையுடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுத்து உள்ளது. தகவல் தொழில் நுட்பமும், தகவல் தொடர்பு தொழில் நுட்பமும், அசுர வேகத்தில் முன்னேறி வருகின்றன. இதனால், உலகின் ஓர்முனையிலிருந்து தொலை தூரத்திலுள்ள மறுமுனையுடன் நொடிப்பொழுதில் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனால், உலக மயமாக்கலுக்காக மனிதன் மிக்வும் அதிக விலை கொடுத்துள்ளான். குற்றங்கள் மற்றும் குற்றத் தன்மைகளின் எல்லைகள் விரிவடைந்து திட்டமிட்ட குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்கள், அடிப்படை மதவாதம் மற்றும் பயங்கரவாதச் செயல்களுக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது. செல்லிட தொலைபேசி இணைப்புகள், இணைய தளத் தொடர்புகள் போன்ற உலகளாவிய தொர்டர்பு கட்டமைப்புகளின் உதவியுடன், இந்த நவீன காலத்தில் நடைபெறுகின்ற பய்ங்கரவாதச் சம்பவங்கள், வெட்ட வெட்ட வளருகின்ற பல தலை நாகம் போன்று ஒழிக்க முடியாத அளவிற்குப் பல்கி பெருகி வருகின்றன. நவீன கால பயங்கரவாத செயல்கள் பலமுகங்களுடனும், பல்வேறு அமைப்புகளின் ஆதரவுடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. போதைப் பொருள் சார்ந்த பயங்கரவாதம் வளம்கொழிக்கும் ஆயுதக் கடத்தலுடன் இணைந்து நிகழ்த்தப்படுகிறது. சட்டப்படிக்கான வணிக நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சமய அறக் கட்டளைகள் பல, பின்னணியில் நடைபெறும் வஞ்சக பயங்கரவாதச் செயல்களை மறைக்கும் முகப்புகளாகச் செயல் படுகின்றன. மின்னணு முறையிலான வங்கி நடவடிக்கைகள் பயங்கரவாத நடவடிக்கை களுக்கு நிதியுதவி செய்யும் பணச்சலவை நடவடிக்கைக்கு நல்லதொரு வாய்ப்பாக உள்ளன. நவீன கால பயங்கரவாதிகள், கடவுச்சீட்டு மற்றும் விசா கட்டுப்பாடுகளைக் கேலிக் கூத்தாக்கிடும் விதத்தில் பன்னாட்டு எல்லைகளைப் பச்சோந்திகள் நிறம்மாற்றி கொள்வது போல, தங்களை மாற்றிக் கொண்டு எளிதில் கடந்து செல்லும் திறமைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். முன்னாள் பாரத பிரதமரைக் கொலை செய்தவர்கள் நம்முடைய எல்லைகள் மற்றும் சுங்க அரண்களை மட்டுமின்றி மிக முக்கியப் பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு வளையத்தையும் எளிதாக ஊடுருவ இயன்றது, நவீன கால பயங்கரவாதிகளின் அசாதாரண, அதிவேக செயல்பாட்டு வீச்சை நமக்குப் புலப்படுத்துகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் முற்றிலும் புதியதொரு பரிமாணமாக அரசு ஆதரவு பயங்கரவாதம், பாகிஸ்தானுடனான நம்முடைய பிரச்சினைகளோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் நிலவுகிற இடைவிடாத பயங்கரவாத நடவடிக்கை, நமது பாராளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல் மற்றும் குஜராத் மாநிலத்திலுள்ள அக்ஷர்தம் கோவில் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகியவை இந்தியாவில் பயங்கரவாதிகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளதையே காட்டுகின்றன. பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் தங்குவதற்குப் புகலிடம் அளிப்பது, நிதி மற்றும் ஆயுத உதவிகள் வழங்குவது, பயிற்சி முகாம்கள் அமைப்பதற்கு இடம் வழங்குவது ஆகிய செயல்கள் பயங்கரவாதத்திற்கு எல்லை தாண்டிய தொடர்புகள் இருப்பதையே காட்டுகின்றன. ஜெய்ஷ் –இ– முகமது அல்லது லஷ்கர்–இ–தொய்பாவைச் சேர்ந்த ஜிஹாதிகளின் மதவாத பயங்கரவாதத்திற்கும் பான்–இஸ்லாமிக் உம்மா(சமூகம்) குழுக்களுடனும், மத்தியக் கிழக்கு நாடுகளிலிருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகளான அல்கொய்தா மற்றும் ஹமாஸ் ஆகியவற்றுடன் தொடர்பு உள்ளது.

நம்முடைய அமைதியைச் சீர்குலைக்க முயலும் பயங்கரவாத சக்திகளும் சீர் குலைவு சக்திகளும் இரும்புகரம் கொண்டு ஒடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய உறுதியான நிலைப்பாடாகும். நாம் மென்மைப் போக்கைக் கடைபிடித்துப் பயங்கர வாதத்தைக் காலூன்ற அனுமதித்தால் பின்னர் அதனை ஒடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்ற என்னுடைய திடமான நம்பிக்கையே, என்னுடைய இந்த உறுதியான நிலைப் பாட்டிற்குக் காரணமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக ஜம்மு – காஷ்மீர், பஞ்சாப் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பயங்கரவாதிகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகளில் நாம் தொடர்ந்து கவனம்



செலுத்துவதானது, நாம் விரும்புகிற துரிதப் பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். பயங்கரவாத சக்திகளுக்கு ஒருபோதும் இடம்கொடாது அவர்களை ஒடுக்குவதில் உறுதியுடன் இருப்பது நல்லது. சில அரசியல் கட்சிகள், தமது குறுகிய கால அரசியல் ஆதாயத்திற்காக, நாம் விரும்புகின்ற நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு இவர்களை ஆதரிக்கின்றன.

பயங்கரவாதத்தையும், அது உருவாக்கும் தீயசக்திகளையும் ஒடுக்குவதில் நான் மிக உறுதியாக இருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். பயங்கரவாதக் குழுக்களும் அடிப்படை மதவாத சக்திகளும் என்னுடைய ஆட்சியில் அடக்கப்பட்டு ஒரு கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு, 1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழும் 2002 ஆம் ஆண்டு "பொடா" சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மீட்சிப்படை, தமிழ் தேசிய விடுதலைப்படை போன்று ஏனைய தீவிரவாத இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தருவதாகத் திட்டவட்டமான உளவுத்தகவல் கிடைத்துள்ளது. எனவே, இந்த இயக்கங்கள், 1908 ஆம் ஆண்டு குற்றவியல் (திருத்தச்) சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டன. மத்திய அரசும், மாநில அரசின் பரிந்துரையின் பேரில், இந்த இயக்கங்களை 2002 ஆம் ஆண்டு "பொடா" சட்டத்தின் கீழ் தடை செய்துள்ளது. விடுதலைப்புலிகள், இகழார்ந்த சந்தேகத்திற்கிடமான ஒரு வஞ்சக அமைப்பாகும். அவர்கள், பலமுறை ஸ்ரீலங்காவில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளை நிராகரித்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கம், ஸ்ரீலங்காவிற்குள் மீண்டும் கொலைச் செயல்களில் ஈடுபட்டிருப்பதிலிருந்து இது தெளிவாகிறது. விடுதலைப்புலிகள் இயக்கம், பன்னாட்டுக் கடல்பரப்பில் அனுமதியற்ற கப்பல் போக்குவரத்தை நடத்தி யுள்ளதுடன், மன்னார் கடற்கரையில் பன்னாட்டுக் கடல் எல்லை தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறி இந்திய மீனவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகள் போன்ற மிகவும் பயங்கரவாத இயக்கம் பங்கு பெறுவதால் இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு, குறிப்பாக, தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு ஊறுவிளையும் என்பதால் தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே படகுப் போக்குவரத்துத் தொடங்குவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தேன். அப்படி படகுப் போக்குவரத்து நடத்தினால், இது கடுமையான பாதுகாப்பு அபாயத்தை ஏற்படுத்துவதுடன், போதைப் பொருள் கடத்தலுக்கும், பயங்கரவாதிகள், புகலிடம் தேடுவோர் ஆகியோர் ஊடுருவதற்கும் வழிவகுக்கும். இவ்வாறு என் உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாது, ஒவ்வொரு நிலையிலும் விடுதலைப்புலிகள் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டைப் பகிரங்கமாகவே எடுத்து வந்துள்ளேன்.

தமிழ்நாட்டிலுள்ள கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்படும் மக்கள் யுத்தக்குழு என்றழைக்கப்படும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) குற்றம் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளின் வரலாறு நமக்கு நன்கு தெரியும்.

ஆந்திரப்பிரதேச அரசு, தனது கொள்கையை மாற்றிக் கொண்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) (மக்கள் யுத்தக் குழு) மீதான தடையை 2004 ஜூலைக்குப் பிறகு நீட்டிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக, மக்கள் யுத்தக் குழுவினரும், அவர்களுடைய ஆதரவாளர்களும் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவக்கூடும். எனவேதான், இந்திய கம்யூனிஸ்டு கட்சியையும் (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) (மக்கள் யுத்தக்குழு) அதன் முன்னணி அமைப்புகளையும்1908ஆம் ஆண்டு குற்றவியல் (திருத்தச்)சட்டத்தின் கீழ் சட்ட விரோத அமைப்புகளென நான் அறிவித்துள்ளேன்.

பயங்கரவாதத்திற்குப் பல பரிமாணங்கள் இருப்பதாலும் அதற்குப் பலர் உதவி செய்வதாலும், உலகம் முழுவதும் அவர்கள், அதன் நடவடிக்கைகள் பரவியுள்ளதாலும் பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டுமாயின் உளவுத் துறையை வலுப்படுத்தி, அரசியல் அமைதியின்மைக்குக் காரணமான அடிப்படைக் குறைகளைப் போக்கும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது பாதுகாப்பு குறித்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது போன்று பல்வேறு வழிகளிலும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொடிய வறுமை, ஊரகக் கடன், வேலை வாய்ப்பின்மை, சுரண்டல் போன்ற சில காரணங்களினால் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்கும் வறிய பிரிவினர் தீவிரவாதப் பிரச்சாரத்திற்கு, குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (மக்கள் யுத்தக் குழு) போன்ற பிரிவுகளின் தீவிரவாதப் பிரச்சாரத்திற்கு எளிதில் இரையாகி விடுகின்றனர். மாநிலத்தில் சீர்குலைவை ஏற்படுத்தி பயங்கரவாதத்தை வளர்ப்பதற்கு ஏற்ற நாற்றங்கால்களாக இப்பிரிவைக் கருதி, வெளிநாட்டு அமைப்புகள் இவற்றுக்கு நிதியுதவி அளித்து வருவதற்கான ஆதாரம் உள்ளது. நாம் தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டுமானால் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவேண்டும். இது முழுக்க முழுக்க காவல்துறையினரின் பணி என்று கருதிவிடலாகாது. பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு இளைஞர்களை ஆதாயமுள்ள வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் வாயிலாகவும் காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவை மேம்படுத்துவதன் வாயிலாகவும் இப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காண வேண்டும். பயங்கரவாதத்திற்கும் வன்முறைக்கும் இளைஞர்களை இட்டுச் செல்வதற்கு முக்கியக் காரணமாக விளங்கும் விரக்தியிலிருந்தும் பணமயக்கத்திலிருந்தும் அவர்களை விடுவிக்க இது பெரிதும் உதவும்.

இதனைக் கருத்திற்கொண்டே, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த மாவட்டங்களைச் சேர்ந்த பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு, குறிப்பாக, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தர வழிகோலும் பொருளாதார மறுமலர்ச்சித் திட்டங் களுக்கென ரூ.5 கோடி அனுமதிக்க நான் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளேன்.

2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் நிகழ்வுக்குப் பின்னர் உலக பாதுகாப்புச் சூழல் மற்றும் இந்திய உள்நாட்டுப் பாதுகாப்புச் சூழலில் பெரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிறப்புச் சூழ்நிலைகளைச் சமாளிக்கச் சிறப்புச் சட்டங்கள் தேவை என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. பழிபாவச் செயல்களில் ஈடுபடச் சிறிதும் அஞ்சாத சர்வதேச தீவிரவாத அமைப்புகளின் தூண்டுதலால் நடக்கும் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் இந்த அமைப்புகளுக்கு இடையே நடக்கும் போதைப் பொருள் கடத்தல் போன்றவை நமது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. இந்தத் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகள் கட்டவிழ்த்து விடும் சீர்குலைவு நடவடிக்கைகளிலிருந்து எந்த மாநிலத்திற்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. ''பொடா'' போன்ற சிறப்புச் சட்டங்களால் மட்டுமே அத்தகைய அமைப்புகளின் அசாதாரண செயல்களையும் செல்வாக்கையும் ஒடுக்க முடியும். “பொடா'' சட்டம் ரத்து செய்யப்பட்டதன் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிக்க மாநில அரசுக்கு இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. தீவிரவாத மற்றும் பயங்கரவாத அமைப்புகளைத் திறம்பட ஒடுக்கத் தேவையான எந்த ஒரு சிறப்புச் சட்டமும், செயலாக்க அமைப்புகளுக்கு தற்போது இல்லாமல் போய்விட்டது. கொடூர குற்றங்களைக் கையாளுவதற்குக்கூட போதுமானவையல்ல என்று பலமுறை நிரூபிக்கப்பட்ட பழைய சட்டங்களையே அவை நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியக் குற்றவியல் சட்டக் கோவையில், பயங்கரவாதிகளால் நடத்தப்படுகின்ற நாசவேலை என்பதற்கான பொருள் விளக்கம் கூட இல்லை. எனவே, பயங்கரவாத சக்திகளின் வன்முறைச் செயல்களிலிருந்து நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டுமெனில், சட்டச் செயலாக்க அமைப்புகளின் படைக்கலக் கொட்டிலில் “பொடா'' போன்ற சிறப்புச் சட்டங்கள் இருக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் எனக்கு இல்லை. அந்தச் சட்டத்தின் ரத்து, அந்தச் செயலாக்க அமைப்புகளைப் பலவீனப்படுத்தியுள்ளது. ‘பொடா’ சட்டம் ரத்து செய்யப்பட்டதை ஈடுசெய்கின்ற வகையில் தற்போதுள்ள சட்டங்களில் தேவையான விதித்துறைகள் சேர்க்கப்படும் என்ற உறுதிமொழியால் பயன் விளையப் போவதில்லை என்றே நான் கருதுகிறேன். உண்மையில் இத்தகைய நிலைப்பாடு உறுதியற்ற நிலையையும்

ஊசலாட்டத்தையுமே காட்டுகிறது. பொடா சட்டத்தை ரத்து செய்வதானது அரைகுறையாக பரிசீலிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தக் கூடியது என்ற எங்களின் நிலைப்பாட்டிற்கு அரண் சேர்ப்பதாக இந்நடவடிக்கை அமைந்துள்ளது.

இரசாயன ஆயுதங்கள் உட்பட, நவீன ரக ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் தீவிரவாதிகளின் கைவசம் இருப்பதால், நமது காவல்துறையை நவீனமயமாக்குவதில் அல்லது வலுப்படுத்துவதில் அரைகுறையான நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது. எனவே, தமிழ்நாட்டில் ரூ.8.61 கோடி செலவில் 78 வெவ்வேறு இடங்களிலுள்ள 11 சிறைச் சாலைகளை 270 நீதிமன்றங்களுடன் இணைத்து, வீடியோ கலந்துரையாடல் (Video - conferencing ) மூலமாக தொலை நீதி வழங்கும் (Teli-Justice) ஏற்பாடு ஒன்றினைத் தொடங்கி வைத்ததன் மூலம், நமது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சீர்குலைக்க பயங்கரவாத சக்திகள் செய்யும் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் காவல்துறையை நான் வலுப்படுத்தியுள்ளேன். இவ்வாறாக பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம், எப்போதும் ஒரு அடி முன்னால் இருப்பதை நான் உறுதிப்படுத்தியுள்ளேன். 2002–ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்து, காவல் துறையினருக்காக ஆயுதங்கள், நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்காக ரூ.361 கோடிக்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் பயனாக, தீவிரவாதிகளுக்கு எதிரான இந்த யுத்தத்தில் காவல்துறையினருக்குப் பக்க பலமாக நவீன, தொழில்நுட்ப வசதிகள் அவர்களுக்குக் கிடைத்திடுவதை நான் உறுதி செய்துள்ளேன்.

உளவு அமைப்பை வலுப்படுத்த வேண்டியது கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு முக்கிய விஷயமாகும். பல்வேறு பயங்கரவாத வன்முறை நடவடிக்கைகளை அலசி ஆராய்ந்ததில் பெரும்பாலான நேர்வுகளில் உளவு அமைப்பின் கவனக் குறைவும் அவற்றுக்கு ஒரு காரணம் என்று தெரிய வந்துள்ளது.தங்களுடைய கொலை பாதகத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தற்கொலைப் படைகளை எளிதில் கண்டறிவது, பயங்கரவாதக் குழுக்களின் அதி தீவிர முனைப்பு, வெறியுணர்வு ஆகிய தன்மைகள், உளவு அமைப்புகளின் வேலையைச் சிக்கலாக்கியுள்ளன என்பதில் ஐயத்திற்கிடமில்லை. ஆகவே தற்போது புதிய அணுகுமுறை ஒன்று தேவைப்படுகின்றது. காவல்துறையினருக்குக் கண்காணிப்பு உபகரணங்கள், உயர் தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றை வழங்குவதோடு, பொது மக்களுக்கு உணர்வுறுத்தும் திட்டத்தைச் செயற்படுத்தி, மக்களின் பங்கேற்புடன் கூடிய கண்காணிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். மாநில மற்றும் மத்திய முகவரமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைவு இல்லாமல் அவற்றுக்கிடையே நிலவும் பனிப்போர் உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஒரு தடையாக உள்ளது. குற்றவழிகளில் ஈட்டிய பணத்தை வெள்ளையாக்கும் பணச்சலவை, அமைப்பு ரீதியான குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல் போன்றபயங்கரவாதத்தின் பன்முகத் தன்மை



பல்வேறு இடங்களைத் தளமாகக் கொண்டு இயங்கும் தீவிரவாத அமைப்புகளுக்கிடையிலான தொடர்பு (எடுத்துக்காட்டாக எல்.டி.டி.ஈ. உல்பா (LTTE, ULFA) ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்குமிடத்து இந்தத் தீவிரவாதக் குழுக்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய முக்கியமான பணியில் மாநில காவல்துறை, புலனாய்வுத்துறை, சுங்கத்துறை மற்றும் உள்நாட்டு வருவாய்த்துறை, போதை மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு அலுவலகம், கடலோரக் காவல்படை ஆகியவற்றோடு ரா (RAW) ஆகிய அமைப்புகளைத் தகவல் தொழில்நுட்ப அடிப் படையிலான தரவுத்தளம், தகவல் பகிர்வு ஏற்பாடு ஆகியவற்றைக் கொண்ட ஒரு நிறுவன ரீதியான அமைப்பின்கீழ் கொண்டு வருவது மிக முக்கியமாகிறது. மாநில அளவில், இந்த அமைப்பு முதலமைச்சர் தலைமையின் கீழும், மத்திய அரசு அளவில், மத்திய உள்துறை அமைச்சர் அல்லது பாதுகாப்பு குறித்த அமைச்சரவைக் குழுவின் தலைமையின் கீழும் செயல்பட வேண்டும்.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் நிகழ்வுக்குப் பிந்திய பாதுகாப்புச் சூழல் மாநில பாதுகாப்புக் கட்டமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டியதன் அவசியத்தை வெட்ட வெளிச்சமாக்கி இருக்கிறது. காவல் துறைகளின் செயல் திறனை உயர்த்தும் நடவடிக்கையை மேற்கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். சீர் பெருமக்கள் பாதுகாப்பு தவிர, அணுசக்தித் தளவாடங்கள், அணைகள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற மதிப்புயர் பொருளாதார அடிப்படை கட்டமைப்புகளையும் பாதுகாப்பதற்கு, சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள், இராசாயன ஆயுதங்கள் ஆகியவை தீவிரவாதிகளின் கைவசம் இருக்கும் நிலையில், வழக்கமான வெடிமருந்துகள், வெடி குண்டுகளையும் தாண்டி அத்தகைய தாக்குதல்களையும் முறியடிப்பதற்கான பயிற்சிகளையும் அவர்களுக்கு அளிக்க வேண்டும். பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்து மிரட்டும் நெருக்கடியான சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் தீவிரவாதிகளோடு சமரசப் பேச்சு வார்த்தை நடத்துதல், பேரம் பேசுதல் போன்ற உத்திகளில் மாநிலக் காவல்துறையினருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

கடத்தல், விமானக் கடத்தல், பிணையக் கைதிகளைப் பிடித்து வைத்தல் போன்ற பயங்கரவாத நடவடிக்கைகள் மூலமாக நெருக்குதல்களை ஏற்படுத்தி, அதன் மூலமாக, ஊடகங்கள் வழியாக ஆதாயம் தேடும் முயற்சிகளுக்குப் பணிந்து விடாமல் இருப்பது அவசியம் என நான் நம்புகிறேன். நெருக்குதல்களை ஏற்படுத்தினால், பயங்கர வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், சமரசம் செய்து கொள்ளவும் தயாராக இருக்கக்கூடிய மென்மையான நாடு அல்லது எளிதில் தாக்குதலுக்குள்ளாகும் நாடு இந்தியா என்ற எண்ணம் உருவாக இடமளிக்கக் கூடாது. இவற்றுக்கெல்லாம் மேலாக, எங்கு வேண்டுமானாலும் பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராடும் அரசியல் ரீதியான மனத்திண்மை மிக அவசியம்.

நமக்கு வாக்களித்து ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கும் மக்களின் அடிப்படையான மூன்று அவாக்கள், அமைதி, முன்னேற்றம், நல்ல நிருவாகம் ஆகியவைதான் என்று நான் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளேன். குற்றம் இல்லா சமூகமும், அச்சமில்லா சுதந்திரமான வாழ்வுமே அமைதிக்கான அடிப்படைக் கூறுகளாகும். தற்போது, தீவிரவாதத்தை ஒடுக்க, நாம் விரிவானத் திட்டங்களை வகுக்கவில்லையென்றால், தாமஸ் ஹோபெஸ் தன்னுடைய லெவியத்தான் என்ற நூலில் விவரித்துள்ளது போல், "கலைகள், இலக்கியங்கள், சமுதாயம் என்ற எதுவுமே இல்லாது அற்றுப்போய், மனித வாழ்க்கையே ஓயாத பயம், கொடூரமான சாவு பற்றிய அபாயம் ஆகியவற்றால் அலைக்கழிக்கப்பட்டு, ஏகாந்தமும் ஏழ்மையும் மிருகத்தன்மையும் தொல்லைகளும் மிகுந்து குறுகிப் போய்விடும் நிலைக்கு உலகம் திரும்பிவிடும்''.

பயங்கரவாதம், அதனால் காவல் துறையினர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சவால்கள் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த இக்கருத்தரங்கில் முன் வைக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், ஹோபெஸ் விளக்கியுள்ள நிலையிலிருந்து நம் சமுதாயத்தினரைப் பாதுகாப்பதற்குரிய பரிந்துரைகள் அளிக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். வன்முறை எப்போது சட்டப்படி ஏற்புடையதாகிறது என்றால், அது தீவிரவாதத்திற்கெதிரான போரில் மட்டுமே.

இறுதியாக, இன்று நாம் நிம்மதியாகத் தூங்குகிறோம் என்றால், அதற்குக் காரணம் நமக்குத் தீங்கு விளைவிப் போரிடமிருந்து நம்மைப் பாதுகாக்க காவல் துறையினர் இரவு நேரத்திலும் விழிப்புடன் இருப்பதுதான் என்பதை என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

நன்றி.

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*22.9.2004 அன்று*
*சென்னை தலைமைச் செயலகத்தில்*
*"தீவிரவாதமும் – காவல் துறை அணுகுமுறையும்"*
*என்ற கருத்தரங்கினைத்*
*தொடங்கி வைத்து*
*ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.*

# தமிழகத்தில் வறட்சி நிலையை விரிவாக ஆய்வு செய்ய மத்தியக் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தல்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 27.9.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் வறட்சி நிலையை ஆய்வு செய்வதற்காக வந்துள்ள மத்திய அமைச்சகங்களுக்கிடையேயான உயர்மட்டக் குழுவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் குறித்தும் விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து மாநில அரசு மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பியிருந்தது. அந்த விரிவான அறிக்கையில் தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.1,680 கோடி நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றும் இதில் சென்னை மாநகரில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர் கொள்வதற்கு ரூ.500 கோடி உட்பட மேற்கண்ட நிதியையும், மேலும், வேலைக்கு உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த 5.4 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்றும் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியிருந்தது.

மேலும், இந்த வறட்சி தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அக்கடிதத்தில் உடனடியாகத் தமிழ்நாட்டில் வறட்சி நிலையை ஆய்வு செய்ய தமிழகத்திற்கு மத்திய நிபுணர் குழுவை நியமனம் செய்து அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு தமிழகத்தின் வறட்சி சூழ்நிலையை ஆய்வு செய்வதற்காக உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட ஓர் ஆய்வுக் குழுவை அனுப்பியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இக்குழுவினர் 27.9.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள்.

மத்திய வேளாண்மைத் துறையின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை இணைச் செயலாளர் திரு. ஏ.கே.அகர்வால் தலைமையில் இக்குழு வருகை தந்தது. இக்குழுவில் இடம்பெற்றுள்ள மற்ற உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

மத்திய வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் கீழ் வரும் தோட்டக்கலைத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சகதேவ்சிங், மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இயக்குநர் திரு.வி.வெங்கடேசன், கோவையில் உள்ள மத்திய நீர்வள ஆணையத்தின் இயக்குநர் திரு.வி.சைதன்ய மூர்த்தி, சென்னையில் உள்ள புகையிலை மேம்பாட்டு இயக்குநரகத்தின் பொறுப்பு இயக்குநர் திரு.கே.மனோகரன், மத்திய நகர்ப்புற மேம்பாட்டு உதவி ஆலோசகர் எம். சங்கர நாராயணன், உதவி ஆலோசகர், குடிநீர் வழங்கல் துறை டாக்டர் டி. ராஜசேகர் மற்றும் மத்திய திட்டக்குழுவின் ஆராய்ச்சி அலுவலர் திரு.ஆர்.பி.மிஸ்ரா ஆகியோர்.

இக்குழுவினர் மாநில அரசின் உயர் அதிகாரிகளுடன் இணைந்து இரு குழுக்களாக மாவட்டங்களில் வறட்சி நிலையை ஆய்வு செய்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இக்குழுவிடம் கடந்த மூன்றாண்டுகளாக மாநிலத்தில் போதுமான மழையளவு இல்லாததாலும், போதுமான

மழைநீர் பெறாததாலும் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து விவரமாக எடுத்துரைத்தார்கள். கடந்த 2002–2003–ஆம் ஆண்டுகளில் மாநிலம் சந்தித்த கடுமையான வறட்சிக்குக் காரணம் போதுமான மழையளவு இன்மைதான் என்றும், நடப்பு ஆண்டில் (2004) கடந்த 1.6.2004 தொடங்கி 22.9.2004 இடையேயான காலகட்டத்தில் மழையளவு மிகவும் குறைவான அளவே பெய்து வந்துள்ளது. குறிப்பாக 9 மாவட்டங்களில் அதாவது வழக்கமாகப் பெய்யும் மழையளவை விட 20 சதவிகிதத்திற்கும் மேலாக குறைவாகவே பெய்துள்ளது. கடந்த ஒரு வார காலமாக பெய்துவரும் மழையால் நிலத்தடி நீர்மட்டம் மெச்சத்தக்க அளவில் உயர்ந்துவிடவில்லை. மேலும், மாநிலத்தில் உள்ள அணைக்கட்டுப் பகுதிகளில் விவசாயத்திற்குப் போதுமான நீர் கிடைக்கப் பெறவில்லை.


சென்னை மாநகரில் குறைந்தபட்ச குடிநீர் வழங்கலைச் செய்யும் பணிக்காக மாதந்தோறும் ரூ.27 கோடிக்கும் அதிகமாக மாநில அரசு செலவிட்டு வருகிறது. நிலத்தடி நீர்மட்டக் கையிருப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது. எனவே, சென்னை மாநகருக்கு மிக நீண்ட தொலைவில் இருந்து வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எப்போதாவது ஏற்படுகின்ற இது போன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ள தமிழக அரசுக்குத் தேவையான அதிகபட்ச நிவாரண உதவியை மத்திய அரசு தர வேண்டிய நிலையில் உள்ளது.

மாநிலத்தில் உள்ள வறட்சிச் சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு மாநில அரசு எடுத்து வந்துள்ள மற்றும் எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து நிபுணர் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

மேலும், மத்தியக் குழுவினர் மாநிலத்தில் நிலவும் வறட்சிச் சூழ்நிலையை விரிவான அளவில் ஆய்வு செய்து தமிழகத்தில் நிலவும் உண்மையான சூழ்நிலையை முழு புள்ளி விவரங்களுடன் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அப்போதுதான் தமிழகத்திற்குக் கணிசமான அளவிற்கு வறட்சியை எதிர் கொள்ளத்தேவையான நிவாரண உதவி கிடைக்கப்பெறும். எனவே, நிபுணர் குழுவினர் விரிவான அளவில் தங்களுடைய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது மாண்புமிகு தமிழக பொதுப்பணி, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், தமிழக தலைமைச் செயலாளர் பொறுப்பு வகிக்கும் நிதித்துறை முதன்மை செயலாளர் மற்றும் மேம்பாட்டு ஆணையர், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர், வேளாண்மைத்துறை செயலாளர், வருவாய்த் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

* * *



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை 23.09.2004 அன்று தலைமைச் செயலகத்தில், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் திரைப்படத் தொழிலாளர்கள் ஆகிய அனைத்துப் பிரிவுகளின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, புதிய தமிழ் திரைப்படங்களின் திருட்டு விசிடிகளைத் தயாரித்து தமிழ்த் திரைப்படத் தொழிலின் அழிவுக்குக் காரணமாக இருப்போர் மீது கடுமையாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் மற்றும் திரைப்படத் தொழில் சம்பந்தமான மேலும் பல கோரிக்கைகளும் அடங்கிய மனுவினை அளித்தனர்.



# புதிய வீராணம் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 13.10.2004

புதிய வீராணம் திட்டம் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டம் என்பது, எனது அரசின் அயராத உழைப்பாலும், குலையாத நம்பிக்கையாலும், தளராத முயற்சியாலும் இன்று நிரூபிக்கப்பட்டுவிட்டது என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், இந்த அரிய திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்! இதனைத் தடுக்கத் துடித்தவர்கள் எத்தனை பேர்! இதைப் பற்றித் தப்புப் பிரச்சாரம் செய்தவர்கள் எத்தனை பேர் என்பதை யாரும் மறந்துவிட இயலாது! "வீராணம் திட்டம் வீணான திட்டம்" என்று எள்ளி நகையாடியோர், ஏகடியம் பேசியோர், அச்சம் ஊட்டியோர், அபாயச் சங்கு ஊதியோர், நாளொரு பொய்ப் பிரச்சாரத்தால் நாட்டு மக்களைக் குழப்பி வந்தோர், "இத்திட்டம் நடக்கவே நடக்காது" என்று கொக்கரித்தோர் யார் யார் என்பதைத் தமிழகமே நன்கு அறியும்.

இந்த மக்கள் நல விரோதிகளின் விதண்டா வாதங்களைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழகத் தலைநகரத்தின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை முன்வைத்து நான் செயல்பட்டேன். அந்தத் தளராத முயற்சிக்குக் கிடைத்த தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி!

கடந்த பல ஆண்டுகளாக, குறிப்பாக, சென்ற 2 ஆண்டுகளில் சென்னைப் பெருநகரைப் பெரிதும் பாதித்துள்ள கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினையை சென்னைப் பெருநகர் வாழ் மக்கள் அனைவரும் அறிவர். அடுத்தடுத்த ஆண்டுகளில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததனால், சென்னை மாநகரில் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினை நிலவி வருகிறது. 2002 அக்டோபர் – டிசம்பரில் வடகிழக்குப் பருவ மழையும் போதிய அளவு பெய்யாததால், அந்த ஆண்டில், மாநகரின் மூன்று குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலும் மிகக் குறைவான நீர் இருப்பே இருந்தது. அதன் விளைவாக, 18.1.2003 முதல், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை அரசு அறிமுகப்படுத்த வேண்டியது ஆயிற்று.

சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும் எனில், உடனடியாகக் கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை நான் அப்போதே உணர்ந்தேன். சென்னை மாநகரின் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு தீர்வு காண்பதற்காக, கூடுதலாகத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என நான் அப்போதே முடிவு செய்தேன். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே, 2003 பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை நான் துவக்கி வைத்தேன். வீராணம் ஏரியில் தண்ணீர் இல்லை; ஆகவே, இத்திட்டத்தினால் ஒரு பயனும் விளையப் போவதில்லை என்றெல்லாம் விமர்சித்து, புதிய வீராணம் திட்டம் மேற்கொள்ளப்படுவதைப் பல எதிர்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் குறை கூறினர். சென்னைக்குத் தண்ணீர் வழங்க கூடுதலாக மேலும் ஒரு ஆதாரம் இல்லாவிட்டால், மீண்டும் ஒரு முறை வடக்கு கிழக்குப் பருவ மழை பொய்க்குமேயானால், சென்னை மாநகரில் கடும் தண்ணீர்ப் பிரச்சினை உருவெடுத்து, மாநகரை விட்டு மக்களை வெளியேற்ற வேண்டிய ஒரு அவல நிலை ஏற்படும் என அப்போதே அஞ்சினேன்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் செய்த கடும் விமர்சனங்களையும் பொருட்படுத்தாது, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு செய்தேன். அப்போது நான் எடுத்த முடிவு, மிகவும் சரியானது என்பது இப்போது நிரூபணமாகி, எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களும், குறை கூறுவோரின் ஒப்பாரிகளும் தவறு என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய வீராணம் திட்டத்தை நான் செயல்படுத்தாமல் விட்டிருந்தால், 2004–ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்களை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அந்த நிலைமையை நான் தவிர்த்து விட்டேன்.

வடகிழக்குப் பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டது என்பது 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே தெளிவாகிவிட்டது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு கடந்த 54 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, மிகவும் குறைந்து விட்டது. இதன் விளைவாக, 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே சென்னை மாநகரில் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை அறவே நிறுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு டிசம்பர் இறுதியிலேயே குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைமை முன் எப்போதும் ஏற்பட்டதில்லை. சாதாரணமாக, டிசம்பர் திங்கள் இறுதியில் மூன்று நீர்த் தேக்கங்களிலும், மேலும் சில மாதங்களுக்குக் குழாய் மூலம் தண்ணீர் வழங்கக் கூடிய அளவுக்கு நீர் இருக்கும். புதிய வீராணம் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, அதன் பயனாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, 2004ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிலவும் கடும் தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளித்த விவேகத்தை, இப்போதும் கூட எதிர்க்கட்சித் தலைவர்களும், வழக்கமாக விமர்சிக்கும் வேறு சிலரும் உணரவில்லை.

> ***"கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையிலும், நான் மிகவும் துணிச்சலோடு, 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்ததால்தான், 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. என்னுடைய அரசு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து, அதன் மூலம் 2004 ஜூன் மாதத்தில் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவர முடிந்தது".***

சென்னை மாநகரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில், ஒரு தெருகூட தவறாமல், நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட, நாள்தோறும் தவறாது லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க என்னுடைய அரசு மேற்கொண்ட அசாதாரண முயற்சிகளுக்காக, சென்னை மாநகர் வாழ் மக்கள் எனக்கும் என் தலைமையிலான இந்த அரசுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்கள். சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் அறவே வற்றிப் போனது, கிணற்று வயல்களில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து போனது, கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து போதிய கிருஷ்ணா நீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது ஆகியவற்றின் காரணமாக, மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையை சென்னை மாநகர் சந்தித்தது. ஆனால், வழங்கப்படுகின்ற தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டாலும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையை மக்கள் உணரா வண்ணம், கிடைக்கின்ற நீர் குறை சொல்ல முடியாத அளவுக்கு முறையாக பகிர்ந்து வழங்கப்படுவதை என்னுடைய அரசு உறுதி செய்தது. 2004 ஜூன் வாக்கில் சென்னை மாநகரில் இருந்து மக்களை வெளியேற்ற வேண்டியிருக்கும் என்பது தான் அன்றைக்கு இருந்த எதார்த்த நிலை. கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையிலும், நான் மிகவும் துணிச்சலோடு, 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்ததால் தான், 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. என்னுடைய அரசு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து, அதன் மூலம் 2004 ஜூன் மாதத்தில் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவர முடிந்தது. இந்த அளவு, நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டராக மேலும் உயர்த்தப்பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெரும் அளவுக்குத் தணித்தது. தண்ணீர் வழங்கல் 2004 ஜனவரியில் நாள் ஒன்றுக்கு 175 மில்லியன் லிட்டர் என்ற அளவிலிருந்து, 2004 ஜூனில் 205 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் அறவே வறண்ட கோடையிலும், தண்ணீர் வழங்கப்படும் அளவை உயர்த்திய அதிசயம் நிகழ்ந்தது என்றால், அதற்குக் காரணம் புதிய வீராணம் திட்ட குழாய்களைப் பதித்து, ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வர முடிந்ததுதான். தொலைநோக்குப் பார்வையோடு நான் புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு, அதற்கான குழாய் அமைக்கும் பணிகளையும் உடனடியாகத் தொடங்கி, ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வந்ததால்தான், தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து சென்னை மாநகர மக்களைக் காப்பாற்ற முடிந்தது.

பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகையைச் சேர்ந்த ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து, புதிய வீராணம் திட்டம் குழாய்கள் மூலம் 2004 ஜூன் மாதத்தில் கொண்டு வரப்பட்ட போதும் கூட, எதிர்க்கட்சித் தலைவர்கள் "ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் தான் வருகிறது; வீராணம் ஏரியில் தண்ணீர் எதுவும் இல்லை; ஆகவே, இந்தத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது" என்று விமர்சிக்கத் தயங்கவில்லை. அந்த அளவுக்கு இந்த எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும், என்னுடைய தலைமையிலான அரசு மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும், நியாய உணர்வு எதுவும் இன்றி விமர்சித்தார்கள். ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் கோடையில் சென்னை மாநகருக்கு வழங்கப்படும் என்றும், பருவ மழை பெய்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வந்தவுடன், அங்கிருந்து புதிய வீராணம் திட்டம் மூலமாக சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும், அப்போதே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

வீராணம் ஏரியின் நீர்ப் பிடிப்புப் பகுதியில் பெய்த தென் மேற்குப் பருவ மழை மற்றும் இந்தப் பருவத்தில் காவேரி மற்றும் கொள்ளிடம் நதிகளில் கிடைக்கப்பெற்ற நீர்வரத்து ஆகியவற்றை அடுத்து, வீராணம் ஏரி விரைவாக நிரம்பி வருகிறது. பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப்படுகையில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை நம்பியிராமல், 13.10.2004 முதல் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், முற்றிலும் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கத் தொடங்கி உள்ளது என்ற நல்ல செய்தியை, சென்னை மாநகர் வாழ் மக்களாகிய உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். வீராணம் ஏரியில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு எடுக்கப்படுகின்ற 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் முழுவதும், சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், புதிய வீராணம் திட்டம் தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும், என்னுடைய அரசுக்கு எதிராக பாரபட்சத்துடன், நியாயமற்ற முறையில் எழுப்பிய அடிப்படையற்ற விமர்சனங்கள் அனைத்தும் தவிடுபொடியாகி விட்டன!

வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் எடுப்பதால், அந்த ஏரி ஆயக்கட்டு பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் என்னுடைய அரசு உறுதி செய்து வருகிறது. கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீரே சென்னை மாநகருக்கு இந்தத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, வீராணம் ஏரி ஓர் இடைப்பட்ட நீர்த்தேக்கமாகத் தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வீராணம் ஏரி ஆயக்கட்டு பகுதியில் உள்ள விவசாயிகள், எந்த வகையிலும் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எவரும் ஒரு போதும் கூற முடியாது.

தற்போது, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் கிடைக்கிறது என்ற நற்செய்தி, சென்னை வாழ் மக்களின் மகத்தான வரவேற்பைப் பெறும். இன்றும் கூட, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு இல்லை. மேலும், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேரவில்லை. இந்தச் சூழ்நிலையில், குழாய்கள் மூலமாக தண்ணீர் வழங்குவது என்பது ஒரு தொலைதூரக் கனவாகவே இருக்க முடியும். ஆனால், திட்டமிட்டவாறு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்குகின்ற வகையில், புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதனாலேயே, குழாய்கள் மூலம் சென்னை மாநகரத்தில் தண்ணீர் வழங்குவது சாத்தியமாகி உள்ளது. 13.10.2004 பிற்பகல் முதல் சென்னை மாநகரில் குழாய்கள் மூலமாக மீண்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில், ஒரு சில நாட்களுக்கு இந்தக் குழாய்கள் வழியாக தண்ணீர் அனுப்பப்பட்டு, குழாய்கள் சுத்தம் செய்யப்படும். அதன் பிறகு, ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்குவது நிலைப்படுத்தப்படும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படும் போது, சில கடைக்கோடிப் பகுதிகளுக்குத் தண்ணீர் போய் சேராமல் போகக் கூடும். இத்தகைய பகுதிகளுக்கும், குழாய் மூலமாக தண்ணீர் வழங்கப்படுவதை நிலைப்படுத்தும் வரையில், தற்போது உள்ளவாறே லாரிகள் மூலமாக தொடர்ந்து தண்ணீர் வழங்கப்படும். இதுவன்றி சென்னைக் குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கும், சென்னை பெருநகர்

குடிநீர் வாரிய லாரிகள் மூலம் தொடர்ந்து தண்ணீர் வழங்கப்படும்.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகள் முற்றிலும் வறண்டு போய், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேராத நிலையில், சென்னை மாநகரில் குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை என்னால் தொடங்கி வைக்க முடிகிறது என்றால், அதற்குக் காரணம், நான், சென்னை மாநகர் வாழ் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்கின்ற வகையில், தொலைநோக்குப் பார்வையோடு திட்டம் தீட்டி, புதிய வீராணம் திட்டத்தை உரிய நேரத்தில் நிறைவேற்றி முடித்தது தான். எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் இந்தத் திட்டத்தின் மூலம் எந்தப் பயனும் விளையாது, அது தோல்வியில் தான் முடியும் என்று பொதுமக்களை திசை திருப்பும் வகையில், கெடுமதியோடு பரப்பி வந்த விமர்சனங்கள், புதிய வீராணம் திட்டத்தின் இந்த வெற்றியால், குப்பைத் தொட்டிக்கு அனுப்பப்பட்டு, இறுதியில் புதை குழிக்குத் தான் போய்ச் சேரும்! வீராணம் திட்டத்தின் வெற்றியால் தான், சென்னை மாநகரில் மீண்டும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை மக்கள் உணருவார்கள்.

புதிய வீராணம் திட்டம், மிகக் குறுகிய காலத்தில், சிறப்பான முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழை பொய்த்து, குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளுக்குப் போதிய நீர் வராத போதிலும் கூட, இந்தத் திட்டம், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் நம்பகமான ஒரு நீர் ஆதாரமாக அமைவதை, நான் உறுதிப்படுத்தி உள்ளேன். மக்களைப் பாதிக்கும் மாபெரும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு தீர்வுகளைச் சிந்தித்து, அவற்றில் ஒற்றைத் தீர்வை மட்டும் நம்பியிராமல், ஏற்புடைய தீர்வுகள் எல்லாவற்றிற்கும் செயல்வடிவம் தந்தால் தான், நிரந்தரத் தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும். ஆகவே தான், சென்னைப் பெருநகர் பகுதிக்கு நாள் ஒன்றுக்கு தேவைப்படுகிற 840 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க இயலும் வகையில், தற்போதைய மூன்று நீர்த்தேக்கங்கள், கிருஷ்ணா நதி நீர், கிணற்று வயல்களில் இருந்து கிடைக்கின்ற நிலத்தடி நீர், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைகளை, நான் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறேன்.

**தொலைநோக்குப் பார்வையோடும், உள்ளத்தின் உறுதிப்பாட்டோடும், மக்களிடத்தில் நான் வைத்த நம்பிக்கையும், "மக்கள் என்னிடம் வைத்த நம்பிக்கையும் எத்தகைய வெற்றியைத் தரும் என்பதற்குப் 'புதிய வீராணம்' ஒரு மகத்தான எடுத்துக்காட்டு!"** ✦

# தியாகி திருப்பூர் குமரனுக்கு நினைவு அஞ்சல் தலை



இந்தியத் திருநாட்டை அடிமைப் படுத்தி ஆட்சி நடத்திய வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தம் உயிரைத் துச்சமென நினைத்துப் போராடிய தியாகச் செம்மல்களுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர் திருப்பூர் குமரன் ஆவார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசின் சிப்பாய்கள் சூழ்ந்து நின்று தடி கொண்டு தாக்கிய போதும், கொஞ்சமும் அஞ்சாது, துணிவின் சிகரமாக நின்று தன் இன்னுயிரை ஈந்து தன் கரங்களில் இருந்த இந்திய நாட்டின் கொடியைக் காத்து, "கொடி காத்த குமரன்" என்று சரித்திரத்தில் நீங்காத இடம் பிடித்தவர் திருப்பூர் குமரன் ஆவார்.

தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் தியாகத்தைப் போற்றி கவுரவிக்கும் வகையில், அவர் உருவம் பொறித்த அஞ்சல்தலை வெளியிடப்பட வேண்டும் என்பது தமிழக மக்களின் நெடுநாள் கோரிக்கையாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில், தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவாக, அவரது நூறாவது பிறந்த நாளின் போது நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்கள். தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவாக அஞ்சல் தலை வெளியிட முடிவு செய்திருப்பதாக மத்திய அரசிடமிருந்து **22.8.2004** நாளிட்ட கடிதத்தில் மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு தியாகி திருப்பூர் குமரன் நினைவாக அவரது உருவம் பொறித்த நினைவு அஞ்சல் தலையை 4.10.2004 அன்று ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் வெளியிட்டது.

தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் தன்னிகரற்ற தியாகத்திற்கு மேலும் கவுரவம் அளித்து, அவரது புகழுக்குப் புகழ் சேர்க்கின்ற வகையில் அவரது நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பாக சிறப்புடன் நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள். விழா நடக்கும் நாள் மற்றும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

❖ ❖ ❖



# இலக்குகளை விரைவில் எய்தும் பாதையில் ஏறுநடை போடும் தமிழ்நாடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் பாலின நிகர்மை மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் பாதுகாப்புக்காக நான் ஆற்றிய பணிகளைப் பாராட்டி ஐ.நா.சபையின் அதிகாரப்பூர்வ ஆலோசனை அமைப்பான சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு எனக்கு "நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத்தாரகை விருது" (The Golden Star of Honour and Dignity Award) வழங்குகிற இந்த விழாவில் கலந்து கொள்வதை எனக்குக் கிடைத்த பெருமைக்குரிய பேறாகக் கருதுகிறேன். இந்த விருதைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று உங்கள் முன் பணிவோடு நிற்கிறேன். நான் என் உயிரினும் மேலாக நேசிக்கும் தமிழக மக்களுக்கும் இப்பரந்த பாரத தேசத்தின் மக்களுக்கும் தொண்டு செய்ய எனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பை, எனக்குக் கிடைத்ததொரு பேறாகக் கருதுகிறேன். என்னுடைய இலட்சியமே தமிழ்நாட்டைப் பொருளாதார வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் ஆகிய அனைத்து வகையிலும், குறிப்பாக, பெண்களுக்கும், சமுதாயத்தின் நலிந்த

பிரிவினருக்கும் நியாயமான வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதிலும், நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக உருவாக்குவதுதான்.

இந்த விருதோடு வாசித்தளிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தில், சமூகத்தின் நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டுக்காகவும் பாலின நிகர்மைக்காகவும் நான் ஆற்றிய பணிகளுக்காக என்னைப் பாராட்டிப் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நான் மிகவும் நேசிக்கிற பணிகளாகும். அதற்காகத்தான் இந்த நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத்தாரகை விருது வழங்க என்னைத் தெரிவு செய்துள்ளீர்கள். இந்நாள் என் வாழ்நாளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான நாளாகும். அன்றாட வாழ்வில் தங்களுக்கு இழைக்கப்படும் அநியாயம், அடக்குமுறை, சுரண்டல், அவமதிப்பு, அவமானம், பாகுபாட்டுக் கொடுமைகளை எதிர்த்துப் போராடி வருகிற இலட்சோப இலட்சம் சகோதரிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்ற வகையில், நான் என்னுடைய சொந்த வாழ்க்கையையும் மற்றும் பொது வாழ்க்கையையும் வகுத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறேன். என்னுடைய சகோதரிகள் அன்றாடம் அனுபவிக்கும் மேற்கண்ட பிரச்சினைகளையும் கணக்கில் அடங்காத சவால்களையும் நானும் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சந்திக்க வேண்டியிருந்தது. பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், இன்னல் களையும், புறங்கண்டு, வெற்றியும், அதிகாரமும் பெற முடியும் என்பதை உணர்த்த வேண்டுமென்ற தணியாத வேட்கையும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற அளவிடற்கரிய ஆர்வமும்தான், எந்தத் தடையையும் தகர்த்தெறியும் உறுதியை எனக்கு அளித்தன. அதனால்தான், இந்த நிலைக்கு உயர்ந்து இன்றைக்கு நான் உங்கள் முன் நின்று கொண்டிருக்கிறேன். எனவே, என்னுடைய பொதுப் பணியையும் பெண்களுக்கும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் மேம்பாட்டில் காட்டிவரும் ஆழ்ந்த ஈடுபாட்டையும் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு அங்கீகரித்திருப்பது என்னை மிகவும் நெகிழவைக்கிறது. இந்த இலட்சியங்கள்தான் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தின் அச்சாணியாக இருந்து என்னை வழிநடத்திச் செல்கின்றன. பெண்களுக்குச் சம அந்தஸ்து மற்றும் நீதி கிடைப்பதற்காகவும் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்காகவும் நான் ஆற்றி வரும் பணிகளை அங்கீகரிக்கும் விதமாக சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு எனக்கு இந்த விருதை வழங்கி கௌரவப்படுத்தியமைக்காக, என்னுடைய சிரந்தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நம் மாநில வரலாற்றிலேயே முதல் முறையாகப் பெண்மைக்கு முக்கியத்துவம் அளித்துக் கல்வி நிலையங்களில் குழந்தைகளைச் சேர்க்கும்போது, அவர்களின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரையும் முதலெழுத்தாகச் சேர்க்கலாம் என்று உத்தரவிட்டுள்ளேன். இதைப் போன்றே, தமிழ்மொழியில் "குடிமகள்" என்ற சொல்லையும் கூடுதலாகச் சேர்க்க நான் உத்தரவிட்டுள்ளேன். 'சிட்டிசன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, ஆண்களைச் சுட்டும் 'குடிமகன்' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. தற்போது "குடிமகன்" என்ற சொல்லுக்கு நிகரான பெண்பாற் சொல்லாகக் 'குடிமகள்' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது.**

பெண்களுக்குச் சம அந்தஸ்து குறித்த என்னுடைய கருத்துகளை இந்த நேரத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். பெண்களின்




கண்ணியத்தையும் கௌரவத்தையும் கட்டிக் காக்கத் தவறும் எந்தவொரு சமுதாயத்தையும் ஒரு பண்பட்ட சமுதாயம் என்று கூற முடியாது என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும். இது தொடர்பாக, சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதை இங்கே குறிப்பிட விழைகின்றேன். பெண்களுக்கு உரிய மரியாதை அளித்த எல்லா நாடுகளுமே உயர்ந்த நிலையை அடைந்துள்ளன. பெண்களை மதித்துப் போற்றாத எந்தவொரு நாடும் எப்போதும் உயர்ந்த நிலையை அடைய முடிந்ததில்லை. எதிர்காலத்தில் அடையப் போவதும் இல்லை.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைக் கண்டு ஆழ்ந்த கவலைக்குள்ளாகி பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்து தனிப்பட்ட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமானால் அதற்கான ஒரே வழி காவல்துறையில் அமைப்புரீதியிலான மாற்றத்தை உருவாக்குவதுதான் என்ற முடிவுக்கு வந்தேன். எனவே, காவல் துறையை மனித நேயமிக்க, மக்களின், குறிப்பாகப் பெண்களின் நலனில் அக்கறை கொள்கிற கருணை மிகுந்த காவல் அமைப்பாக உற்றுழி உதவிடும் நண்பனாக, நல்ல ஆலோசனைகள் தரும் அமைப்பாக மாற்ற வேண்டுமென்பதை இலட்சியமாகக் கொண்டேன். இந்தச் சிந்தனையின், இந்த இலட்சியத்தின் வெளிப்பாடாகவே, இந்தியாவிலேயே முதல் முறையாக, தமிழ்நாட்டில் 1992 ஆம் ஆண்டு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் ஏற்படுத்தினேன். இதன் மூலம் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ள மகளிருக்கு ஒரு பாதுகாப்பையும், அச்சமற்ற உணர்வையும் ஏற்படுத்தியுள்ளேன். தமிழகத்தில் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இதனை ஒரு முழுமையான இயக்கமாக மாற்றிடும் நடவடிக்கையாக, காவல் துறையில் பெண்களைச் சேர்ப்பதற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறேன். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும், ஒரு மகளிர் உதவி ஆய்வாளரின் தலைமையில் ஒரு மகளிர் காவல் பிரிவு இருக்கும். இதனால், பெண்கள்,தங்களுடைய பிரச்சினைகளுக்காக மகளிர் காவல் நிலையத்தை எளிதில் அணுக முடியாத தற்போதைய நிலைக்கு ஒரு தீர்வு ஏற்படும்.

நாட்டிலேயே முதன் முறையாக, அனைத்து மகளிர் அதிரடிப்படை (பெண் கமாண்டோ படை) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மகளிரை மட்டுமே கொண்ட காவல் படைப் பிரிவு ஒன்றும் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஒரு சம்பிரதாயத்திற்காக உருவாக்கப்பட்டவையல்ல. இவை, சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலுமுள்ள மகளிருக்கும் ஒரு தன்னம்பிக்கை உணர்வை ஊட்டியுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் மகளிர் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்துக் கொடுமைகளையும் விசாரிக்கும் போது பிரச்சினைகளின் தன்மையை அறிந்து பரிவுடன் தீர்வு காணும் வகையில், செயல்பட வேண்டும் என்று ஒட்டுமொத்த காவல் துறைக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக உரிய மன்றத்தை அணுகி விரைவில் தீர்வு காணுவதற்கு ஏதுவாக மகளிர் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொடக்கப் பள்ளிகளில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதும் புத்தாயிரமாண்டின் வளர்ச்சி இலக்காகும். பெண் குழந்தைகள், சமுதாயத்தில் ஓரங்கட்டப்படுவதும், சுரண்டப்படுவதும் எனக்குப் பெரிதும் கவலையளிக்கிறது. கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெண்களும் முன்னேற வேண்டும் என்பதற்காக, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற தனித்துவம் வாய்ந்த சிறப்புத் திட்டம் ஒன்றை நான் அறிவித்துள்ளேன். இத்திட்டம், பெண் குழந்தைகள் பொருளாதார ரீதியாகப் பாதுகாப்புப் பெற்று ஒரு போதும் தம் பெற்றோருக்கு ஒரு சுமையாக கருதப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் அளித்திட ஏதுவாக தற்போது இருக்கும் சட்டத்தில் நான் திருத்தங்களையும் கொண்டுவந்துள்ளேன். இந்த நடவடிக்கைகளால், மக்களிடையே குறிப்பாகப் பெண்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களே முன்வந்து காவல் துறையை அணுகும் நிலை உருவாகியுள்ளது.

நமது சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு சிறுவயதிலேயே தொடங்கி விடுகிறது. இந்தியாவின் சில பகுதிகளிலும், தமிழ்நாட்டிலும் சில சமுதாயத்திலும் இந்த வழக்கம் கருவிலேயே தொடங்கி விடுகிறது. பெண் சிசுக்கொலைக் கொடுமைகளைத் தடுப்பதற்காக, தொட்டில் குழந்தைத் திட்டத்தை நான் தொடங்கிவைத்தேன். பெண் சிசுக் கொலை அதிகம் நடைபெறும் வழக்கமுள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் இது குறித்த விழிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இத்தகைய கொடுமையான சிசுக்கொலைக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீதும் அதற்குக் காரணமானவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெண் சிசுக் கொலைகளைத் தடுப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அனுமதியற்ற முறையில் கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா, என்பதைக் கண்டறிவதற்கான சோதனைகளை நடத்துகிற ஆய்வுக் கூடங்கள் மற்றும் நோயறி மையங்களுக்கெதிராக, கருவுறலுக்கு முந்தைய மற்றும் மகப்பேற்றுக்கு முந்தைய அறுதியிடல் தொழில்நுட்ப உத்தி (பாலினத் தேர்வுத் தடை) சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகளை



எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மக்கள் தொகையில் பெண்களின் எண்ணிக்கை குறைவதைத் தடுக்க இது பெரிதும் உதவும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பெயர் வைப்பதில் கூட பாலினப்பாகுபாடு தென் படுகிறது. இங்கு தந்தைவழி பெயரே பின்பற்றப்படுகிறது. இதனை மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காக நம் மாநில வரலாற்றிலேயே முதல் முறையாகப் பெண்மைக்கு முக்கியத்துவம் அளித்துக் கல்வி நிலையங்களில் குழந்தைகளைச் சேர்க்கும்போது, அவர்களின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரையும் முதலெழுத்தாகச் சேர்க்கலாம் என்று உத்தரவிட்டுள்ளேன். இதைப் போன்றே, தமிழ் மொழியில் "குடிமகள்" என்ற சொல்லையும் கூடுதலாகச் சேர்க்க நான் உத்தரவிட்டுள்ளேன். 'சிட்டிசன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, ஆண்களைச் சுட்டும் 'குடிமகன்' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. தற்போது "குடிமகன்" என்ற சொல்லுக்கு நிகரான பெண்பாற் சொல்லாகக் 'குடிமகள்' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. இச்சொல், தமிழ் மொழியில், முதன் முதலாக பெண்ணினத்தைச் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அடையாளம் காட்டும் ஒரு சொல்லாக அமையும். இது பாலின நிகர்மையை நோக்கிய பயணத்தில் ஒரு எக்காள முழக்கமாக ஒலித்துக் கொண்டிருக்கும். இது, தமிழ்நாட்டில் பெண்களுக்கு உரிமையேற்றத்திற்கான ஒருமுக்கிய நடவடிக்கையாகவும் அமையும்.

பெண்களின் உரிமையேற்றம் என்பது என் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். உலக அரசியல் இயக்க வரலாற்றில் என்னுடைய தலைமையிலான கட்சிதான் முதன் முதலாகக் கட்சியின் அனைத்துப் பதவிகளிலும் பெண்களுக்கென்று 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும், தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும் அறிமுகப் படுத்தியது என்பதைக் கூறிக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன். தவிரவும், நாடாளு

மன்றத்திலும், மாநிலச் சட்ட மன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்று முதன்முதலாகக் குரல் கொடுத்ததும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

இந்திய அரசமைப்புச் சட்டம், அனைவருக்கும் கல்வி அளிக்கும் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஆனால், உண்மையில் பல குடும்பங்களில் வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காகப் பள்ளி படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுகிற அவல நிலைக்குத் தள்ளப் படுவதும் கடினமான வீட்டு வேலைகள் செய்வதும் பெண் குழந்தைகள்தான். தொடக்கப் பள்ளிகளில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதும் புத்தாயிரமாண்டின் வளர்ச்சி இலக்காகும். பெண் குழந்தைகள், சமுதாயத்தில் ஓரங்கட்டப்படுவதும், சுரண்டப்படுவதும் எனக்குப் பெரிதும் கவலை யளிக்கிறது. கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெண்களும் முன்னேற வேண்டும் என்பதற்காக, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற தனித்துவம் வாய்ந்த சிறப்புத் திட்டம் ஒன்றை நான் அறிவித்துள்ளேன். இத்திட்டம், பெண் குழந்தைகள் பொருளாதார ரீதியாகப் பாதுகாப்புப் பெற்று ஒரு போதும் தம் பெற்றோருக்கு ஒரு சுமையாக கருதப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

இன்றைக்கு, தமிழ்நாட்டில் எங்கு நோக்கினும் பெண் குழந்தைகள், நிறைந்த நம்பிக்கையுடன், மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்வதைக் காணலாம். ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பள்ளி செல்லும் பெண் குழந்தைகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் கிராமச் சமுதாயத்தின் முகத்தையே மாற்றியமைத் துள்ளதுடன் ஆண்களுக்கு நிகராக உண்மையான சமத்துவத்தை எய்தும் இலக்கை நோக்கி பெண்கள் முன்னேறிச் செல்லவும் உதவியுள்ளது.

பெண்களுக்குத் தொடர்ச்சியான ஆதாய முள்ள வேலைவாய்ப்பை அளிப்பதன் மூலம், அவர்கள் சமுதாயத்தில் அதிகாரம் பெற்று,



ஆண்களோடு சரிநிகராக முன்னேறுவதற்குக் காரணமாயிருப்பது நிச்சயமாக, பொருளாதார சுதந்திரம்தான். மொத்தத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியில் நமது கிராமப்புற பெண்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பல்வேறு கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாயமும் அதன் காரணமாகத் தங்களுடைய ஆற்றலைப் பல்வேறு பணிகளுக்காகச் செலவிடும் கட்டாயமும் ஏற்படுகிறது. பெண்களிடம் அதிக வேலை வாங்கப்படுகிறது. ஆனால், குறைவான ஊதியமே கொடுக்கப்படுகிறது. பெரும்பாலும் ஊதியம் கொடுக்காமலும் வேலை வாங்கப்படுகிறது. ஆண்–பெண் பாகுபாட்டு அடிப்படையிலான வங்கி நடைமுறைகளால் வறுமை ஒழிப்புத் திட்டத்துடன் இணைந்த வழக்கமான கடனுதவியைப் பெறுவதிலும் கூட பெண்கள் கடுமையான சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். 1992ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்த மகளிர் சுய உதவிக்குழு என்ற இயக்கம், இன்று இலட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கைத் தர பாதுகாப்பிற்கு நிச்சயமான உத்தரவாதத்தை அளிக்கின்றது.

பெண்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அவர்கள் எந்தத் துறையிலும், ஏன், ஆண்களுக்கே உரியவை என்று கருதப்பட்டு ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்ற துறைகளிலும்கூட ஆண்களைக் காட்டிலும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பது என்னுடைய திண்மையான எண்ணம். இந்த எண்ணத்திற்கு மேலும் அரண் சேர்க்கும் நடவடிக்கையாக, மறைந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவாக அவர் பெயரில் வீரதீர மற்றும் துணிகர முயற்சி களுக்கான கல்பனா சாவ்லா விருதை நான் ஏற்படுத்தியுள்ளேன்.

பொருளாதார வளர்ச்சி என்பது நடை முறைகள் சமூகத்தில் நலிவுற்று ஏழ்மை நிலையிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும்

பெண்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அவர்கள் எந்தத் துறையிலும், ஏன், ஆண்களுக்கே உரியவை என்று கருதப்பட்டு ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்ற துறைகளிலும்கூட ஆண்களைக் காட்டிலும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பது என்னுடைய திண்மையான எண்ணம். இந்த எண்ணத்திற்கு மேலும் அரண் சேர்க்கும் நடவடிக்கையாக, மறைந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவாக அவர் பெயரில் வீரதீர மற்றும் துணிகர முயற்சிகளுக்கான கல்பனா சாவ்லா விருதை நான் ஏற்படுத்தியுள்ளேன்.

அளிக்கக்கூடிய அனைத்தளாவியதாக இருக்க வேண்டும். இதனை நடத்திக் காட்டுவதில் நான் முழுமையாக ஈடுபட்டு வருகிறேன். புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளைக் குறித்த காலத்திற்கு முன்பாகவே எய்தும் வகையில் ஏறுநடை போட்டு முன்னேறி வருகிறது தமிழ்நாடு. நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்கு முன்னதாக வறுமை நிலையைக் குறைப்பதோடு, வாழ்க்கைத்தரம், உரிமையேற்றம், சுய மதிப்பை உயர்த்துதல் போன்ற துறைகளில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சமூகத்தின் நலிந்த பிரிவினர் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் ஆகியோருக்கு உதவிகள் சென்றடைந்தால்தான் பொருளாதார வளர்ச்சி அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அரசுத் திட்டங்களின் பயன்கள் ஏழை மக்களுக்கும் சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கும் சென்று சேரும் வகையில், பணியின் தரம் மேம்படுத்தப்பட்டு அதன்மூலம் அவர்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும்

ஊட்ட வேண்டும் என்பதே என்னுடைய இடையறா முயற்சியாக இருந்து வருகிறது.

சில நேரங்களில், உரிமையேற்றம் என்றால் என்ன அல்லது அதிகாரம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே, மகளிரின் உரிமையேற்றம் பற்றி எளிதாகப் பேசி வருகிறோம். மகளிர் உரிமையேற்றம் என்பதன் உண்மையான பொருள் என்ன என்பதை விளக்குவதற்காக, நெய்லே பிராண்டிஸ் எழுதிய " Fruitflesh - Seeds of Inspiration for Women Who Write" என்ற புத்தகத்திலிருந்து சில வரிகளை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"அதிகாரம் என்பது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை. நமது கலாச்சாரத்தில் அதிகாரம் என்பது, பெரும்பாலும் வல்லமை, மிருக பலம், வலிமை என்றே பொருள் கொள்ளப்படுகிறது. இச்சொல் நம் மனக் கண் முன் ஒரு முஷ்டியையும் ஒரு காலையும் ஒரு வெடிகுண்டையும் கொண்டு வந்து நிறுத்துகிறது. அது மற்றவர்கள் மீது செலுத்தும் அதிகாரத்தையும், மற்றவர்களை அழிக்கக்கூடிய அதிகாரத்தையுமே குறிப்பிடுகிறது. இதுவே அதிகாரம் என்பதற்கு ஆண்களால் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக உள்ளது. ஆனால், அதிகாரம் குறித்து பெண்கள் கொண்டுள்ள கருத்து முற்றிலும் வேறு. பெண்கள் என்ற முறையில், நாம் மற்றவர்கள் மீது ஆளுமை செலுத்தும் போது, அதிகாரத்தை உணர்வதில்லை. மாறாக, நாம் மற்றவர்களுடன் உண்மையான நட்பு கொள்ளும் போதும் நாம் நமக்கும் நம்முடைய உணர்வுகளுக்கும் நாம் உண்மையாக இருக்கும் போதுமே அதிகாரத்தை உணர்கிறோம். பெண்களின் அதிகாரம் என்பது ஆக்கப்பூர்வமான வளர்ச்சியைத் தூண்டக்கூடிய ஒருசக்தியாகும். அது ஒரு முஷ்டி அல்ல. எழுதக்கூடிய, செதுக்கக்கூடிய, நடனமாடக் கூடிய, குணப்படுத்தக்கூடிய, கொடுக்கவும் பெறவும் தெரிந்த, விரிந்த கரங்களாகும்". அதிகாரம் என்பதற்கு மேற்கண்ட இந்தப் பொருள் விளக்கமானது. நம்முடைய இந்தியப் பார்வையில் 'சக்தி' என்று குறிப்பிடப்படுகிறது. இந்த

பெண்களின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் கட்டிக் காக்கத் தவறும் எந்தவொரு சமுதாயத்தையும் ஒரு பண்பட்ட சமுதாயம் என்று கூற முடியாது என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும். இது தொடர்பாக, சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதை இங்கே குறிப்பிட விழைகின்றேன். பெண்களுக்கு உரிய மரியாதை அளித்த எல்லா நாடுகளுமே உயர்ந்த நிலையை அடைந்துள்ளன. பெண்களை மதித்துப் போற்றாத எந்தவொரு நாடும் எப்போதும் உயர்ந்த நிலையை அடைய முடிந்ததில்லை. எதிர்காலத்தில் அடையப் போவதும் இல்லை.

ஆக்கப்பூர்வமான சக்தியை என்னுடைய சக பெண்ணினத்திற்கு ஒரு உந்து சக்தியாக ஊட்டுவதே என்னுடைய இடையறாத முயற்சியாக இருந்து வருகிறது. எனக்கு இன்று வழங்கப்பட்டுள்ள நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான 'தங்கத்தாரகை விருது' என்னுடைய இந்தக் குறிக்கோளை அடைய நான், மென்மேலும் கடுமையாக உழைப்பதற்கு எனக்கு ஓர் உந்து சக்தியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்வதில் எனக்கு கிஞ்சித்தும் தயக்கம் இல்லை. சிறப்புமிகு இவ்விருதினை எனக்கு வழங்கி என்னைப் பெருமைப்படுத்திய உங்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 11.10.2004 அன்று நடைபெற்ற, உக்ரைன் நாட்டிலுள்ள சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் "நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத்தாரகை விருது" வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

சென்னை மக்களுக்குக் குடிநீர் வழங்க ஸ்ரீசைலம் அணையிலிருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் :

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதல்வர் டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி அவர்களை 1.10.2004 அன்று ஐதராபாத்தில் உள்ள அம்மாநில தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள். அச்சந்திப்பின் போது சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கிருஷ்ணா நதிநீரை ஸ்ரீசைலத்திலிருந்து திறந்துவிடுவது பற்றி உடனடியாகப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி அவர்களுக்கு தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இச்சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.9.2004 அன்று மாண்புமிகு ஆந்திர முதல்வருக்குத் தாம் எழுதிய கடிதம் மற்றும் அதற்கு 6.9.2004 அன்று ஆந்திர முதல்வரிடமிருந்து தமக்கு வரப்பெற்ற கடிதம் மற்றும் கடந்த 10.9.2004 அன்று இது தொடர்பாக தாம் ஆந்திர முதல்வருக்கு எழுதிய கடிதம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் தனிப்பட்ட சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

மேலும், கடந்த 18.9.2004 அன்று ஆந்திர முதல்வர் தாம் எழுதிய கடிதத்தில் கிருஷ்ணா நதிநீர் சென்னை மாநகருக்கு விநியோகிக்கப்படும் விதம் குறித்து இணைந்து ஓர் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று, குறிப்பிட்டிருந்ததைப் பாராட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிருஷ்ணா நதிநீர் சென்னை மாநகருக்கு வழங்குவதற்கான ஒரு நல்ல வழியை இனம் கண்டறிய வேண்டுமென்று அப்போது வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகர் எதிர்கொண்டு வரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை குறித்து ஆந்திர முதல்வரின் தனிப்பட்ட சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கடந்த 54 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவாக சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் நீர் கையிருப்பானது, கடந்த 2003 டிசம்பர் இறுதியில் மிகவும் குறைந்த அளவு நீர் கையிருப்பு

இருந்ததை நீங்கள் அறிவீர்கள் என்றும், சென்னை மாநகரின் தற்போதைய மக்கள் தொகை 70 இலட்சத்துக்கும் அதிகமாக உள்ள நிலையில் முன் எப்போதுமே சந்தித்திராத மோசமான குடிநீர்த் தட்டுப்பாட்டுப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. மேலும், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காகச் சென்னையின் புறநகர் பகுதிகளில் மிக நீண்ட தொலைவில் உள்ள பகுதிகளிலிருந்து நிலத்தடி நீரைப் பம்ப் செய்து லாரிகள் மூலம் சென்னைக்குக் கொண்டு வந்து விநியோகிப்பதில் ஏற்படும் நிருவாகச் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரிடம் விளக்கிக் கூறினார்கள்.

மேலும் கடந்த 2003, டிசம்பர் இறுதியில் இருந்து சென்னை மாநகரில் விநியோகிக்கப்படும் குடிநீரானது குழாய்கள் வழியே வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. இது மிகவும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினை என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீசைலத்திலிருந்து கிருஷ்ணா நதிநீர் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கடந்த 1983ஆம் ஆண்டு ஆந்திரப்பிரதேசத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று ஆந்திர முதல்வரிடம் வலியுறுத்தினார்கள்.

மீண்டும் இந்த ஒப்பந்தம் குறித்து எடுத்துக்கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீசைலத்திலிருந்து 15 டி.எம்.சி. அடி நீர் இதற்கென்று பிரத்யேகமாகத் திறந்துவிடுவதற்குத் தேவையான நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மேலும், அவ்வாறு செய்யும் போதுதான் குறைந்தபட்சம் 12 டி.எம்.சி. அடி தண்ணீர் தமிழ்நாடு எல்லையில் கிடைக்கப்பெறும் என்றும் தெரிவித்தார்கள்.

கிருஷ்ணா நதிநீர் தமிழக எல்லையை அடைவதன் மூலம் சென்னை மாநகரில் குடிநீர்த் தேவைகளை எதிர்கொள்வதற்காகத் தமிழக அரசு இப்பணிகளை மேற்கொள்ள ஆந்திரப்பிரதேச அரசுக்கு ஏற்கெனவே ரூ.512 கோடி வழங்கியுள்ள உண்மை நிலை குறித்து அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

கடந்த 1996–ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச அரசு வகுத்துக்கொண்டு ஏற்றுக் கொண்ட முதன்மையாகச் செய்ய வேண்டிய பணிகள் குறித்த உத்தரவில் முதல் முன்னுரிமைத் திட்டமாகச் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஸ்ரீசைலத்திலிருந்து 15 டி.எம்.சி. அடி வரை தண்ணீர் திறந்து விடுவதென்று தெரிவிக்கப் பட்டிருந்தது. அதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரில் குடிநீர் வழங்குவதை முன்னுரிமையாக எடுத்துக்கொண்டு உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்றும் அப்போது வேண்டுகோள் விடுத்தார்கள். தற்போது சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் ஒட்டுமொத்தமாக வறண்டு காணப்படுகிறது. சென்னை நகரிலுள்ள நிலத்தடி நீர்மட்டமும் மிகவும் குறைந்துள்ளது. சென்னையைச் சுற்றி புறநகர் பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் வெகுவேகமாகக் குறைந்து வருகிறது.

சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் கிருஷ்ணா நதிநீரை நம்பி இருப்பதைத் தவிர வேறு மாற்று வழி ஏதும் இல்லை என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அப்போது வலியுறுத்திக் கூறினார்கள். இப்பிரச்சினையில் ஆந்திர முதல்வர் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

சோமசீலா நீர்த்தேக்கத்தில் 21.5 டி.எம்.சி. அடி தண்ணீர் இருந்தால்தான் அங்கிருந்து தண்ணீர் திறந்துவிட முடியும் என்ற தொழில்நுட்பக் காரணங்களைச் சுட்டிக்காட்டிய ஆந்திரப்பிரதேச மாநில முதல்வர், தற்போதுள்ள சூழ்நிலையில் அங்கு 18.5 டி.எம்.சி. அடி நீர்தான் உள்ளது என்றும் இந்நிலையில் 1.10.2004 அன்று சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்குத் தண்ணீர் திறந்துவிட இயலாது என்றும் தெரிவித்தார். அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக முன்னுரிமை வழங்கி ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து தேவையான அளவு நீர் திறந்துவிட வேண்டும் என்றும், அப்போது சோமசீலா நீர்த்தேக்கத்தில் உள்ள கொள்ளளவு அதிகரித்து 21.5 டி.எம்.சி. அடியை விட அதிகரிக்கும் என்றும் வலியுறுத்தினார்கள்.

ஸ்ரீசைலம் அணையிலிருந்து சோமசீலாவுக்கு தற்போது திறந்துவிடப்படும் 2,000 கன அடி என்ற அளவானது சோமசீலா நீர்த்தேக்கத்தை வந்தடைந்து நிரம்புவதற்கு அதிக நேரம் பிடிப்பதுடன் கண்டலேறு

நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் திறந்துவிடத் தேவையான அளவு தண்ணீர் நிரம்புவதற்கும் காலம் அதிகமாகும் என்று தெரிவித்தார்கள். எனவே, சோமசீலா நீர்த்தேக்கத்திற்குத் திறந்துவிடப்படும் நீரின் அளவை அதிகபட்ச அளவிற்கு உயர்த்தத் தேவையான, சாதகமான நடவடிக்கையாக எடுத்து சோமசீலா நீர்த்தேக்கத்தில் கண்டலேறு அணைக்கு நீர் திறக்கத் தேவையான நீர் விரைவாக நிரம்பும் அளவுக்குத் தண்ணீர் திறந்துவிடுவதுடன் அங்கிருந்து சென்னை மாநகருக்கு சென்றடைய தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

தெலுங்கு கங்கை திட்டக் கால்வாயில் இதுவரை பணி நிறைவடையாத 13.8 கி.மீ. தூரப் பாதைக்கு மாற்றுப் பாதையாகத் தற்போது தண்ணீர் திறந்துவிடப்படும் நிலப்புலவாகு கால்வாயில் அதிக அளவு தண்ணீர் திறந்துவிடுவதுடன் இந்நீர் வக்கீலேர்வாகு வழியாக சோமசீலா நீர்த்தேக்கத்தை அடைய ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்கள். மேலும், தற்போது கண்டலேறு நீர்த்தேக்கத்தில் 1.44 டி.எம்.சி. அடி அளவு நீர்தான் உள்ளது. ஆனால், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கண்டலேறு பூண்டி கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுவதற்கு, குறைந்தபட்ச நீர் கொள்ளளவு 6.9 டி.எம்.சி. அடி தண்ணீர் இருக்க வேண்டும். எனவே அதற்கேற்ற வகையில் நீர் கையிருப்பு அளவை அதிகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

எனவே, ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவுக்கு உடனடியாக அதிகபட்ச அளவில் தண்ணீரைத் திறந்துவிட வேண்டிய ஒரு சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது என்று அப்போது வலியுறுத்திக் கூறினார்கள். மேலும், சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு நீரைத் திறந்துவிடுவதன் மூலம் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் நீர் கையிருப்பு அளவானது 6.9 டி.எம்.சி. அடி தண்ணீரை அப்போதுதான் எட்ட இயலும் என்றும் தெரிவித்தார்கள்.

கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழகத்திற்குத் திறந்துவிடப்படும் நீர் மிகக் குறைந்த அளவே தமிழக எல்லையில் கிடைக்கப் பெறுகின்றது என்ற பிரச்சினையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மேலும் தற்போது கண்டலேறு – பூண்டி கால்வாய் முழுவதும் சீர்செய்யப்பட்டுள்ள நிலையில் கால்வாயில் திறந்துவிடப்படும் நீர் சிறிதளவும் வீணாகாமலும், திருடப்படாமலும் கண்டலேறு – பூண்டிக்கு இடைப்பட்ட இடங்களில் இருக்கும் நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்கள்.

இந்த ஒட்டுமொத்த நடைமுறைகளையும் நெறிமுறைப்படுத்துவதற்கு ஒரு சிறப்பான – தெளிவான சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும், அது விரைந்து வரையறுக்கப்பட வேண்டும் என்றும், அதை இரு மாநிலங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரிடம் எடுத்துக் கூறினார்கள். இந்த வரையறைகளில் முக்கிய காரணியாகச் சோமசீலா மற்றும் கண்டலேறு நீர்த்தேக்கங்களில் குறைந்தபட்ச நீரைத் தேக்கி வைப்பதை உறுதி செய்ய வரையறை செய்ய வேண்டும் என்பதாகும். இதன் மூலம் ஸ்ரீசைலத்திலிருந்து திறந்துவிடப்படும் நீர் விரைவில் சென்னை நகருக்குத் திறந்துவிட ஏதுவாகும்.

தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்கி அதில் தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகளையும் இடம்பெறச் செய்து அவர்களைக் கொண்டு அதிகாரப்பூர்வக் குழுவுக்கான நெறி முறைகளை வகுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆலோசனையைத் தெரிவித்தார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அதிகாரப்பூர்வ குழு 2004 அக்டோபர் 11ஆம் தேதி இப்பிரச்சினை குறித்து விவாதித்து அதற்கென்று ஒரு கால அட்டவணையைத் தயாரித்து 2004, டிசம்பருக்கு முன்னதாக இதற்கென்று ஒரு வரைமுறையை உருவாக்கி அதற்கு ஒப்புதல் பெற வேண்டும் என்று மற்றொரு ஆலோசனையைக் கூறினார்கள்.

ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவுக்குத் திறந்துவிடப்படும் கிருஷ்ணா நீரின் அளவை அதிகரிப்பதோடு அங்கிருந்து சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு தேவையான நீர் கண்டலேறுவிலிருந்து திறந்துவிடுவதற்கு, சோம சீலாவிலிருந்து நீரைத் திறந்துவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரைக் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு ஆந்திர முதல்வர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி சென்னை மாநகரில் நிலவிவரும் குடிநீர்ப் பிரச்சினையை மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் கேட்டறிந்தார். மேலும் 1983ஆம் ஆண்டு சென்னை

மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஆந்திராவுக்கும் தமிழகத்திற்கும் இடையே கடந்த 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்வோம் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆந்திர முதல்வர் உறுதியளித்தார். ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவுக்குத் திறந்துவிடப்படும் கிருஷ்ணா நதிநீரின் அளவை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளை அவர் ஏற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆந்திர முதல்வர் தங்களுக்குள் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையிலும் கிருஷ்ணாவிலிருந்து சோமசீலாவுக்கு திறந்துவிடப்படும் நீரின் அளவை வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பதற்குத் தேவையான சிறப்பான நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஆந்திரப் பிரதேச முதல்வர் தற்போது திறந்துவிடப்படும் நீரின் அளவை வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக 1.10.2004 முதல் அதிகரிக்க தாம் உத்தரவிடுவதாகவும் அப்போது அவர் உறுதியளித்தார். இதன் மூலம் சோமசீலா நீர்த்தேக்கத்தில் நீர் அளவு விரைவில் உயர்வதுடன் சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு, தண்ணீர் திறந்துவிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆந்திரப் பிரதேச முதல்வர் கண்டலேறு நீர்த்தேக்கத்திற்குத் தேவையான அளவுக்கு நீர் திறந்துவிடப்படும் என்றும், அதே போன்று கண்டலேறு–பூண்டி கால்வாயில் நீர் திருட்டு மற்றும் கசிவைத் தடுப்பதற்குத் தேவையான சட்ட நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என்ற கருத்தை ஆந்திர முதல்வர் ஏற்றுக் கொண்டதோடு அதனை விரைவில் வரைவு செய்து அதிகாரப்பூர்வ குழு கூடும் தேதியான 2004, அக்டோபர் 11ஆம் தேதி பரிசீலனைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் இந்த சார்ந்திருத்தல் முறைக்கு நெறிமுறைகள் விரைவில் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது கிருஷ்ணா நதிநீர் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்தார். இந்த நெறிமுறைகளை வகுப்பதற்கு ஒரு தொழில்நுட்பக்குழு தமிழக தொழில்நுட்ப வல்லுநர்களையும் உள்ளடக்கிய குழு உருவாக்கப்படும்.

1.10.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையிலும் அவருடைய கோரிக்கையின் அடிப்படையிலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் சென்னை மாநகருக்கான கிருஷ்ணா நதிநீர் விநியோகம் அடுத்த 15 அல்லது 20 நாட்களில் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகர மக்களின் சார்பாக, தாம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அதிகபட்சமாகச் சாதகமான நல்லதொரு தீர்வு ஏற்பட வழிவகை செய்த மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் டாக்டர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த சந்திப்பு சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு தமிழக பொதுப்பணி, வருவாய் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. என். நாராயணன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. என்.எஸ்.பழனியப்பன், காவிரி தொழில்நுட்பப் பிரிவு தலைவர் பேராசிரியர் ஏ.மோகனகிருஷ்ணன், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. எம். தீனதயாளன் ஆகியோரும், ஆந்திரப்பிரதேச அரசின் சார்பில் அம்மாநில முதல்வர் டாக்டர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி, பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் துறை அமைச்சர் திரு. பொன்னாள லட்சுமையா, உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கொன்னேறு ரங்காராவ், சாலை மற்றும் கட்டடங்கள் துறை அமைச்சர் திரு. ஜே. ராமமோகன் ராவ், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. ஷபீர் அலி, நிலத்தடி நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. மாரப்பா, தலைமைச் செயலாளர் திரு. மோகன்கந்தா, நீர்ப்பாசனத் துறை முதன்மை செயலாளர் திரு. ஓ.வி.கே.எஸ்.சர்மா, நீர்ப்பாசனத்துறை (திட்டங்கள்) செயலாளர் திரு. சுரேஷ் சந்தா, கடப்பா நீர்ப்பாசனத்துறை தலைமைப் பொறியாளர் திரு. பிரபாகர் ரெட்டி மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

* * *

# தியாகி திருப்பூர் குமரன்



இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஊர் அன்றைய கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூர்; இந்த ஊரில்தான், 1932 ஜனவரி மாதம் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டத்தில் தாயின் மணிக்கொடியான இந்திய தேசியக் கொடியைக் காப்பதற்காக தடியடியைத் தாங்கிக் கொண்டு, உயிர்த் தியாகம் செய்தார் குமாரசாமி என்கிற இளைஞர். அத் தீரர், குண்டாந்தடியால் தாக்கப்பட்டுக் குருதி வெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்த போதும், இந்தியத் தாயின் மணிக்கொடியைத் தரையில் வீழாது காத்த குணக்குன்று. குமாரசாமி 'திருப்பூர் குமரன்' என்ற புகழ்ப் பெயரைப் பெற்று, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுவிட்டார்.

தற்போதைய ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலையில் நெசவாளர் குடும்பத்தில், நாச்சிமுத்து – கருப்பாயி தம்பதியருக்கு, 1904 அக்டோபர் மாதத்தில் பிறந்தவர் குமாரசாமி. இவருக்கு ஆறு சகோதரர்கள். ஐந்தாவது வயதில் சென்னிமலையில் பள்ளியில் சேர்க்கப்பட்ட குமாரசாமி ஐந்தாவது வகுப்பு வரையில்தான் படித்தார். அதற்குமேல் அவரைப் படிக்க வைக்க அவரது பெற்றோரின் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை.

பள்ளிப்பாளையத்தில் தனது தாய்மாமன் வீட்டில் தங்கி, நெசவுத் தொழிலைக் கற்றுக் கொண்டு, சென்னிமலை திரும்பி, நெசவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். இவரது பத்தொன்பதாவது வயதில் பதினான்கு வயதுப் பெண் இராமாயியை இவருக்கு இவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். நெசவுத் தொழிலில் போதிய வருமானம் இல்லாததால், திருப்பூர் பஞ்சரைக்கும் தொழிற்சாலையில் எடைப்பதிவு எழுத்தர் வேலையில் சேர்ந்தார்.

கள்ளுக்கடை மறியல், கதராடை உற்பத்தி என எதிலும் முன்னிலையில் நின்ற ஊர் திருப்பூர்; காந்தியடிகள் காட்டிய வழியில் விடுதலைப் போராட்டத்தில் அவ்வூர் மக்கள் காட்டிய ஆர்வமும், எழுச்சியும் போற்றத் தக்கவை. தேசபந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு திருப்பூரில் இயங்கி வந்தது. அதில் குமாரசாமியும் உறுப்பினராகச் சேர்ந்து, விடுதலைப் போராட்டத்தில் தீவிர ஆர்வம் காட்டினார். காந்தியடிகள் கூறியபடி கதர் உடையையே உடுத்தினார். தம் மனைவியையும் கதர்ச் சேலை அணியும்படி செய்தார். தினந்தோறும் ராட்டையில் நூல் நூற்பதைத் தம் கடமைகளுள் ஒன்றாகக் கருதி செயல்பட்டார்.

வேதாரணியத்தில் மூதறிஞர் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளத் துடித்தார். ஆனால், குடும்பத்தினரும், தொழில் நிலையத்தினரும் தடுக்கவே, அவரது ஆசை நிறைவேறவில்லை. இதனால் மனம் உடைந்து, ஒருநாள் முழுவதும் உண்ணா நோன்பு இருந்து, மன அமைதி பெற்றார். இவரது நாட்டுப் பற்றுக்கும் விடுதலை உணர்வுக்கும் இது தக்க சான்றாகும்.

1932ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் ஆங்கிலேய வைசிராய் லார்டு வெல்லிங்டன் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை காரணமாக அண்ணல் காந்தியடிகள் மும்பாயில் கைது செய்யப்பட்டார். நாடே கொந்தளித்தது. அறப்போர் தொடங்கப்பட்டது. திருப்பூரும் களத்தில் இறங்கியது. ஜனவரி 6ஆம் நாள் திருப்பூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது. ஜனவரி 10 முதல் அறப்போர் தொடங்கும் என அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 10ஆம் நாள், 144 தடை உத்தரவை மீறி, பி.எஸ். சுந்தரம் என்கிற வீரர், ஒன்பது தொண்டர்களுடன் ஒத்துழையாமை ஊர்வலத்தை நடத்தினார். ‘வந்தே மாதரம்’ முழக்கத்துடன், ‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது’ என்ற நாமக்கல் கவிஞரின் பாடலை எழுச்சியுடன் பாடிக்கொண்டே, திருப்பூர் நகர வீதியில் தொண்டர்கள் வீறுநடை போட்டனர். அந்தத் தொண்டர்களில் ஒருவராக, குடும்பத்தினர் தடுத்தும், நண்பர்கள் அறிவுரை கூறியும் கேளாமல், எல்லோருக்கும் முன்னால், முன்னணி வீரராக, தாய்த்திருநாட்டின் மூவர்ணக் கொடியுடன் குமாரசாமியும் வீரநடை போட்டார்.

போலீஸ் படை ‘கலைந்து செல்லுங்கள்’ என்று எச்சரித்தும், கலைய மறுத்து, “அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே” என்று முழங்கினார்கள் விடுதலை வீரர்கள். போலீசார் அவர்களை ஓட ஓட விரட்டி அடித்து நொறுக்கினார்கள். கொடியைத் தாங்கி, முன்னால் சென்று கொண்டிருந்த குமாரசாமிக்குச் சரியான அடி. அவரை ஆளுக்கொரு பக்கம் குண்டாந்தடியால் தாக்கினர். குமாரசாமியின் மண்டை எலும்பு உடைந்தது. குருதி கொட்டிய நிலையிலும், தாங்கிப் பிடித்த தாயின் மணிக்கொடியை வீரர் குமாரசாமி விடவில்லை. அவரது கைகளிலிருந்து போலீசாரால் கொடியைப் பறிக்க முடியவில்லை.

பட்ட அடியால், மூளை செயலற்றதும், மாவீரன் குமாரசாமியின் உடல் மண்ணில் சாய்ந்தது. குருதியில் மிதந்தது. ராமன் நாயர் என்பவர் மார்பில் பலமான அடி விழுந்தது. மார்பு எலும்பு ஒன்று ஒடிந்தது. சுந்தரம் என்பவரின் உடலெல்லாம் எலும்பு முறிவு.

தெரு ஓரங்களில் வீசி எறியப்பட்டிருந்த தொண்டர்களை அவர்களது உறவினர்களும், நண்பர்களும் வந்து எடுத்துச் சென்றனர். குமாரசாமி, ராமன் நாயர், சுந்தரம் ஆகிய மூவர் மட்டும் நடுத்தெருவில் குற்றுயிராகக் கிடந்தனர். வெகுநேரத்திற்குப் பிறகுதான், திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆபத்தான நிலையில் குமாரசாமி நினைவு இழந்தார். அடுத்தநாள் ஜனவரி 11 – விடியற்காலை 4 மணிக்கு அரசு மருத்துவமனையில் திருப்பூர் குமரன் அமரர் ஆனார். சுந்தரமும், ராமன் நாயரும் நீண்ட சிகிச்சைக்குப் பிறகு, உயிர் பிழைத்தனர்.

சென்னிமலையில் பிறந்து வளர்ந்த குமாரசாமி திருப்பூர் குமரனாக மறைந்தார். தாயின் மணிக்கொடியைக் காக்க இன்னுயிர் ஈந்த குமாரசாமி, திருப்பூரை, இந்திய மக்கள் மறக்க முடியாதபடி செய்து விட்டார்.

❖ ❖ ❖

# தமிழக அரசின் சார்பில்


# ◘ பெரியார் விருது - ◘ அம்பேத்கர் விருது - ◘ திரு.வி.க.விருது - ◘ பாரதியார் விருது - ◘ பாரதிதாசன் விருது - ◘ கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா

**நா**ட்டுக்காகவும் மொழிக்காகவும், சமுதாயத்திற்காகவும் பாடுபட்ட பெரு மக்களின் நினைவைப் போற்றும் வகையிலும், தமிழ்ச் சான்றோர்களுக்குக் கவுரவமும் தமிழ் அறிஞர்களுக்கு ஊக்கமும் அளிக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசின் சார்பில், 2002, 2003, 2004ஆம் ஆண்டுகளுக்கான பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க.விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ.விருது ஆகிய விருதுகள் வழங்கும் விழா, 17.9.2004 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தமிழ்ச் சான்றோர்களுக்கும், சமூக சீர்திருத்தவாத அறிஞர்களுக்கும் 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளுக்கான பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ.விருது ஆகிய விருதுகளை வழங்கி, விழாப் பேருரையாற்றினார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், 2002ஆம் ஆண்டிற்கான பெரியார் விருதினைத் திரு. கா. ஜெகவீரபாண்டியன் அவர்களுக்கும், அம்பேத்கர் விருதினைத் திரு.எம்.தாமோதரம் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினைப் பேராசிரியர் திரு.வே.கோபாலய்யர் அவர்களுக்கும், பாரதியார் விருதினைத் திரு.கே.வி. கிருஷ்ணன் அவர்களுக்கும்,







பாரதிதாசன் விருதினை முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும், கி.ஆ.பெ. விருதினை முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் வழங்கினார்.

2003ஆம் ஆண்டிற்கான பெரியார் விருதினைத் திரு.துரை கோவிந்தராஜன் அவர்களுக்கும், அம்பேத்கர் விருதினைத் திரு.வீ.சுப்பரத்தனம் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினை முனைவர் ம.ரா.போ.குருசாமி அவர்களுக்கும், பாரதியார் விருதினைத் திரு.ரா.அ.பத்மநாபன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருதினைப் பேராசிரியர் முனைவர் அ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கும், கி.ஆ.பெ.விருதினை முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களுக்கும் வழங்கினார்.



தொடர்ந்து, 2004 ஆம் ஆண்டிற்கான பெரியார் விருதினை நீதியரசர் பி.வேணுகோபால் அவர்களுக்கும், அம்பேத்கர் விருதினைத் திரு.ஆ.சக்தி தாசன் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினை முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும், பாரதியார் விருதினைத் திரு.சீனி விசுவநாதன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருதினைப் பேராசிரியர் லெ.ப..கரு.இராமநாதன் அவர்களுக்கும், கி.ஆ.பெ.விருதினை முனைவர் பு.பா. இராஜ இராஜேஸ்வரி அவர்களுக்கும் வழங்கினார்.



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் விருதுகள் வழங்கி, தமிழக அரசின் சார்பில், ஒரே நேரத்தில் ஆறு மாபெரும் விருதுகளை வழங்குகின்ற இவ்விழா, தமிழ்ச் சான்றோர்கள் சமுதாய சீர்திருத்தத்திற்குப் பாடுபட்டவர்களின் புகழுக்குப் புகழ் சேர்கின்ற விழாவாகத் திகழ்கிறது என்று தெரிவித்தார்கள்.





மேலும், ஒரு நாடு உயர்ந்த நாடாக விளங்க வேண்டுமென்றால் அங்கு தன்னலம் கருதாத தலைவர்கள் உருவாக வேண்டும். தன் வீடு, தன் பெண்டு, தன் பிள்ளை என்று எண்ணாத தலைவர்கள் அங்கு இருக்க வேண்டும். நாட்டு மக்கள் வளம்பெற என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கின்ற பரந்த மனது கொண்ட தலைவர்கள் இருக்க வேண்டும்.

அப்படி உயர்ந்த சிந்தனை கொண்ட தன்னலம் கருதாத தலைவர்களாகத் தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், திரு.வி.க., மகாகவி பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. ஆகியோர் விளங்கினர். அவர்களது பெயரால் அமைந்த இந்த விருதுகளை அவர்கள் வழிநடந்து தங்களை வளர்த்த தமிழ் அன்னைக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டு செய்கின்ற பெருமக்களுக்கு வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்தார்கள்.



மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று பேசும்போது கூறியதாவது:–

"மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நல்லவர்களைத் தக்க தருணத்தில் பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும், விருதுகள் வழங்கி



கௌரவிக்க வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட நல்ல உள்ளத்திற்குச் சொந்தக்காரர் ஆவார். நாட்டிற்காகவும் சமுதாயத்திற்காகவும் உழைத்த ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார் ஆவார்கள். அடிமைப்பட்டு கிடந்த மக்களின் தலைவராக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக உரிமைக் குரல் கொடுத்த சிந்தனைச் சிற்பியாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் போற்றப்படுகின்றார். சொல் புதிது, சுவை புதிது என்று குறிப்பிடும் வகையில் எளிய நடையில், எழுச்சிக் கவிதை படைத்து, தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மகாகவி பாரதியார் அவர்கள். தமிழ் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட ஒப்பற்ற கவிஞர் என்ற பெருமையினைப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெற்றிருக்கின்றார். தமிழ் இலக்கிய உலகிலும் நாட்டு விடுதலைக்காகவும் தொழிலாளர் நலனுக்காகவும் தொண்டாற்றிய பெருமகனார் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதன் அவர்கள் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெறும் தொண்டாற்றிய பெருமகனார் ஆவார்.



ஆற்றலால், அறிவுத்திறத்தினால் மக்களுக்குச் செய்த சேவையால் மக்கள் நெஞ்சில் நிலைபெற்று புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தப் பெருமக்களின் பெயரில் உருவாக்கப்பட்ட இவ்விருது களைத் தகுதியானவர்களுக்கு வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்து, விருதுகள் வழங்கப்படுகின்றன.



விருது பெற்ற பெரியோர்கள் அனைவரையும் பாராட்டுவதிலும் வாழ்த்தி வணங்குவதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்றார்.



மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம.வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினர்.



முன்னதாக, செய்தி–சுற்றுலாத்துறை அரசுச் செயலாளர் திரு.வ.ராமதாஸ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், தமிழ்ச் சான்றோர்கள், கல்லூரி, பள்ளி மாணவ–மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விழா நிகழ்ச்சிகளை செய்தி – மக்கள் தொடர்புத்துறை இணைஇயக்குநர் (நிர்வாகம்) திரு. ஆர்.பரதன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

நிறைவாக செய்தி – மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.எஸ்.எம். சண்முகசுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.

❖ ❖ ❖

## தமிழ்நாடு அரசின் சார்பில்

# மகாத்மா காந்தியடிகளின் 136ஆவது பிறந்தநாள் விழா



நம் இந்தியத் திருநாடு, சுதந்திரம் பெற, தன்னலம் கருதாது போராடிய வீரர் மகாத்மா காந்தியடிகள் ஆவார்கள்.


'அகிம்சை' எனும் ஆயுதத்தைக் கையிலேந்தி, ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றுத் தந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள்.

உலக அரங்கில், "மகாத்மா" எனப் பெயரெடுத்த ஒப்பிலா மாமனிதரான காந்தியடிகள், நாமெல்லாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அரும்பாடுபட்டவர். எளிமையைக் கைப்பிடித்தவர்; வன்முறையை நாடாதவர்; இந்தியத் திருநாட்டின் இணையற்ற தலைவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார்கள். மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உலக நாடுகள் பின்பற்ற நினைக்கும் இந்த இனிய கால கட்டத்தில், உலக அரங்கில் ஒரு உதாரண புருஷராக நம்மிடையே இன்றும் வாழ்ந்து வரும், மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 136ஆவது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசின் சார்பாக, சென்னையில் 2.10.2004 முதல் 4.10.2004 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### மகாத்மா காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மாலையணிவிப்பு

2.10.2004 அன்று காலை 8.00 மணியளவில் மெரினா கடற்கரையில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ.ராமமோகன்ராவ் அவர்கள், மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.





அதனைத் தொடர்ந்து இராட்டை மூலம் நூல் நூற்கும் நூற்பு வேள்வி நடைபெற்றது. ஏராளமானவர்கள் நூற்பு வேள்வியில் பங்கேற்று நூல் நூற்றனர்.

மேலும், சர்வோதய சங்கம் மற்றும் கல்லூரி, பள்ளிகள் மூலம் நடத்தப்பட்ட பஜனை மற்றும் பிரார்த்தனை பாடல்கள் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

**சைக்கிள் பேரணி :**

தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை மற்றும் உலக அமைதி ஆகியவற்றை வலியுறுத்தி, கல்லூரி–பள்ளி மாணவர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணியை மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்தார். சைக்கிள் பேரணியில் நூற்றுக்கணக்கான கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

**கண்காட்சி :**

சென்னை காந்தி மண்டபத்தில் மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அரசின் திட்டப் பணிகளின் செயல்பாடுகள் குறித்த, தமிழக அரசு மற்றும் இந்திய கள விளம்பரத் துறை சார்பாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்கள் திறந்து வைத்தார்.

மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த பல்வேறு குறிப்புகள், காந்தியடிகள் அவர்களின் பல்வேறு காலகட்ட அரிய புகைப்படங்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறைகளின் திட்டப் பணிகளின் விவரங்கள் ஆகியவைகள் கண்காட்சிகளில் இடம் பெற்றிருந்தன. இந்தக் கண்காட்சிகள் 2.10.2004 முதல் 4.10.2004 வரை 3 நாட்கள் நடைபெற்றது.

இக்கண்காட்சிகளை ஏராளமான பள்ளி – கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் கண்டு இன்புற்றனர்.

காந்தி மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் 12.00 மணி வரை சர்வோதயா சங்கம், கல்லூரி, பள்ளி மாணவ–மாணவியர்கள் மூலம் நாட்டுப்பற்றை வலியுறுத்தும் பஜனைப் பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள் மற்றும் நூல் நூற்பு வேள்விகள் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் விழா :**

2.10.2004 அன்று மாலை 5.00 மணிக்கு, காந்தி மண்டப கலை அரங்கில், மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ.ராமமோகன்ராவ் அவர்கள், மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றிப் பேசும்போது, "மகாத்மா காந்தியடிகள் கடைபிடித்த சத்தியம், அகிம்சை மற்றும் சமூக சேவை ஆகிய 3 தர்மங்களை அனைத்து மாணவ–மாணவியர்கள், பொதுமக்கள் நினைவு கூற வேண்டும். வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும். தன்னம்பிக்கையையும், சுய மரியாதையையும் வளர்த்துக் கொண்டு, இந்தியா வலுப்பெறும் போது உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இந்தியாவின் பெருமை உயரும்" என்றார்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வரவேற்புரையாற்றிப் பேசும் போது, "வையகம் போற்றும் வரலாற்று நாயகர் மகாத்மா காந்தியடிகள், அன்பு, அகிம்சை, அறநெறி, தியாக வாழ்வு, அமைதியான போராட்ட முறை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த ஒரு உத்தமத் தலைவர். ஒவ்வொரு கிராமமும்

ஒரு தனிக்குடியரசு போன்று திகழ வேண்டுமென்பது மகாத்மா காந்தியடிகளின் எண்ணமாகும். அந்த மகான் கண்ட கனவுகளை நிறைவேற்றுகின்ற ஒப்பற்ற முதலமைச்சராக விளங்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், *'நமது கிராமம்'* திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் *'நமது கிராமம்'* திட்டம் செயல்வடிவம் பெறும் போது, மகாத்மா காந்தியடிகளின் கனவு நனவாகிவிடும் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்" என்றார்.




மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமை உரையாற்றிப் பேசும்போது "மகாத்மா காந்தியடிகள் நாமெல்லாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காக, அயராது பாடுபட்டவர். நாட்டின் முன்னேற்றமே கிராமப்புறத்தில்தான் உள்ளது என்ற காந்தியடிகள் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் *'நமது கிராமம்'* எனும் ஒரு புரட்சித் திட்டத்தை அறிவித்துள்ளார்கள்" என்றார்.

**பரிசளிப்பு :**

மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்கள், இளைஞர்கள் உட்பட மொத்தம் 34 நபர்களுக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ.ராமமோகன்ராவ் அவர்கள் பரிசுகளையும், பாராட்டுச்சான்றிதழ் களையும் வழங்கினார்கள்.

விழாவில், தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, மத நல்லுணர்வை வலியுறுத்தும் வகையில் கல்லூரி மாணவியர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழா நிகழ்ச்சிகளை, செய்தி – மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (நிருவாகம்) திரு. ஆர். பரதன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

விழாவின் இறுதியாக, செய்தி–மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.வ.கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.



மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் திரைப்படம் திரையிடப்பட்டது.

ஏராளமான பொதுமக்கள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.

மாமனிதர் மகாத்மா காந்தியடிகள் உலகை விட்டு மறைந்திருக்கலாம்; ஆனால், மனித குலம் தழைக்க அவர் விட்டுச் சென்ற சத்தியம், அகிம்சை, மனிதநேயம் மற்றும் சமூக சேவை போன்ற கொள்கைகள் நம்மை விட்டு என்றும் மறையாது, காந்திய வழியைப் பின்பற்றி நடப்போம்.

* * *

# அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களுக்குச் சலுகைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 12.10.2004



நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குச் சிறப்பான வாழ்க்கைத் தரம் அமைத்துக் கொடுத்தால்தான் அவர்கள் ஊக்கத்துடன், முழுத் திறமையுடன் பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு. அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் முதலிய பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தி அவர்களுக்கு நல்ல பல சலுகைகள் வழங்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு எப்போதுமே உண்டு. அப்போதுதான் அவர்களின் உற்பத்தித் திறன் மேம்பட்டு, அவர்கள் மக்களுக்குப் பயனுள்ள வகையில் சேவை செய்ய முடியும். இது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் பெரிதும் விரும்பியபோதிலும், 2001–ஆம் ஆண்டு மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் பயனுக்காக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாத அளவுக்கு முந்தைய தி.மு.க. அரசு தன்னுடைய தவறான நிருவாகத்தின் வாயிலாக மோசமான நிதி நிலைமையை உருவாக்கி விட்டுச் சென்றது.

முந்தைய தி.மு.க. அரசு பதவியை விட்டு இறங்கிய போது, அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டு இருந்தது. 2000–2001–ஆம் ஆண்டில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்கி, கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைக்கூட செலுத்த முடியாத அளவுக்கு அவற்றின் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. எரிபொருள் வழங்கிய எண்ணெய் நிறுவனங்களுக்குக்கூட அவற்றால் தொகை வழங்க முடியவில்லை. அவற்றின் நிலைமை அவநம்பிக்கையூட்டுவதாக இருந்ததோடு, இக்கழகங்கள் மூடப்படுகின்ற நிலையில் இருந்தன. 31.3.2001 அன்று நிலவரப்படி அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் சேர்ந்து வந்த இழப்பு (–) 2031.19 கோடி ரூபாய் என்ற மிக உயரிய அளவில் இருந்தது. 2000–2001–ஆம் ஆண்டில் மட்டும் ஏற்பட்ட இழப்பு (–) 228.87 கோடி ரூபாய் ஆகும். சம்பளங்கள், எரிபொருள் செலவு போன்ற நடப்பு இயக்க செலவுகளைக்கூட செய்ய முடியாத அளவுக்கு நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சம்பளங்கள்கூட வழங்க முடியுமா என்ற கடுமையான ஐயப்பாடு எழுந்தது.

என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமையும் கூட அதேபோன்று மோசமாகத்தான் இருந்தது. 2000–2001ஆம் ஆண்டு வரையில் முந்தைய அரசு, அரசு வழங்க வேண்டிய மானியங்கள் என்று காட்டி நிலைமையை மூடி மறைத்தது. மானியம் வழங்கப்படாமலே நிலுவையில் இருந்தது. இதன் விளைவாக என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று சரியான நிலைமையை வெளிக் கொணர்ந்தபோது, 2001–2002–ஆம் ஆண்டில் (–) 4,851 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. முந்தைய தி.மு.க. அரசின் தவறான நிருவாகத்தின் காரணமாக தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பிறரிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான உரிய தொகையை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. பணியாளர்களுக்கான சம்பளம், நிலக்கரி வகையிலான செலவு மற்றும் இதரச் செலவுகள் போன்ற வாலாயமான செலவுகளுக்குப் பணம் வழங்க இயலவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டையே அறவே நிறுத்தக் கூடிய ஒரு நிலை நிலவியது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் இதரப் பயன்களை உடனடியாக வழங்க நான் விரும்பியபோதிலும், மாதாந்திரச் சம்பளப் பட்டுவாடா மற்றும் இதர இயக்க செலவுகளைக்கூட செய்ய முடியாத அளவுக்கு நிலைமை மிகக் கடுமையாக இருந்ததால் நான் விரும்பிய வண்ணம் அவர்களுக்குச் சலுகைகள் எதனையும் வழங்க இயலாமல் போயிற்று. அதற்குப் பிறகு என்னுடைய அரசு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் நிதி நிலைமைகளைச் சீரமைக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

2000–2001ஆம் ஆண்டில் (–) 228.87 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொண்ட அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு, 2003–2004–ஆம் ஆண்டில் சொற்ப அளவாக 2.38 கோடி ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லாம் காரணம் என்னுடைய அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகள்தான். முந்தைய தி.மு.க. அரசின் மோசமான நிருவாகத்தின் காரணமாக ஏற்பட்ட சீரழிவிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகங்களை மீட்டு, அச்சுறுத்தலுக்குள்ளான தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க என்னுடைய அரசு உளப்பூர்வமாக மேற்கொண்ட முயற்சிகளை அனைத்துப் பணியாளர்களும் உணர்வார்கள். தொழிலாளர்களும், பணியாளர்களும் நிலைமையின் கடுமையைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் அவர்களுக்கு உண்மையான பயன் கிடைக்கின்ற வகையில் நிலைமையைச் சீரமைக்க என்னுடைய அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு மிகுந்த ஒத்துழைப்பை நல்கினார்கள். அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களும், பணியாளர்களும் அளித்த சிறப்பான ஒத்துழைப்பின் காரணமாக நிலைமை முற்றிலுமாகச் சீரமைக்கப்பட்டு, கடந்த 18 ஆண்டுகளில் முதல் முறையாக 2003–2004–ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஆதாயம் ஈட்டியுள்ளன. இச்சாதனையை எய்த காரணமாக இருந்த பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு அறிவித்த டீசல் விலை உயர்வு காரணமாக இப்போதுகூட அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஆரோக்கியமான நிதி நிலைமைக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது 2004–2005ஆம் ஆண்டில் அரசு போக்கு வரத்துக் கழகங்களை மீண்டும் பாதித்துள்ளது. விலை உயர்வு காரணமாக எழுந்துள்ள இந்தப் புதிய அச்சுறுத்தலை, திறமையான செயல்பாடு, உற்பத்தித் திறன் உயர்வு ஆகியவற்றின் மூலமாக நாம் சமாளித்தாக வேண்டும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் இலாபகரமாக இயங்கி அதன் மூலம் தொழிலாளர்களுக்குக் கூடுதல் பயன்கள் கிடைக்கச் செய்வதற்கான என்னுடைய அரசின் முயற்சிகளுக்கு தொழிலாளர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் 1999–2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட உண்மையான இழப்பு (–) 850.65 கோடி ரூபாய் ஆக இருந்தது. 2000–2001ஆம் ஆண்டில்

இது (–) 1,055.34 கோடி ரூபாயாக இருந்தது. அரசின் மானியத்தின் மூலமாக இது ஈடு செய்யப்பட்டு விடும் எனக் காட்டப்பட்டது. ஆனால், உண்மையில் அவ்வாறு மானியம் வழங்கப்படவில்லை. இந்த சேர்ந்து வந்த இழப்புகளை 2001–ஆம் ஆண்டு மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவற்றை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. இதன் விளைவாக, முந்தைய அரசு உண்மையில் மானியம் எதுவும் வழங்காமலேயே, ஆனால் வழங்கப்படுவதாகச் சொல்லி ஈடு செய்யப்படும் என காட்டப்பட்டு சேர்ந்து வந்த இழப்புகள் அனைத்தையும் 2001–2002–ஆம் ஆண்டில் இவ்வரசு சரி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முந்தைய ஆண்டில் சேர்ந்து வந்த உண்மையான இழப்பையும் சேர்த்து, 2001–2002–ஆம் ஆண்டில் என்னுடைய அரசு சமாளிக்க வேண்டியிருந்த மொத்த இழப்புத் தொகை (–) 4,851 கோடி ரூபாய் ஆகும். 2002–2003–ஆம் ஆண்டில் என்னுடைய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக அந்நிலைமையிலிருந்து மீண்டு வர முடிந்தது. தி.மு.க. அரசால் மத்திய அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் விடப்பட்ட நிலுவைத் தொகை 1,962 கோடி ரூபாயைக் கொடுத்துத் தீர்க்க என்னுடைய அரசு ஏற்பாடு செய்தது. வருவாயைப் பெருக்குவதற்கான நடவடிக்கையையும் நாங்கள் மேற்கொண்டோம். இந்த நடவடிக்கைகளின் பயனாக 2002–2003–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் 112.57 கோடி ரூபாய் நிகர ஆதாயம் ஈட்ட முடிந்தது.

2003–2004–ஆம் ஆண்டில் நிலவிய மோசமான பருவ நிலையின் காரணமாகவும், அதனையடுத்து கடும் வறட்சி ஏற்பட்டு குறிப்பாக புனல்மின் நிலையங்களின் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு மீண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் (–) 1,166.42 கோடி ரூபாய் நஷ்டத்தை சந்திக்க வேண்டி இருந்தது. 2004–2005–ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களின் நீர் இருப்பு சீரடைந்து நிதி நிலைமையும் மேம்படும். இவ்வாறாக, முற்றிலும் நம்பிக்கையற்ற நிலைமையிலிருந்து மீண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட இழப்புகளைத் தமிழ்நாடு மின்சார வாரியம் கணிசமான அளவுக்கு ஈடு செய்துள்ளது. முந்தைய தி.மு.க. அரசு செலுத்தாமல் விட்டதால் ஏற்பட்ட நிலுவைப் பொறுப்புகள் அனைத்தும் கொடுத்துத் தீர்க்கப்பட்டு விட்டன. திவாலான நிலைமையிலிருந்து மீட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் புதிய வளர்ச்சிப் பாதையில் நடைபோட என்னுடைய அரசு காரணமாக இருந்தது. மத்தியில் புதியதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள அரசு, நிலக்கரி விலைகளை உயர்த்தியதன் காரணமாக 2004–2005–ஆம் ஆண்டில் செலவு 167 கோடி ரூபாய் மேலும் உயர்ந்து, அதன் விளைவாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமைக்குப் புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இருந்தாலும், நாங்கள் ஏற்கெனவே மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவும், என்னுடைய அரசு உறுதியளித்த மானியங்களை ரொக்கமாக வழங்கியதன் காரணமாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமையில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக, என்னுடைய வழிகாட்டுதலின் பேரில் என்னுடைய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளின் பயனாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவை சந்தித்து வந்த மிக மோசமான நிதி நிலைமை கணிசமான அளவு சீரடைந்துள்ளது.

நிதி நிலைமையை சீரமைப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அரசோடு ஒத்துழைத்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஒத்துழைப்பு மட்டும் இல்லாது போயிருந்தால், இந்த அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்டி புதுவாழ்வு அளித்திருக்க முடியாது.

உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருந்த காரணத்தினால், அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளங்கள் தொடர்பாக முன்னதாகவே உடன்படிக்கை செய்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நேர்விலும்கூட அண்மைக்காலம் வரையில் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருந்ததால் ஊதியம் தொடர்பாக தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்த முடியாமல் போய்விட்டது. இவற்றை நான் முழுமையாகப் பரிசீலித்து, ஊதிய உடன்படிக்கைகள் தொடர்பாக முறையான பேச்சு வார்த்தைகள் தொடங்குவதை எதிர்நோக்கி, இந்த நிறுவனங்களின் நிதி நிலைமையைச் சீரமைத்து அவற்றின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு அளப்பரிய

ஒத்துழைப்பு நல்கிய அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டும் என்று முடிவு எடுத்துள்ளேன். எனவே, அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் 1.9.2003–ஆம் நாளிலிருந்து முன் தேதியிட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் இடைக்கால நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த இடைக்கால நிவாரணம் ஒரு இடைக்கால் ஏற்பாடுதான். ஊதிய உயர்வு தொடர்பான பேச்சு வார்த்தையின் முடிவில் ஏற்படுகின்ற உடன்படிக்கையில் இத்தொகை சரிக்கட்டப்படும். ஊதிய உயர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகளைத் தொடங்க அரசு போக்குவரத்துக் கழகங்களும் தமிழ்நாடு மின்சார வாரியமும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். ஊதிய உடன்படிக்கை தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடிவு அடைகிற வரையில் காத்திருக்காமல் இடைக்கால நிவாரணம் வழங்குவது தொடர்பாக நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பை அனைத்துத் தொழிலாளர்களும், ஊழியர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனில் இவ்வரசு கொண்டுள்ள நல்ல எண்ணத்தை தெளிவுபடுத்துகிறது.

மாதம் ஒன்றுக்கு ரூ.250 என்ற வீதத்தில் வழங்கப்படும் இந்த இடைக்கால நிவாரணத்தின் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 34.52 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இத்தொகை 2004–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சம்பளத்தோடு சேர்த்து வழங்கப்படும். 1.9.2003 முதல் 30.9.2004 வரையிலான 13 மாத காலத்திற்குரிய நிலுவைத் தொகையான 37.40 கோடி ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும். இதனால், அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 1,15,000 தொழிலாளர்களும், பணியாளர்களும் பயன் பெறுவர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் மாதம் ஒன்றுக்கு ரூ.250 இடைக்கால நிவாரணம் வழங்குகிற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 26.10 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இந்த இடைக்கால நிவாரணத் தொகை 2004–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், சம்பளத்தோடு சேர்த்து வழங்கப்படும். 1.9.2003 முதல் 30.9.2004 வரையிலான 13 மாத காலத்திற்குரிய நிலுவைத் தொகையான 28.28 கோடி ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும். இதனால், தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த 87,000 தொழிலாளர்களும், பணியாளர்களும் பயன் பெறுவர்.

பொதுமக்கள்தான் நம்முடைய உண்மையான எஜமானர்கள் என்பதைத் தொழிலாளர்களும், பணியாளர்களும் உணர வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் பொதுமக்களுக்கு இடையூறுகள் விளைவிக்கக் கூடாது என்ற கோட்பாடு 2001–ஆம் ஆண்டில் நிலைநிறுத்தப் பட்டது. எனவே, தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுடனான நல்லுறவை மேம்படுத்தும் என்னுடைய அரசின் ஒரு அனுகூலமான நடவடிக்கையாக, 31.12.2000–க்கு முன்னர் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களின் நேர்வில், குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டவர்கள் நீங்கலாக, ஏனையோரைப் பொறுத்த வரையில் அவர்களது வேலை நிறுத்தக் கால அளவை, அவர்களுக்குத் தகுதி உடைய விடுப்பாகக் கருத முடிவு செய்துள்ளேன்.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் கடும் நிதி நெருக்கடியை சந்தித்து வந்ததைக் கருத்தில் கொண்டு, அந்நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக அவற்றின் நிதி நிலைமையை எப்படியாவது சீரமைப்பதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்தது. அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காவிட்டால், அந்நிறுவனங்கள் திவாலாகி அவற்றை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். இந்தச் சீரழிவு நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக என்னுடைய அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இருந்தது. அத்தகைய தொகுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பணியாளர்கள் ஒரு ஆண்டில் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்து, அதற்கு ஈடாக ரொக்கத் தொகைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டு வந்த வசதிக்குத் தற்காலிக கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. தொழில் தகராறு காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணம் பெறுவது சம்பந்தமான கட்டுப்பாடு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. அரசு

போக்குவரத்துக் கழகங்களிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகிற செயல்பாட்டு பாதுகாப்பும், உயரிய செயல் திறனும் வேண்டியுள்ள பணிகளின் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என தொழிலாளர்களும், பணியாளர்களும் தற்போது கோரிக்கை வைத்துள்ளார்கள். இனி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஒரு ஆண்டில் தங்களுடைய கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பில் 15 நாட்களை சரண் செய்து அதற்கு ஈடாக ரொக்கத் தொகையை, ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் பெற்றுக் கொள்ள அனுமதிக்க நான் முடிவு செய்துள்ளேன். இந்த அமைப்புகளின் ஒட்டு மொத்த உற்பத்தித் திறன் மற்றும் செயல்பாடு மேம்பட்டு, அதன் வாயிலாக அவர்கள் பண பலன்கள் பெற உதவும் இந்த நடவடிக்கையை அனைத்துத் தொழிலாளர்களும், பணியாளர்களும் வரவேற்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

கடந்த 18 ஆண்டுகளில் முதல் முறையாக 2003–2004–ஆம் நிதி ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் ஈட்டியுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், மோசமான பருவ நிலையின் காரணமாக 2003–2004–இல் இழப்பு ஏற்பட்டது. ஆனால், 2004–2005–ஆம் ஆண்டில் இவ்வாரியத்தின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் நஷ்டத்திலிருந்து மீள்வதில் அவற்றின் தொழிலாளர்களும், பணியாளர்களும் மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்கள். நிதி நிலைமை முற்றிலுமாக சீரடையவில்லை; தவிரவும், டீசல் மற்றும் நிலக்கரியின் விலை உயர்வுகள் காரணமாக செலவு மேலும் அதிகரித்து, இந்த நிறுவனங்களின் நிதி நிலைமை பாதிக்கப்படும் என்ற போதிலும்கூட, தொழிலாளர்களும், பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்ந்து பணியாற்றி, தங்களுடைய நிறுவனங்களின் உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் மேம்படுத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே, நான் பெருந்தன்மையான ஒரு முடிவை எடுக்க தீர்மானித்துள்ளேன். அதன்படி, கடந்த ஆண்டில் வழக்கமான முறையில் 8.33 சதவிகித போனஸ் பெற்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 2003–2004–ஆம் ஆண்டிற்கு 8.33 சதவிகித போனசுடன் 1.67 சதவிகித கருணைத் தொகையும் சேர்த்து மொத்தம் 10 சதவிகித தொகை வழங்கப்படும். இதனால், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 34.38 கோடி ரூபாயும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 23 கோடி ரூபாயும் செலவு ஏற்படும். இந்த 8.33 சதவிகித போனஸ் மற்றும் 1.67 சதவிகித கருணைத் தொகை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 3.5 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற நான் உறுதி பூண்டுள்ளேன். தமிழ்நாடு பல துறைகளில் விரைவான முன்னேற்றம் கண்டு வருகிறது. உற்பத்தி, உற்பத்தித் திறன் செயல்பாடு மற்றும் செயல் திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதன் மூலம் மேலும் விரைவான வளர்ச்சி பெற்று, நிர்ணயித்த இலக்கை எய்த முடியும். அவசியமான போது சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு நிர்ணயித்த இலக்கை நோக்கி முன்னேற பணியாளர்களும், தொழிலாளர்களும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்கி உள்ளனர். அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை நஷ்டத்தில் இருந்து வெற்றிகரமாக மீண்டதற்கு அவற்றின் தொழிலாளர்களும், பணியாளர்களும் அளித்த பங்களிப்பை நான் முழு மனதோடு பாராட்டுகிறேன். இந்த முயற்சியில் அவர்கள் காட்டிய முழுமையான அர்ப்பணிப்பு உணர்வையும், நல்கிய ஒத்துழைப்பையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். நம் அனைவரின் ஒன்றுபட்ட முயற்சியின் பயனாக விளைந்த இந்த வெற்றியில் மனநிறைவு அடைந்து நான் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் ஆக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கிய பாதையில் இன்னும் விரைவாக பயணம் செய்ய ஊக்குவிக்கும் வகையில், பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இந்த இடைக்கால நிவாரணம், போனஸ், கருணைத் தொகை மற்றும் இதரச் சலுகைகளை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

❖ ❖ ❖

# காற்று

- கு. அழகிரிசாமி

அந்தத் தெருவில் நூறு வீடுகள் இருக்கும். ஆனால் ஒரு வீட்டில்தான் தெருத் திண்ணை இருந்தது. மற்ற வீடுகள் சிலவற்றில் திண்ணை இருந்தபோதிலும், அது கம்பிக் கதவுக்கு உட்புறமாக இருந்தபடியால், அதைக் கணக்கில் சேர்க்க முடியாது. பெரும்பாலான வீடுகள் திண்ணையில்லாத நவநாகரிக மோஸ்தரிலேயே கட்டப்பட்டவையாகும்.

மேற்படி வீட்டின் தெருத் திண்ணை அக்கம் பக்கங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு ஒரு பாலைவனச் சோலையாக இருந்தது. அவர்கள் தங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தால், ஒரு முக்கால் மைல் வட்டாரத்தில் அந்தத் திண்ணையைத் தவிர வேறு எங்கும் ஒதுங்க முடியாது. இதனால் எப்பொழுது பார்த்தாலும் திண்ணையில் ஐந்தாறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கும். விளையாட்டு என்றால் கூச்சல் இல்லாமல் இருக்குமா? உற்சாகம் மீறியதும், கூச்சலும் கும்மாளமும் அதிகமாகிவிடும். உடனே வீட்டின் உள்ளே இருந்து ஒருவன் ஓடிவருவான். தினந்தோறும் விரட்டியடித்தும் கூட, குழந்தைகள் திரும்பத் திரும்ப வந்து அமர்க்களம் பண்ணுவதைக் கண்டு அவனுக்குக் கோபம் சிரசை முட்டிக் கொண்டிருந்தது. அதனால் கைக்கு எட்டிய குழந்தைகளை அடித்து விரட்டுவான்; எட்டாத குழந்தைகளை வாய்க்கு வந்தபடி திட்டி விரட்டுவான். ஒரு வழியாகத் திண்ணை காலியாகும். ஆனால், இது எவ்வளவு நேரத்துக்கு? அவன் தலை மறைந்தால் போதும், மறுபடியும் திண்ணைக்குக் குழந்தைகள் ஓடி வந்துவிடுவார்கள். அடியையும் மிரட்டலையும் வசவையும் ஒரு பொருட்டாகவே அவர்கள் கருதவில்லை. அதற்குப் பதிலாகத் தங்கள் விளையாட்டின் ஒரு பகுதியாகவே நினைத்து விட்டார்கள் போல் தோன்றியது.



வீட்டுக்குள் வாடகை கொடுத்துக் குடியிருக்கும் ஆசாமி, குழந்தைகளை நிரந்தரமாக ஒழித்துக் கட்டுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு குழந்தையையாவது பயங்கரமாகக் கீழே இழுத்துப் போட்டு, மூச்சுப் பேச்சு அற்றுப் போகும் வரையில் மிதித்துத் துவைக்க வேண்டுமென்பது அவனது நீண்ட நாள் திட்டம். அவ்வாறு செய்தால், தன் கோபமும் தணிந்து சற்று ஆறுதல் பிறக்கும், நாலைந்து நாட்களுக்காவது குழந்தைகள் அந்தப் பக்கம் தலைகாட்டாமல் இருப்பார்கள் என்று நினைத்தான்.

ஒருநாள் அவனுக்கு வேலையில்லை. அதனால் வெளியே போகவேண்டிய அவசியமில்லாமல்,

வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. குழந்தைகள் எப்போது வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டுதான் உட்கார்ந்திருந்தான்.

உரிய காலத்தில் குழந்தைகள் வந்துவிட்டார்கள். வெறுமனே கைவீசிக்கொண்டு வந்தார்கள் நான்கு பேர். இரண்டு சிறுமிகள், இரண்டு கைக்குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு வந்தார்கள். குழந்தைகளைத் திண்ணையின் ஒரு மூலையில் விட்டார்கள். உடனே விளையாட்டும் ஆரம்பமாகி விட்டது. அவர்கள் உலகத்தையே மறந்துவிட்டனர். சொல்ல முடியாத உற்சாகம். அவ்வப்போது தெருவே எதிரொலிக்கும் படியான சிரிப்பு, கைதட்டல். இப்படித் தம்மை மறந்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்த சமயத்தில், சமயம் பார்த்துக் காத்திருந்த ஆசாமி புலிப் பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே வந்தான். வந்த வேகத்தில் ஒரு சிறுவனை இடுப்பில் மிதித்துத் தெருவில் போய் விழும்படி தள்ளினான். ஒரு பெண் குழந்தையின் தலை முடியை வலது கையால் எட்டிப் பிடித்தான். இதைப் பார்த்து மற்ற குழந்தைகள் ஒரே ஓட்டமாக ஓடி மறைந்து விட்டன. தெருவில் வந்து விழுந்த சிறுவன் அழுது கூப்பாடு போட்டுக் கொண்டே எழுந்து, நொண்டி நொண்டி நடந்து கொண்டு தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

குடித்தனக்கார ஆசாமி, அந்தச் சிறுமியின் கூந்தலை வலதுகையிலிருந்து இடதுகைக்கு மாற்றினான். "இனிமேல் இங்கே வராதே! இனிமேல் இங்கே வராதே!" என்று பத்துப் பதினைந்து தடவையாவது சொல்லியிருப்பான்; ஒவ்வொரு தடவையும் குழந்தையின் கன்னத்தில் பொறி பறக்கும்படி அறை விழுந்து கொண்டிருந்தது. அந்த ஐந்து வயதுக் குழந்தை புத்தி பேதலித்துப் போய், அழக்கூட பிரக்ஞையின்றி முகத்தை ஒரு மாதிரி கோரமாக வைத்துக் கொண்டு நின்றது. தெருவோடு சென்ற ஒருவன் வந்து விலக்கியிராவிட்டால், குழந்தையின் மூச்சு நிற்கும் வரையிலும் அடி விழுந்திருக்கும்.

விடுதலைப் பெற்றுத் தன் வீட்டை நோக்கி அடி எடுத்து வைத்தபோதுதான், அதற்கு அடி வாங்கியிருக்கிறோம் என்ற ஞாபகம் வந்தது. அதைத் தொடர்ந்து கன்னம் எரியவும் ஆரம்பித்தது. உடனே "கோ" வென்று அழுதுகொண்டு நாலைந்து வீடுகள் தள்ளியிருக்கும் தன் வீட்டுக்குச் சென்றாள். அதற்குள், சிவந்து தடிப்பேறியிருந்த இடது கன்னம் வீங்கி, இடது கண்ணும் தீக்கங்கு மாதிரி சிவந்து விட்டது. அவளுடைய அழுகுரலைக் கேட்டு எதிரே ஓடிவந்து, "என்ன ? ஏது" என்று விசாரித்த தாயிடம் அவள் விஷயத்தைச் சொல்லவில்லை. சொல்வதற்கு வார்த்தைகளே உருவாகவில்லை. அடியினால் ஏற்பட்ட அதிர்ச்சியும், அனுமதி இல்லாமல் விளையாடப் போனதற்காக அம்மாவும் அடிப்பாள் என்ற பயமும் சேர்ந்து அவள் நாவைக் கட்டிவிட்டன. அவளால் அப்போது அழத்தான் முடிந்தது.

"சனியன்! சொன்னாலும் நிற்காமல் தெருவுக்கு ஓடி ஓடிப் போகுதே!... உனக்கு இதுவும் வேணும்; இன்னும் வேணும்" என்றாள் அம்மா.

கூட விளையாடும் சிறுவர்களில் எவனாவது அடித்திருப்பான் என்பது அவள் எண்ணம். விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று அவள் தெருவுக்கு வந்து, இரண்டு பக்கமும் திரும்பிப் பார்த்தாள். அவளால் எதையுமே அறிந்து கொள்ள முடியவில்லை. தெரு வழக்கம்போலவே இருந்தது. உள்ளே திரும்பி வந்து, "என்ன சனியனே! எங்கே போய் அடி வாங்கிக்கினு வர்ரே; சொல்லித் தொலையேன்!" என்று சீறினாள்.

அப்பொழுதும் குழந்தையால் பேச முடியவில்லை.

"அப்பா வரட்டும். உன்னைத் தூணோடு, சேர்த்துக் கட்டி வைக்கச் சொல்றேன். அப்பொத்தான் நீ வீட்டிலே கெடப்பே" என்று சொல்லிக் கொண்டு, தன் வலக்கையால் குழந்தையின் கூந்தலைப் பிடித்துத் தரதரவென்று உட்பக்கம் இழுத்துக் கொண்டு சென்றாள். உள்ளே கொண்டுபோய் கைக் குழந்தையின் பக்கம் தள்ளிவிட்டு, சமையற் கூடத்தின் புகைக்குள் மறைந்து விட்டாள் அம்மா. அவ்வளவில் சிறுமியின் பயமும் தெளிந்து விட்டது; அழுகையையும் நிறுத்திவிட்டாள். அப்புறம் கைக்குழந்தைதான் புகை எரிச்சல் தாங்க முடியாமல் அழுது கொண்டிருந்தது. சிறுமி அதற்கு விளையாட்டுக் காட்டி, அழுகையை நிறுத்த வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டாள்; முயற்சியும் செய்தாள். ஆனால் குழந்தை அக்காளின் விளையாட்டைக் கண்டு ஏமாந்து விடவில்லை. அதற்கு உடம்பில் என்னென்னவோ கோளாறு. அப்புறம் இந்த

ஆளை மறைக்கும் புகை வேறு. கண்கள் எரிந்து, மூச்சும் திணறியது. வீட்டுக்குள்ளேயே சுற்றிச் சுழன்று வரும் புகைக்கு, அந்தத் தாய், அந்தச் சிறுமி, இந்தக் கைக்குழந்தை ஆகிய மூவருடைய நாசித் துவாரங்களைத் தவிர வேறு போக்கிடம் இல்லை. விளையாட்டுக் காட்ட முயன்ற சிறுமியும் புகையால் திணறினாள். தெருவுக்கு எப்பொழுது போவோம் என்றிருந்தது. இனி ஓடினால் அம்மா கழுத்தை முறித்து அடுப்பில் திணித்து விடுவாள் என்று எண்ணி, அறையின் வாசற்பக்கத்துக்குக் குழந்தையை இழுத்துக் கொண்டு வந்து கொஞ்சம் தாராளமாக சுவாசிக்க முயன்றாள். அங்கே, பக்கத்துக் குடித்தனத்திலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. என்றாலும் அவ்வளவு கனத்த புகையல்ல. சிறுமிக்குக் கொஞ்சம் ஆசுவாசமாக இருந்தது. அந்தச் சின்னஞ்சிறு முற்றவெளிக்கு மேலாகத் தெரியும் வானத்தை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள். அப்பொழுது அவள் மனம் உண்மையில் வானவெளியை நினைத்து ஏங்கவில்லை; திண்ணையை நினைத்துத்தான் ஏங்கியது. 'நாளை முதல் அந்தத் திண்ணைக்குப் போக முடியாதே! போனால் கன்னம் வீங்கும்படியாக அடிவாங்க வேண்டுமே! வீடு திரும்பினால் அம்மா அடிப்பாளே! இனி என்ன செய்வது ? எப்படி உயிர் வாழ்வது ?' என்று அந்தத் தன் ஐந்தாவது பிராயத்திலே எதிர்காலத்தை எண்ணி அவள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். திண்ணை என்றால், அவள் நடக்கத் தெரிந்த நாளிலிருந்து அவளுக்குக் காற்றும் வெளிச்சமும் கொடுத்து வாழ்க்கை இன்பத்தை அளித்து வந்த திண்ணை அது. இப்பொழுது அதுவும் போய்விட்டது. இனி திண்ணையும் இல்லை; காற்றும் இல்லை. வாழ்க்கையின் சந்தோஷம் என்பதும் இருக்க முடியாது. அவளுக்கு ஒரு சமயம், தன் வீட்டில் ஏன் தெருத் திண்ணை வைத்துக் கட்டவில்லை என்றும் தோன்றியது. தன் வீடு எதற்காகத் தெருவிலிருந்து வெகுதூரம் உள்ளே தள்ளி ஒரு மூலையில் இருக்க வேண்டுமென்று தன்னையே கேட்டுக் கொண்டாள். திண்ணை வைத்துக் கட்டாததற்காக அப்பாவிடம் அவளுக்குக் கோபமும் வந்தது. அப்பா வீட்டுக்குச் சாப்பிட வரும்போது, அவரிடமே இதைக் கேட்பது, அழுது, முரண்டு பண்ணி திண்ணை கட்டச் சொல்வது என்று நினைத்தாள். தன்னிடம் பிரியமாக இருக்கும் அப்பன், தன் சொல்லைத் தட்டமாட்டான் என்று அவளுக்கு நம்பிக்கையும் பிறந்தது. அதனால் புகையைத் 'தற்காலிகமாகச் சகித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.'

கற்பகத்தின் தகப்பன் வேதகிரி வாயையும் வயிற்றையும் கட்டிப் பழகியவன்தானே ஒழிய, எந்தக் காலத்திலும் திண்ணை கட்டியவனல்ல. வருஷம் 365 நாளும் தினந் தவறாமல் ஒரு வேளைச் சாப்பாடின்றிப் பட்டினி கிடக்கிறான். பதினான்கு வருஷ சேவைக்குப் பிறகு இப்பொழுது அவன் வாங்கும் சம்பளம் நாற்பத்தெட்டு ரூபாய். மந்தைவெளியின் ஒரு கோடியில், தன் வீட்டுக்கு மூன்று பர்லாங்கு தூரத்திலேயே ஒரு சிறு ஜவுளிக் கடையில் ஒரு சிப்பந்தியாக வேலை செய்து வருகிறான். சம்பளத்தில் பத்து ரூபாய் வீட்டு வாடகைக்குப் போய் விடும். ஆம், பத்து ரூபாய் வாடகை! சென்னை மாநகரத்தில் அந்த வாடகைக்கு வீடும், அந்த வீட்டில் ஒரு குடித்தனமும் இருக்கிறது என்றால், வீட்டையும் வாழ்க்கையையும் பற்றி அதிகம் சொல்ல வேண்டாம். ஒரே ஒரு அறைதான் வீடு. அதற்குள்ளேயே சமையல் பகுதி. மழைக்காலத்தில் ஒழுகாத பகுதி பார்த்து, கூட்டிச் சுருட்டிப் படுத்திருக்க வேண்டும், வீட்டின் முகட்டில் நாழி ஓடுகளிலிருந்து வெயில் காலத்தில் 'தொப்புத் தொப்பு'என்று தேள் விழுவதும் உண்டு. வீட்டுக்கு வாசல்தான் ஜன்னல். முற்றத்தில் குழாய் இருந்ததால் எப்பொழுது பார்த்தாலும் அங்கே ஈரமாக இருக்கும். அந்த வீட்டுக்குள்ளேயே ஐந்தாறு பகுதிகளில் பத்தும் பதினைந்தும் கொடுத்துக் குடியிருப்பவர்கள் அத்தனை பேருக்கும் குழாயும் முற்றமும் பொது. எந்த வீட்டுச் சப்தமும் எல்லா வீடுகளுக்கும் கேட்கும். எந்த வீட்டுப் புகையும் எல்லா வீடுகளுக்கும் பரவி, சுவாசத்திலும் வானத்திலும் கலக்கும். இப்படிப்பட்ட இடத்தில் வேதகிரியின் மனைவி, கற்பகத்தையும், மேலும் நான்கு குழந்தைகளையும் பிரசவித்திருக்கிறாள். அவற்றுள், கற்பகத்தையும் கைக்குழந்தைகளையும் தவிர மற்ற குழந்தைகள் செத்துப் போய்விட்டன. அவள் மட்டும் அந்த உடம்பை வைத்துக்கொண்டு இன்னும் சாகாமல் சமாளித்துக் கொண்டு வருகிறாள்.

வேதகிரி கல்யாணம் பண்ணிக்கொண்டு அந்த வீட்டுக்குக் குடித்தனம் வந்தபோது நிலைமை இவ்வளவு மோசமாக இல்லை. இப்பொழுது குடியிருக்கும் பகுதியோடு, மேலும் ஒரு சிறு அறையையும் சேர்த்தே பத்து ரூபாய் வாடகைக்குப் பிடித்தான். ஆனால் மந்தைவெளியைச் சுற்றி மாடமாளிகைகளுடன் புதுநகரம் ஒன்று ராக்ஷஸ நாகம் போல் வளைத்துக் கொண்டு கிளம்பவே, அவன் குடியிருந்த பகுதிக்கு விலை மதிப்பு உயர்ந்து விட்டது. ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ஆறு

மடங்கு ஏழு மடங்காகக் கூடிவிடவே வாடகையும் உயர்ந்தது. வேதகிரி பத்து ரூபாய்க்குமேல் கொடுக்கத் தனக்குச் சக்தியில்லை என்றான். அப்படியானால் சமையல் பகுதியை மட்டும் தான் பத்து ரூபாய்க்கு விடமுடியும் என்று வீட்டுக்காரன் சொன்னான். வெளியே விரட்டாமல், அம்மட்டுக்காவது இடம் கொடுத்தானே என்று, தன் குடித்தனத்தைச் சமையற்கூடத்துக்குள்ளே ஒடுக்கிக் கொண்டு பக்கத்து அறையைக் காலி செய்து கொடுத்தான். அதன்பின் கற்பகம் பிறந்தாள். பிறந்த நாளிலிருந்து அவள் சமையற்கூடத்தைத்தான் பார்த்திருக்கிறாளே ஒழிய, திண்ணையை, தெரு வாசலை, மரத்தை, மைதானத்தை அனுபவிக்க வில்லை. ஊரின் சுற்றுப்புறம் அழகிய நகரமாக விரிவடைந்ததும், சென்னையின் ஜனத்தொகை பெருகியதும் அவளுக்குப் பெருங் கேடாக முடிந்தது. அவள் அந்த இருட்டறைக்குள் வசிப்பதற்கு, நகரமும், நகரில் வசிக்கும் அத்தனை பேருமே காரணங்கள் என்று சொல்லலாம் போல் இருந்தது.

வேதகிரி மத்தியானச் சாப்பாட்டுக்கு ஜவுளிக் கடையிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாக அவனிடம், கற்பகம் அடி வாங்கி வந்த கதையைச் சொன்னாள் அவன் மனைவி. அதைக் கேட்டதும் அவன் குழந்தையை வெளியே முற்ற வெளிக்கு அழைத்து வந்து வெளிச்சத்தில் நிறுத்திப் பார்த்தான். வீங்கிச் சிவந்த கன்னத்தைப் பார்த்ததும் அவன் கண்கள் கலங்கி விட்டன.

"இந்தச் சனியன் ஒரு நிமிசம் வீடு தங்க மாட்டேங்குது. 'குழந்தையைப் பார்த்துக்கொ'ன்னு விட்டுட்டு அந்தப் பக்கம் திரும்பினேன் அவ்வளவு தான், மாயமா மறைஞ்சிட்டா. இவளை உசிரோட வச்சிக் கொளுத்தினாத்தான், என் மனசு ஆறும்..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போது,

"போதும்!... போய் வேலையைப் பார்" என்று அவள் வாயை அடைத்துவிட்டு, கற்பகத்தைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் போனான் வேதகிரி. "யார் அடிச்சது?" என்று அவளை அன்பாதரவுடன் கேட்டான்.

திண்ணையில் நடந்த நிகழ்ச்சியை அப்படியே சொன்னாள் கற்பகம்.

அடித்தவனை என்ன செய்ய முடியும்? அவன் வீட்டுத் திண்ணை. அங்கே போய் விளையாடினால் அவன் எதுவும் செய்வான். யார் கேட்க முடியும்? அதற்காகக் குழந்தையை மனைவி சொல்வதுபோல வீட்டுக்குள்ளே கட்டிப்போடுவதா? 'என்ன பாவம் பண்ணினயோ எனக்குக் குழந்தையாப் பிறந்தே!' என்று மகளைப் பார்த்து நொந்து கொண்டே அவளையும் கூட உட்கார வைத்துக்கொண்டு சாப்பிட்டான். வாரத்துக்கு ஒருநாள் விடுமுறை தினத்தன்று தன்னால் சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம்கூட அந்த வீட்டுக்குள் உட்கார்ந்திருக்க முடியாதிருக்கும்போது, கற்பகம் வருஷம் முழுவதும் அங்கேயே எப்படி அடைபட்டுக் கிடப்பாள் என்று நினைத்தான். மகளுக்கு எந்த வகையில் விடுதலை அளிக்கமுடியும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தும் அவனுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. ஏதோ அற்ப சாந்தியாகவாவது இருக்கட்டும் என்று கடைக்குத் திரும்பும்போது கற்பகத்தையும் அழைத்துக் கொண்டு போய், ஒரு டீக்கடையில் ஒரு அணாவுக்குப் பக்கடாப் பொட்டலம் வாங்கிக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினான். கற்பகம் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அந்தத் திண்ணையில் குழந்தைகள் வழக்கம்போல் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். ஆனால், தானும் போய் விளையாட வேண்டுமென்று அவள் நினைக்கவில்லை; நேரே வீட்டுக்கு வந்துவிட்டாள்.

அன்றிலிருந்து கற்பகத்தின் சிறைவாசம் ஆரம்பமாகிவிட்டது. வீட்டைவிட்டு எங்கும் போகக் கூடாது என்று தாய் கண்டிப்பாகச் சொல்லித் தடுத்து நிறுத்திவிட்டாள். மிஞ்சிப் போனால், தெரு வாசலுக்கு வந்து சிறிது நேரம் நிற்கலாம்; அதற்குமேல் அடி எடுத்து வைக்க அனுமதியில்லை. யாருக்கும் சொந்தமில்லாத தெருவுக்குக் கூட அவள் போய் விளையாட முடிய வில்லை. அந்தச் சின்னத் தெருவிலும் கார், டாக்ஸி, சைக்கிள் முதலிய வாகனங்களின் போக்குவரத்து அதிகமாக இருந்ததால், அங்கே போகக் கூடாது என்றும் அம்மா எச்சரித்திருந்தாள்.

கற்பகத்துக்கு இரவும் பகலும் திண்ணையைப் பற்றிய கனவுதான். தன் வீட்டில் தெருவைப் பார்த்து ஒரு திண்ணை இருக்க வேண்டும்.

அப்பா எப்பொழுது கட்டிக் கொடுப்பார்? அப்பாவிடம் கேட்டதற்கு அவர் ஒரு பதிலும் சொல்லாமல் சிரித்தார். வற்புறுத்திக் கேட்ட பிறகு, "குழந்தே! உனக்கு என்ன தெரியும்? திண்ணை கட்டவும் வீடு கட்டவும் சக்தி இருந்தால் நாம் ஏன் இப்படி இருக்கிறோம்?" என்று 'அர்த்தமில்லாமல்' ஏதேதோ சொல்லுகிறார். அவளுக்கு

ஒன்றுமே புரியவில்லை. நாலைந்து நாட்களுக்குப் பிறகு, அடி பட்டாலும் பரவாயில்லை, பழைய திண்ணைக்கே போய் விளையாடலாம் என்று ஒரு ஆசை பிறந்தது. ஆனால் அந்த அற்ப ஆசை நீடிக்கவில்லை. பயம் ஆசையைக் கருக்கிவிட்டது. கடைசியில் வீடே கதி என்று, காற்றும் வெளிச்சமும் இல்லாத அறையில் புகைமூட்டத்துக்கு நடுவில் திக்குமுக்காடிக் கொண்டு கிடந்து தவித்தாள். சோற்றுக்குத் தரித்திரம் ஏற்படுவது போய், காற்றுக்கும் தரித்திரம் ஏற்பட்டு விட்டது. சரியான ஆகாரமின்றி, காற்றடைத்த பையாக அலைந்து திரிந்த கற்பகம், இப்போது காற்றுக்கும் வழியின்றித் திணறினாள்.

நாட்கள் செல்லச் செல்ல அவள் முகத்தில் இருள் படர்ந்தது. கண்கள் ஆழத்தில் அமுங்கிக் கொண்டிருந்தன. உடம்பும் மெலிந்தது. சரியாகச் சாப்பிடக்கூட அவளால் முடியவில்லை. தன்னை வீட்டுக்குள் போட்டு அடைக்கும் அம்மாவும், எந்நேரமும் நச்நச்சென்று அழுது கொண்டிருக்கும் தம்பியும், திண்ணை கட்டித் தராமல் ஜால்ஜாப்புச் சொல்லும் தந்தையும் தன்னைக் கொல்ல வந்த எமன்களாகவே அவளுக்குக் காட்சி அளித்தார்கள். அவளுடைய பொறுமை எல்லை கடந்து விட்டது. பயந்த சுபாவம் மாறி, திமிற ஆரம்பித்தாள். ஒருநாள் அம்மாவுக்குத் தெரியாமல் பழைய திண்ணைக்கே ஓடிவிட்டாள்.

நாள் கணக்கில் யோசித்த வேதகிரிக்கு ஒரு நாள் திடீரென்று மார்க்கம் புலப்பட்டது. அதனால் பரம சந்தோஷத்தோடு கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பினான், ஒரு நல்ல நாள் பார்த்து, கற்பகத்தைப் பக்கத்துத் தெருப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட முடிவு செய்தான்.

ஒரு பிரதான சாலையைக் கடந்து செல்ல வேண்டும் என்பதைத் தவிர, பள்ளிக்கூடம் அருகாமையிலேயே இருந்தது. மத்தியானம் தர்மச் சோறும் போடுகிறார்கள். கற்பகத்துக்கு நல்ல காலம் பிறந்து விட்டது என்று எண்ணிச் சந்தோஷப்பட்டவனாய், மனைவியிடமும் விஷயத்தைச் சொன்னான். மகளின் ஓடுகாலித் தனத்தை ஒடுக்குவதற்கு அது ஒரு நல்ல உபாயம் தான் என்ற நினைப்பில், வேதகிரி சொன்னதை அவள் ஆமோதித்தாள்.

பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால்தான் இவளுடைய கொட்டம் ஒடுங்கும். எந்த நேரமும் இதுக்கு யாரால் காவல்



காக்க முடியும் ? அப்படியாவது தொலையட்டும்", என்றாள் மனைவி.

நல்ல நாளில், கற்பகத்தைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போனான் வேதகிரி. கற்பகத்தை ஒரு மாணவியாகச் சேர்த்துக் கொண்டார்கள். பிரவேசக் கட்டணத்துக்காக ஒரு ரூபாய் செலவாயிற்று. வேறு செலவில்லை. நாலைந்து நாளில் புத்தகம் வாங்கித் தருவதாக ஆசிரியரிடம் சொன்னான் வேதகிரி. அப்புறம் கற்பகத்தைப் பார்த்து, "பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வரணும். பக்கத்து வீட்டுப் பசங்களோடு வந்துவிடு. ரோட்டில் கார், பஸ் போகும் , பார்த்து வரணும் கற்பகம்" என்று சொல்லி விட்டுக் கடைக்குப் போய்ச் சேர்ந்தான்.

கற்பகத்தின் வாழ்வில் உண்மையிலேயே ஒரு புதுயுகம் ஆரம்பமாகிவிட்டது. விடுமுறை நாட்களில் கூட பள்ளிக்கூடம் போனால் தேவலை என்று நினைத்தாள். வீட்டில் திண்ணை இல்லாத குறை, அவளுக்கு அப்பொழுது குறையாகவே படவில்லை. குறித்த நேரத்தில் பள்ளிக்கூடம் போய், குறித்த நேரத்தில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்தது என்று தாயும் தகப்பனும் மூச்சு விட்டார்கள்.

புதியதாகக் கிடைத்த விடுதலையினால் கற்பகத்தின் உற்சாகம் பொங்கி வழிந்தது. பள்ளிக்கூடம் போவது என்பது அவளுக்கு ஒரு இன்ப போதையாகவே இருந்தது. ஐந்து மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு

வராமல், எங்காவது தெருவில் சுற்றித் திரியலாம் என்று தினமும் ஆசைப்படுவாள். கஷ்டத்திலிருந்து நீங்கிச் சுகம் பெற்றதும், சுகத்தை மென்மேலும் பெருக்குவதற்கே அவள் உள்ளம் விரும்பியது. இந்த நிலையில் ஒரு நாள் அவளுக்குப் பழைய ஞாபகம் ஒன்று வந்தது– ஏழெட்டு மாதங்களுக்கு முன், தன்னை அப்பாவும் அம்மாவும் சாந்தோம் கடற்கரைக்கு அழைத்துச் சென்றதையும், ஓடியாடி விளையாடுவதற்கு அங்கே கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் இடம் இருந்ததையும், "குளுகுளு" என்று காற்று வீசிக் கொண்டிருந்ததையும், நினைவு கூர்ந்தாள். அவளுக்குத் தெரிந்த வரையில் சாந்தோம் கடற்கரை ஒன்றுதான் வாழ்க்கைக்கு ஏற்ற இலட்சிய உறைவிடமாக இருந்தது. அங்கே குறுக்குச் சுவர்கள் இல்லை. எவ்வளவு தூரம் போனாலும், எங்கே விளையாடினாலும் அடிப்பாரும் தடுப்பாரும் இல்லை. புகை என்பதோ அறவே கிடையாது. அதற்குப் பதிலாகக் காற்றும், சுகமும் வேண்டிய மட்டும் இருந்தன. இதையெல்லாம் எண்ணிப் பார்த்த கற்பகம் பள்ளிக்கூடம் எப்பொழுது விடும் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தாள்.

மணிச்சத்தம் கேட்டதோ இல்லையோ, முதல் குழந்தையாகப் புத்தகப் பையுடன் வெளியே ஓடிவந்தாள், பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குத் தெரியாத வண்ணம், தெருவில் இறங்கி, பிரதான சாலையைப் பார்த்து அதிவேகமாக நடந்தாள். சாலைக்கு வந்து சேர்ந்ததும், மூலை திரும்பி, கடற்கரையை இலட்சியமாகக் கொண்டு நடக்கத் தொடங்கினாள். தன்னை யாரும் பார்க்கவில்லை என்ற துணிவு ஒரு புறம், சாலையின் இருமருங்கிலும் கண்ணுக்கு இனிய கட்டடங்கள் நின்ற அழகு ஒருபுறம்.

இதனால் சாவதானமாக நடந்து, தெருக்காட்சியை அணு அணுவாக ரசித்துக் கொண்டு சென்றாள். கண்ணில்பட்ட ஒவ்வொன்றுமே அழகாக, கவர்ச்சியாக, அதிசயமாக இருந்தது. எத்தனை மாடி வீடுகள்! எத்தனை மரங்கள்! எத்தனை பூஞ்செடிகள்! பிரம்மாண்ட மானவையாக ஓடும் பஸ்கள்தான் எத்தனை! இந்தக் கண்காட்சியைத் தன் பெற்றோர் தினமும் தன்னை அழைத்து வந்து காட்டாததற்காக அவர்களைக் கடிந்து கொண்டாள். தனக்கு அப்பாவோ, அம்மாவோ இல்லாமல் இருந்தால், தன்னிச்சையாகச் சாலையில் சுற்றித் திரியலாம் அல்லவா என்று நினைத்தாள்.

நிதானமாக நடந்து போய்க் கொண்டிருந்தாள் கற்பகம். ஒரு பங்களாவின் வாசலில் பூத்து,

> **"உலகம் என்ற ஒன்றைப் பற்றி அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அதுவும் தனக்குச் சொந்தம் என்றே கருதியிருப்பாள்"**

வேலிக்கம்பியின் இடைவெளி வழியாகத் தெரிந்த செந்நிறப் பூ ஒன்றைக் கையை விட்டுப் பறித்தாள். சொல்ல முடியாத ஆனந்தம். அவளுக்கு அந்தச் சாலை முழுவதுமே சொந்தமாகிவிட்டது போன்ற உணர்ச்சி பிறந்தது. உலகம் என்ற ஒன்றைப் பற்றி அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அதுவும் தனக்குச் சொந்தம் என்றே கருதியிருப்பாள்.


கற்பகம் நடந்து கொண்டே இருந்தாள். நாலு திசைகளையும் அவள் கண்கள் துழாவிக் கொண்டிருந்தன. இதனால் எதிரிலோ, பக்கத்திலோ வரும் யாரையும், எதையும் அவள் கவனிக்கவில்லை.

அரை பர்லாங் தூரத்தைக் கடக்கவில்லை. அதற்குள்ளேயே கற்பகத்தின் நடை நின்று விட்டது. நடை மட்டுமல்லாமல் மூச்சும் நின்று விட்டது.

ஒரு பெரிய லாரியில் அடிபட்டு, அந்த க்ஷணத்திலேயே செத்துப் போய்விட்டாள். உருச் சிதைந்து நடுச் சாலையில் இரத்தத்திலே கிடந்தாள் கற்பகம். சுற்றிலும் கூட்டம் கூடி விட்டது, வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. எல்லோரும் கற்பகத்தின் பிணத்தைப் பார்த்துத் துக்கித்தார்கள், இரக்கப்பட்டார்கள். கேவலம், அவள் பிணமாகி விட்டதைத்தான் அவர்களால் பார்க்க முடிந்தது. அதே சமயத்தில் அவள் தன் வாழ்நாளெல்லாம் ஆசைப்பட்ட காற்றாகவும் ஆகிவிட்டாள் என்பது யாருக்குத் தெரியும்?

– "தமிழ்ச் சிறுகதைகள்"
தொகுதி – 2 நூலிலிருந்து
வெளியீடு: சாகித்திய அகாதெமி

* * *



# அண்ணல் காந்தியடிகளின் அமுத மொழிகள்

**ஜனநாயகம்**

★ பொது நலனுக்காக எல்லாப் பிரிவினரின் உடல் வலிமை, பொருளாதார, ஆன்மிக வசதிகளை ஒன்று திரட்டும் கலை–விஞ்ஞானம்தான் ஜனநாயகம்!

**தமிழ்**

★ தென்னாப்பிரிக்காவில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப்போல் வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டைநாளிலும் இந்நாளிலும்கூட பல அறிஞர் இருந்தனர், இருக்கின்றனர் என்பதை அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது. இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டுமானால் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.

**ஆணும் பெண்ணும்**

★ ஆணின் தோழி பெண்; ஆணைப் போலவே பெண்ணுக்கும் அதே சிந்தனைத்திறன் இருக்கிறது. அடிப்படையில் ஆண்களும் பெண்களும் ஒன்றே என்று நான் நினைக்கிறேன். ஆகையால் அவர்களுடைய பிரச்சினையின் சாரமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். இருவரும் ஒரே வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஒரே மாதிரியான உணர்ச்சிகளுடையவர்களாக இருக்கிறார்கள். ஒருவருடைய தீவிரமான உதவியில்லாமல் மற்றொருவர் வாழ முடியாது.

**நீதி**

★ அகிம்சையின் முதல் நிபந்தனை, வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், எல்லாக் காரியங்களிலும் நீதியாக நடப்பதே. மனித இயல்புக்கு இது முற்றிலும் அதிகப்படியானதாக இருக்கலாம். என்றாலும் நான் அவ்வாறு எண்ணவில்லை.

**அன்பு**

★ நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மாத்திரமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை. நம்மை வெறுப்பவர்களிடம் அன்பு கொள்ளுவது ஒன்றே அகிம்சை.

**அகிம்சை**

★ அகிம்சையை விற்றுவிட்டு என் நாட்டின் சுதந்திரத்தை நான் வாங்கவே மாட்டேன் என்பதை எண்ணற்ற தடவைகள் திரும்பத் திரும்ப உலகிற்குச் சொல்லவே நான் விரும்புகிறேன்.

**சுரண்டல்**

★ எந்த வகையிலும் பிறரைச் சுரண்டுவதை அடியோடு விட்டுவிட வேண்டியதை அகிம்சைக் கொள்கை அவசியமானதாக்குகிறது.

**தீண்டாமை**

★ தீண்டாமை, பகுத்தறிவுக்கும், இரக்கம், அன்பு அல்லது அனுதாப உணர்ச்சிக்கும் முரணாக இருக்கிறது.

**தாய்**

★ தேக ஆரோக்கியமுள்ள புத்திசாலிகளான நல்ல குழந்தைகளைத் தேசத்திற்கு அளிக்கும் தாய், தேசத்திற்கு உண்மையாகச் சேவை செய்தவளாகிறாள்.

**மாணவர்**

★ நாட்டின் நாளைய தந்தையராய் உரிமை கொண்டாடும் இன்றைய மாணவர்கள் நல்லோராக வாழவேண்டும். உப்பு தனது உப்புத் தன்மையை இழந்துவிட்டால் அதை வேறு எங்கிருந்து பெற முடியும். □

# இந்தியாவிலேயே முதன்முதலாக கணினிமயமாகும் கிராம ஊராட்சிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தியாவிலேயே முதன்முதலாக கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். மேலும், இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் கணினிமயமாக்கும் புதிய திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

கணினிகளையும், மென்பொருளையும் முறையாகப் பயன்படுத்திட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் மண்டல அளவிலான ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் வாயிலாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.





இயங்க உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை மையம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தும் சிற்றுண்டியகம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

**கணினிமயமாகும் கிராம ஊராட்சிகள்**

அரசின் அனைத்துத் துறைகளிலும் கணினிகளைப் பயன்படுத்தி, மின் ஆளுமையை நடைமுறைப்படுத்துவதில் முன்னோடியாக விளங்கும் தமிழக அரசு, கிராமங்களில் மின் ஆளுமை மூலம் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், மேலும் இதற்கான மென்பொருட்கள் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 1,113 கிராம ஊராட்சிகள், 385 எண்ணிக்கையிலான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட அளவிலான 29 உதவி இயக்குநர் (ஊராட்சி) அலுவலகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம் ஆகியவற்றிற்கு 1,537 கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

முதற்கட்டமாக, மொத்தம் 10 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் இந்தப் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் ராஜகோபாலன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. செல்வராஜ், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம் முடிச்சூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. நிர்மலா பாஸ்கர் ஆகியோரிடம் கணினிகளை வழங்கித் தொடங்கி வைத்தார்கள்.




**சுயஉதவிக் குழு இண்டர்நெட் மையம்**

கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகளை முழுமையாகப் பயன்படுத்தும் நோக்கில் இந்தக் கணினிகளை ஊராட்சி நிருவாகம் பயன்படுத்திய நேரம் போக எஞ்சிய நேரத்தில் சுயஉதவிக் குழுக்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இக்கணினிகளைக் கொண்டு 1,113 ஊராட்சிகளிலும் இண்டர்நெட் (RASI) மையங்கள் உருவாக்கப்படுகின்றன. ஏற்கெனவே தமிழகத்தில் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படும் 626 ராசி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதிலும், கணிசமான அளவில் வருவாயைப் பெருக்குவதிலும் மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த மைல்கல்லாக இத்திட்டம் அமைந்துள்ளது. இதுதவிர, கிராம மக்கள் பெருமளவில் பயன்பெறத்தக்கத் தேவையான பல்வேறு தகவல்கள் அவர்களின் கிராமத்திலேயே கிடைக்கும் வகையில் இந்த ராசி மையங்கள் பயன்படும். கிராம மக்கள் பயன்பெறத்தக்க முதியோர் கல்வி, சுகாதார மற்றும் மருத்துவ ஆலோசனைகள், வானிலை அறிக்கை, விலைவாசி நிலவரம், நடைமுறையிலுள்ள வேளாண் தொழில் நுட்பங்கள், வேளாண் செய்முறைகள் போன்ற தகவல்களை இம்மையங்கள் மூலம் பெறலாம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இம்மையங்களில் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான 'வெப் காமிரா' மற்றும் துணைக் கருவிகளை (web camera and accessories) 13.10.2004 அன்று வழங்கினார்கள். இந்த web camera கருவிகளை ஆண்டிபட்டி திம்மரசநாயக்கனூர் முல்லைவனம் சுய உதவிக்குழுத் தலைவி திரு. ஆர். சுமதி, ஆண்டிபட்டி குன்னூர் வைகை அறிவொளி சுயஉதவிக் குழு தலைவி திருமதி. எம். லிங்கம்மாள் ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

**மாதிரி கிராமப் பயிற்சி மையங்கள் –**
**வீடியோ கருத்தரங்க மையங்கள்**

இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள ஊராட்சிகளும் பின்பற்றும் வகையில் முன்னோடியாகத் திகழ்வதோடு மட்டுமல்லாமல், சிறந்த செயல்பாடுகளைப் பயிற்றுவிக்கும் பயிற்சிக்களமாக மாதிரி கிராமப் பயிற்சி மையங்களை உருவாக்கும் புதுமையான முயற்சியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரைப்படி தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கிராம சுகாதார இயக்கம், முழுச் சுகாதார இயக்கம், மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை, மரபுசாரா மாற்று எரி சக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துதல், வளர்ச்சித் திட்டங்களில் பொது மக்களின் பங்கேற்பு, பங்களிப்பு மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் மிகச்சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகள் இத்தகைய கிராமப் பயிற்சி மையங்களாகச் செயல்படும்.

ஒவ்வொரு மாதிரி கிராமப் பயிற்சி மையமும் நிரந்தர வீடியோ கருத்தரங்க மையமாகவும் செயல்படும். கிராம அளவிலான நிருவாகிகள், மாவட்ட மற்றும் மாநில நிருவாகத்திற்கு இடையே ஒரு பயனுள்ள பாலமாக இம்மையம் செயல்படும். அதுமட்டுமல்லாமல், அரசு கணினி வாயிலாக கிராம அளவிலான நிருவாகிகளுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் மையமாகவும் இவை செயல்படும். அடித்தள நிருவாகிகள் தங்களின் குறைகளைத் தங்களின் கிராமத்தில் இருந்து கொண்டே நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான உயர் அலுவலர்களிடம் முறையிடவும் கலந்து ஆலோசனை பெறவும் இது வழிவகை செய்கிறது.

இந்தப் புதிய திட்டத்தை, 13.10.2004 அன்று தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேனி மாவட்டம், அரண்மனைபுதூர் ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. முத்துமணி அவர்களுடன் வீடியோ கான்பரன்சிங் முறையில் கலந்துரையாடினார்கள். அப்போது, மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்த தான் இன்றைக்கு ஒரு ஊராட்சி மன்றத்தின் தலைவராக உயர்ந்து, மன்றத் தலைவர் என்ற முறையில் தனது கிராமத்தைச் சேர்ந்த மக்களின் மேம்பாட்டிற்குப் பாடுபடுவதாகத் திருமதி. முத்துமணி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. முத்துமணி மேலும் சிறப்புடன் செயல்பட தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

**'மாண்புமிகு முதலமைச்சர் தங்கப்பதக்கம்'**

ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியருக்கு விருது வழங்க 29.10.2003 அன்று தமிழக அரசு முதன்முறையாக ஆணையிட்டது. இந்த விருது, பாராட்டுச் சான்றிதழையும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் தங்கப் பதக்கத்தையும் கொண்டதாகும். 2003-2004-ஆம் ஆண்டில்



மாண்புமிகு முதலமைச்சர் தங்கப்பதக்கம் பெற்றிடத் தேர்வு செய்யப்பட்ட, கோவை மாவட்ட முன்னாள் மாவட்ட ஆட்சியர் திரு. என். முருகானந்தம் அவர்களுக்கு, இந் நிகழ்வின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தங்கப்பதக்கத்தையும் பாராட்டுச் சான்றினையும் வழங்கினார்கள்.

**தலைமைச் செயலகத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருள் விற்பனை மையம் மற்றும் சிற்றுண்டியகம்**

9.8.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது பேசிய பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தங்கள் மாவட்டங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகத் தயாரிக்கப்படுகின்ற பொருட்களை சென்னையில் வைத்து விற்பனை செய்யும் வகையில் ஒரு விற்பனை மையம் அமைத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் மகளிர் சுயஉதவிக் குழு சிற்றுண்டி மையம் அமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த விற்பனை மையத்தைத் தலைமைச் செயலகத்திலேயே அமைக்கலாம் என்று தெரிவித்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையின்படி, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கின்ற பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், மூலிகைப் பொருட்கள், தோல் மற்றும் கலைப் பொருட்கள் முதலான பல்வேறு தயாரிப்புப் பொருட்களைப் பொதுமக்கள் வாங்கிப் பயன் அடைகின்ற வகையில் ஒரு விற்பனை மையம் தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் முழுவதும் பங்கேற்றுச் செயல்படுத்தும் சிற்றுண்டியகத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்போது இந்தச் சிற்றுண்டியில் பயன்படுத்திட மின்அணு சமையல் கருவி (Microwave Oven) வழங்கி சிற்றுண்டியகத்தைச் சிறப்புடன் நடத்த தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனையடுத்து, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் இயற்கை உரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள், ஆர்சிட் (Orchid) மலர்களால் தயாரிக்கப்பட்ட பூங்கொத்து போன்ற பொருட்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினர். இப்பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் தங்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். இந்த சிறப்பு முயற்சிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெகுவாகப் பாராட்டி தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

# கோ-ஆப்டெக்ஸ்



## துணிகளில் முதன்மை...
## சிறப்பிலே மேன்மை!
## உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

**மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.**

Visit us at www.tn.gov.in

Visit us at www.cooptex.com

**எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!**

# மருதுபாண்டியர் நினைவு நாள் மற்றும் மருதுபாண்டியர் நினைவுத் தபால்தலை வெளியீட்டு விழா

மருதுபாண்டியர் நினைவு நாள் மற்றும் நினைவுத் தபால்தலை வெளியீட்டு விழா, மதுரை தமுக்கம் கலையரங்கில், தமிழக அரசின் சார்பில் 24.10.2004 அன்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு பொதுப்பணி, வருவாய், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மருதுபாண்டியர் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மருதுபாண்டியர் நினைவுத் தபால்தலையைப் பெற்று, விழாப் பேருரையாற்றினார்கள்.

தனது பேருரையில், "சிவகங்கைச் சீமையின் வரலாற்று வீரர்களான மருது சகோதரர்களுக்கு வணக்கம் செலுத்துகின்ற, இந்த நினைவுநாள் விழாவில் கலந்து கொண்டு, மருதுபாண்டியர் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முழு முயற்சியின் காரணமாக வெளியிடப்படுகின்ற மருதுபாண்டியர் நினைவுத் தபால் தலையைப் பெற்றுக் கொள்ளும் நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்த நாள், ஆதிக்க வெறி பிடித்த வெள்ளை ஏகாதிப்பத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வீரமரணம் அடைந்த மருதுபாண்டியர்கள் தியாகத் திருநாள்! இன்று 2004 அக்டோபர் திங்கள் 24–ஆம் நாள். 203 ஆண்டுகளுக்கு முன்னால் 1801–ஆம் ஆண்டு இதே நாளில் வீரம் விளையும் வெற்றித்திருமண்ணாம் சிவகங்கைச் சீமை திருப்பத்தூரில், ஆங்கிலேயரால் மருதுபாண்டியர்கள் தூக்கிலே தொங்க விடப்பட்டார்கள். அன்றைக்கு அவர்கள் மட்டுமல்ல, 500–க்கும் மேற்பட்ட வீர இளைஞர்களும் அவர்களுடன் தூக்கிலிடப் பட்டார்கள்.

மருதுபாண்டியர்களையும், அவர்களது தோளோடு தோள் நின்று போராடிய வீர மறவர்களையும் வெள்ளையர்கள் வேட்டையாடி, விரட்டிப் பிடித்து, தூக்கிலே தொங்கவிட அவர்கள் செய்த தவறுதான் என்ன? தங்கள் உரிமையைக் கேட்டார்கள். அருள் உள்ளம் கொண்ட மருதுபாண்டியர்கள் நம்பி வந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் இளவல் ஊமைத் துரைக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். ஆங்கிலேயரின் பார்வையில் அது மன்னிக்க முடியாத குற்றமாம்! வீரமங்கை வேலு நாச்சியாரின் போர்ப்படைத் தளபதிகளான சின்னமருதுவும், பெரிய மருதுவும் இதற்கெல்லாமா அஞ்சுவார்கள்.

இந்த நாடு என்னுடைய நாடு. இந்த மக்கள் என்னுடைய மக்கள். இவர்களை அடிமை கொள்ள



ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று வீர முழக்கமிட்டுப் புரட்சிக் கொடியை உயர்த்தினார்கள் மருது சகோதரர்கள்.

ஏனைய பாளையக்காரர்களுக்கும் மற்ற கிராமத் தலைவர்களுக்கும் சுதந்திர தாகத்தை ஊட்டி, அவர்களையும் தங்களது புரட்சிப் படையில் இணைத்து கொண்டார்கள். ஆனால், பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைபிடித்த ஆங்கிலேயர்கள், பகைமை உணர்வை உள்ளுக்குள்ளேயே உருவாக்கி, அதற்கு ஊட்டமளித்து மருது சகோதரர்களுக்கு எதிராகத் திருப்பி அவர்களை நயவஞ்சகமாக வெற்றி கொண்டார்கள்.

அடைக்கலமாய் வந்த கட்டபொம்மனின் இளவல் ஊமைத்துரையைத் தங்கள் வசம் ஒப்படைத்துவிட்டால் நாடு முழுவதையும் தருவதாக நப்பாசை காட்டியபோதும், நம்பி அடைக்கலமாய் வந்த வீரனை ஆங்கிலேயர் கையில் ஒப்படைப்பது ஒருபோதும் நடக்காது என்று தெளிவுபட மருது சகோதரர்கள் மறுத்துவிட்டதால், சிவகங்கைச் சீமையைச் சின்னா பின்னமாக்கிய ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களுக்குத் தூக்குத் தண்டனையைப் பரிசாகக் கொடுத்தார்கள்.

ஆங்கிலேயரால் மருதுபாண்டியர்களின் உயிரைத் தான் பறிக்க முடிந்ததே தவிர, அவர்களது உணர்வுகளைப் பறிக்க இயலவில்லை. அதன் அடிப்படையில்தான், 203 ஆண்டுகள் கழிந்த பின்னும், மருதுபாண்டியர்களின் வீரத்தை நினைவுகூர்ந்து, இங்கே விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். மருது பாண்டியர்கள், ஆட்சித் திறத்தில், அறிவாற்றலில், தமிழ் உணர்வில், ஈகை குணத்தில், ஈடற்றவர்களாக விளங்கியவர்கள். அருந்தமிழை ஒரு கண்ணாகவும், ஆன்மீகத்தை மறு கண்ணாகவும் கொண்டு அரும்பணி ஆற்றியவர்கள்.

காளையார்கோயிலிலும், குன்றக்குடியிலும் அவர்கள் ஆற்றிய கோயில் திருப்பணிகள், அவர்களது கடவுள் பக்தியை இன்றைக்கும் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த பண்புகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நம்பி வந்தவர்களைக் காக்கின்ற அருள் உள்ளமும், நாட்டு மக்களைத் தங்கள் இதயத்திலே ஏந்தி, அவர்களுக்கு நன்மை செய்கின்ற நல்ல உள்ளமும் கொண்டவர்களாக மருதுபாண்டியர்கள் திகழ்ந்தார்கள்.

இத்தகைய அருங்குணங்கள் படைத்த மருது பாண்டியர்கள் உயரிய வகையில் கௌரவிக்கப்பட வேண்டும், அவர்களது பெருமையை எதிர்கால சந்ததியினரும் அறிந்து, தங்களது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளவேண்டும். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இளைய சமுதாயத்தின் இதயங்களில் வீற்றிருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த விழா மிகச் சிறப்புடன் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாட்டுக்காகவும், மொழிக்காகவும், போராடிய பெருமக்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்கு விழா எடுத்துச் சிறப்பிப்பதில் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவிடத்தை அரசுடைமையாக்கி, 21.10.1992 அன்று மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அந்த நினைவிடத்தில் வீரச் சகோதரர்கள் சின்னமருது, பெரியமருது ஆகிய இருவருக்கும் எட்டு அடி உயர முழு உருவச் சிலைகள் அமைத்து, அன்றே மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள். மருது பாண்டியர்களின் நினைவிடம் மேலும், கூடுதல் வசதிகளுடன் விரிவாக்கப்பட வேண்டும் என்றும், மருது சகோதரர்களுக்கு மேலும் சிறந்த முறையில் புதிய திருவுருவச் சிலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும் சிவகங்கை மாவட்ட மக்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று, மருதுபாண்டியர் நினைவிடத்தில் ரூபாய் இருபது இலட்சம் செலவில் நினைவகத்தை மேம்படுத்தியதுடன், மருது சகோதரர்களின் சிலைகளையும் ரூபாய் ஐந்தரை இலட்சம் செலவில் புதியதாக வடிவமைத்துத் தந்தார்கள்.

அதுமட்டுமல்ல, மருது சகோதரர்களின் தியாகத்தை மேலும், போற்றும் வகையில், தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கும் இன்று செயல்வடிவம் தந்திருக் கிறார்கள். வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து, சுதந்திரத்திற்காகப் போர் புரிந்து, தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த மருது பாண்டியர்களின் நினைவாகத் தபால்தலை வெளியிடப்பட வேண்டு மென்பது இன்றல்ல, நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாகத் தமிழக மக்களின் விருப்பமாகும்.


தமிழக மக்களின் இந்த விருப்பத்தை முன்மொழிந்து, மத்திய தகவல் தொடர்புத் துறைக்குப் பலமுறை கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அதன்மீது சாதகமான ஒரு முடிவை நீண்ட நாட்களாகவே மத்திய அரசு மேற்கொள்ளாமலேயே இருந்தது. இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றவுடன், அதன்மீது தனி அக்கறை கொண்டு, மருதுபாண்டியர்களின் நினைவாகத் தபால்தலை நிச்சயமாக வெளியிடப்பட வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தக் கோரிக்கையை, அன்றைக்கு இருந்த மத்திய அரசு ஏற்று,

மருது சகோதரர்களின் நினைவாகத் தபால்தலை வெளியிட ஒப்புதல் அளித்து, அதனை 22.3.2004 அன்றைய கடிதத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்தது.

மருதுபாண்டியர்களின் நினைவாகத் தபால்தலை வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கை, காலம் காலமாக மறுக்கப்பட்டுவந்த நிலையில், மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சியால் தபால்தலை வெளியிடப்படுவது, வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட மருது சகோதரர்களின் வீரத்திற்கும், தீரத்திற்கும் பெருமை செய்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனை ஆகும்.

மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அந்தச் சாதனை செயல் வடிவம் பெறுகின்ற திருநாள் இந்த நாள். இந்தத்




திருநாளிலே, இந்த விழா மேடையில், மருது பாண்டியர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முழு முயற்சியால் இன்று வெளியிடப்படுகின்ற மருது பாண்டியர்களின் நினைவுத் தபால்தலையைப் பெற்றுக் கொள்வதை என் வாழ்வின் மிகப் பெரும் பாக்கியமாகப் போற்றுகிறேன். இதற்கெல்லாம் காரணமாக இருக்கும் எங்கள் ஒப்பற்ற தலைவியாம் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு மீண்டும் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மருது, சகோதரர்களின் வானளாவிய புகழ் வளர்க! வளர்க!'' என்று கூறினார்.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பேசும்போது,

"தென்பாண்டிக் குயில் கூவினால் நெஞ்சம் நெகிழும், தென்பாண்டி மறவர் பெயர் தாக்கினால் அவர்களது மார்பு தகரும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட தென்பாண்டி மண்டலத்தின் வீரமைந்த தலைநகராம் மதுரை மாநகரில் மாவீரர்கள் மருது பாண்டியர்கள் போற்றுகின்ற வகையில் இந்த விழா நடைபெறுகிறது.

இந்த விழாவிற்குத் தலைமையேற்கின்ற தகுதியில் சிறப்பை உயர்வை எனக்கு நல்கிய மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். ஒரு கால் நூற்றாண்டு காலமாகத் தமிழ்நாட்டில் நடக்காத ஒரு நிகழ்ச்சி அண்மையில் நடந்திருக்கிறது. இதுவரைக்கும் தமிழ்நாட்டிற்கு ஒரு முதலமைச்சர்: தமிழ்நாட்டுக் காட்டிற்கு ஒரு முதலமைச்சர் என்றுதான் இருந்தார்கள். இப்பொழுதுதான் முதல்முறையாகத் தமிழ்நாட்டுக்கும் நானே முதலமைச்சர், தமிழ்நாட்டுக் காட்டுக்கும் நானே முதலமைச்சர் என்று புரட்சித் தலைவி அவர்கள் நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். அவர்களது முயற்சியின் தொடர்விளைவாக மருதுபாண்டியரின் அஞ்சல்தலை இன்று வெளியிடப்படுகிறது.

நம்முடைய அருமைச் சகோதரர்கள் வாழ்த்துரையில் தெரிவித்தார்கள். மருதுபாண்டியர்கள் போராடியகாலம்

எப்போது? அவர்களுக்கு அஞ்சல்தலை வெளியிடும் காலம் எப்போது? என தங்களது மனக்குறையைத் தெளிவுபடுத்தினார்கள். "Better Late than Never" என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. வெளியிடப் படாமல் இருந்ததை விட இப்போதாவது வெளியிடக் கூடிய ஒரு காலம், புரட்சித் தலைவி அவர்களின் வற்புறுத்தலால் மத்திய அரசுக்கு வந்ததுவே என்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன். மத்திய அரசைப் பாராட்டுகிறேன்.

இந்தியாவின் வரலாறு, கங்கைக் கரையினிலே தொடங்கப்பட வேண்டும் என்று சொல்வது தவறு. உண்மையிலேயே இந்தியாவின் வரலாறு, இன்னும் சொல்லப்போனால் உலகத்தின் வரலாறு வைகைநதி கரையினிலும், தாமிரபரணி கரையினிலும் தான் தொடங்கப்பட வேண்டும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். அதே போல, இந்திய விடுதலைப் போராட்ட வரலாறும், தொடங்கப்பட வேண்டிய இடம் தென் தமிழ்நாடு. வடநாடும் கிடையாது, வட மாநிலமும் கிடையாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், மத்திய அரசின் கவனத்திற்கு இந்திய விடுதலைக்குப் போராடிய பல தலைவர்களுடைய பெயர்கள் அவர்களது வாழ்க்கை வரலாற்று குறிப்புகள் இடம் பெறவில்லை. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு குறித்த அதிகாரபூர்வமான புத்தகத்தில் செக்கிழுத்த வ.உ.சி. பற்றிய தகவல்கள் இல்லை.

ஒரு சகோதரர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். மத்திய அரசின் ஆவணகாப்பகத்தில் இந்திய விடுதலைக்குப் போராடிய ஏறத்தாழ ஐம்பதாயிரம் பேரின் படங்கள் இடம் பெற்றிருக்கிறது என்றும், தான் அதை தேடித் தேடிப் பார்த்தும், அதில் நான்கு, ஐந்து தமிழ்நாட்டுப் பெருமக்களின் படங்கள் தான் இடம்பெற்றிருந்தன என குறிப்பிட்டார். ஆனால், இந்த மனக்குறையை எல்லாம் போக்கக்கூடிய வகையில் இன்றைக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக மாவீரர்கள் மருதுபாண்டியர்கள் அவர்களுக்கு விழா நடக்கிறது.

மருதுபாண்டியர் சரித்திரம் என்பது ஒரு வீர சரித்திரம். ஒரு மிகப்பெரிய தீரர்களின் சரித்திரம். உலகமே போற்றி உயர்த்திப் பார்க்க வேண்டிய மாவீரர்களின் சரித்திரம். அவர்கள் மன்னர் குலத்தில் பிறந்தவர்கள் அல்ல. முக்குலம் என்ற குக்கிராமத்தில் பிறந்தவர்கள். ஒரு சாதாரண குடும்பத்தில் தான் பிறந்தார்கள். அவர்களது தந்தை இராமநாதபுரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த பழனிச்சாமி என்ற பெயரில் ஆனந்தாயி என்பவருக்குப் பிறந்த இரண்டு பேரும் தங்களுடைய வீரத்தால் மன்னர்களுடைய கவனத்தை எல்லாம் கவர்ந்தார்கள். அவர் பிறந்தது விருதுநகர் மாவட்டம். அவர்கள் பயிற்சி பெற்றது இராமநாதபுரம் மாவட்டம். அவர்கள் வீரத்தைக் காட்டி ஆட்சிபுரிந்தது சிவகங்கை மாவட்டம். நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளம் தென்றலே என்று கண்ணதாசன் பாடியது போல விருதுநகர் மாவட்டத்தில் பிறந்து, இராமநாதபுரம் மாவட்டத்திலே பயிற்சி பெற்று, சிவகங்கை மாவட்டத்தில் அரசேற்று விடுதலை போராட்டக் களத்திலே இன்னுயிர் ஈந்தவர்கள் மருதுபாண்டியர் சகோதரர்கள். 21 ஆண்டு காலம் அவர்களது ஆட்சி சிவகங்கையில் இருந்தது. சிவகங்கை என்பது ஒரு பெரிய நிலப்பரப்பு அல்ல. ஒரு குறுகிய நிலப்பரப்பு தான். ஆனால், அதில் அவர்கள் தங்களது வீரத்தை நிலைப்படுத்தினார்கள். ஆற்றல் திறமையை வெளிப்படுத்தினார்கள்.

இங்கே சகோதரி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் குறிப்பிட்டது போல, முத்துவடுகநாதர் இந்த இரண்டு இளைஞர்களையும் வேட்டைக்குக் கூட்டிக்கொண்டு போனார். வேட்டைக்குச் சென்ற பொழுது பதுங்கிக்கிடந்த ஒரு புலி பாய வருகிறது. பெரிய மருது இந்தப் புலியின் வாலைப் பிடித்து புலியைத் தரதர வென இழுத்து அடித்து அதன் வாயைப் பிளக்கச் செய்தார். இதைப் பார்த்த வடுகநாதர் திடுக்கிட்டு போனார். இவ்வளவு அஞ்சாமையா! இவ்வளவு ஆற்றலா! என்று கருதித்தான் பெரிய மருதை படைத் தளபதி ஆக்கினார். சின்ன மருதுவை அமைச்சராக ஆக்கினார்.

மற்ற விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப் போராட்ட வீரர் பெருமக்களுக்கும் மருதுபாண்டியர்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அந்தந்த பாளையக்காரர்கள் சிலர் போரிட்டனர். இந்தியாவின் சரித்திரத்தில் எல்லா பாளையத்தையும் ஒருங்கிணைத்துக் காட்டி, விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட பாளையகாரர்கள் எல்லாம் எங்கெங்கெங்கு இருக்கிறார்கள் என்று ஒன்றுபடுத்திக் காட்டி, வெள்ளை ஆதிக்கத்தைக் களத்தில் எதிர்த்த முதல் மாவீரர்கள் மருதுபாண்டியர்கள் தான் என்பதை நான் சரித்திரத்தில் பதிவு செய்யப்பட வேண்டியவர்கள் எனக் கருதுகிறேன். பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தவுடன் கட்டபொம்மன் அடைக்கலம் தேடி வந்தான் வெள்ளைக்காரர்களை எதிர்க்கக் கூடிய பகுதி என்று, சிவகங்கையை நோக்கித்தான் கட்டபொம்மன் வந்தான். வந்த கட்டபொம்மனை மருதுபாண்டியர்கள் புதுக் கோட்டையில் மன்னர் ஆங்கிலேயர்களுக்கு நண்பனாக இருக்கிறார். அவருடைய நாட்டுக் காட்டிலே மறைத்து வைத்தால் ஆங்கிலேயர்கள் தேட மாட்டார்கள் என்றுதான் புதுக்கோட்டை தொண்டைமான் காட்டுப்பகுதியில் கொண்டு போய் கட்டபொம்மனை ஒழித்து வைத்தார். புதுக்கோட்டை தொண்டைமானுக்கு ஒலை வந்தது. கட்டபொம்மன் காட்டில் பதுங்கியிருந்தால் பிடித்துக் கொடுங்கள் என்று கூற, புதுக்கோட்டை தொண்டைமான் பிடித்துக் கொடுத்துவிட்டார். அதே போலத்தான் ஊமைத் துரையும் பாளையங்கோட்டை சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்தும், மறுபடியும் பாஞ்சாலங்குறிச்சியில் போர் நடைபெற்றதால் அதனை முன்னின்று நடத்திக் கொண்டிருந்தவர்களும் மாவீரர் மருதுபாண்டியர்கள்தான் என்பதைக் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இது ஒரு சரித்திர உண்மை. அதற்குப் பிறகுதான் ஊமைத்துரையும் ஓடி ஒழிந்தார். ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்தார். ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததனாலேயே வெள்ளைக்காரர்களுடன் போரிடவில்லை. சிவகங்கை சீமையிலே படத்திலே கடைசியா மருது சகோதரர்களைக் கூறுவதுபோல நண்பர்களுக்காகப் போரிட்டோம் நாட்டுக்காகச் சாகிறோம் என்றார்களே. அது தான் உண்மை. ஊமைத்துரைக்காகப் போரிட்டார். ஆனால், அவர்கள் இறந்தது நாட்டுக்காக, சிவகங்கைப் பகுதியில் எப்படிப்பட்ட துடிப்போடு பாளையத்திற்காக நாட்டுக்காகக் களத்திலே போரிட்டதை எண்ணிப்பார்த்து பெருமைப்படுகிறேன்.

எத்தனையோ நாட்டுப்புறப் பாட்டுகள் உண்டு . கருவறையில் கல்லெடுத்துக் காளையார்கோவில் கோபுரத்தில் ஏறி பார்த்தால் மதுரை கோபுரம் தெரியும். அந்த ஆலயத்தை எழுப்பியவர்கள், கோபுரத்தை நிர்மாணித் தவர்கள் மருது சகோதரர்கள். இந்து ஆலயங்களுக்கு மட்டுமல்ல. நரிக்குடி, மதுரை பள்ளிவாசல், செக்காணூரணி கட்டவும், சருகணியில் மாதா கோவிலுக்கும் மானியம் கொடுத்தார்கள்.

எல்லா பெருமக்களையும் மதித்ததற்கு எடுத்துக் காட்டாக ஒன்று கூற விரும்புகிறேன். சிவகங்கையில் கடுமையான குடிநீர் பஞ்சம் இருந்தது. மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் ஒரு ஊருணி வெட்ட வேண்டுமென்று பெரியமருது தீர்மானித்தார். ஊருணியை வெட்டச் சொன்னார். ஊருணியை வெட்டுகின்ற நாளில் பூமி பூஜை போடவேண்டிய நாளில் பெரியமருது ஒரு இடத்தில் நின்றார். கொத்தனார் வெட்ட ஆரம்பிக்கிறார். ஆரம்பிக்கிற பொழுது பெரிய மருதுவிடம் கேட்டார். அய்யா ஒருசந்தேகம். இந்த ஊருணியைச் சந்திரன் விருத்தியில் வெட்டலாமா, சூரிய விருத்தியில் வெட்டலாமா என்று கேட்டார். பெரியமருதுக்கு ஒன்றும் புரியவில்லை. அய்யா நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை. சந்திர விருத்தி என்றால் என்ன ? சூரிய விருத்தி என்றால் என்ன ?அதில் ஏதாவது தொழில் ரகசியம் இருக்கிறதா ? என்னிடத்தில்சொல்ல முடிந்தால் தயவு செய்து சொல்லுங்கள் என்று கேட்டார். கொத்தனார் சொன்னார். சந்திரன் விருத்தி என்பது தெற்கு வடக்காக அகலமாகவெட்டுவது, சூரிய விருத்தி என்றால் கிழக்கு மேற்காக அகலமாக வெட்டுவது. ஆனால், குடிநீர்க்காக ஊருணி வெட்ட வேண்டுமானால் சந்திர விருத்தியில்தான் வெட்ட வேண்டும் என்று கொத்தனார் சொன்னார். பெரிய மருது சொன்னார். பிறகு எதற்கு யோசிக்கிறீர்கள். சந்திரன் விருத்தியிலே வெட்டுங்கள் அதில் என்ன சங்கடம். கொத்தனார் கொஞ்சம் தயங்கிவிட்டு மறுபடியும் பெரிய மருதுவிடம் சொன்னார். அய்யா, அதில் ஒரு ரகசியம் இருக்கிறது. சந்திர விருத்தியில் ஊருணி வெட்டச் சொன்னவர்களுக்குச் சந்ததிகள் விருத்தியாகாது. மக்கள் விருத்தியாகமாட்டார்கள். அவர்களுக்குக் குழந்தை பேறு இல்லாமல் போய்விடும். அப்படி குழந்தை பிறந்தாலும் விளங்காமல் போய்விடுவார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது. அதை நான் மகாராஜாவிடம் சொல்ல வேண்டியது எனது கடமை. அதனால் சொன்னேன் என்று சொன்னார். உடனே பெரிய மருது கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. அவர் சொன்னார். சந்திர விருத்தியில் வெட்டினால் எனக்கு பிள்ளை இல்லாமல் போய்விடும் அல்லது பிள்ளைகள் உருப்பிடாமல் போய்விடும் என்பதைக் கருதி சொல்கிறீர்களா ? தேவையே இல்லை. எனக்கு மக்கள் தான் பிள்ளைகள் அந்த மக்களுக்காகத்தான் இந்த ஊருணியை வெட்டுகிறேன். என் பிள்ளைகள் என்ன ஆனாலும் பரவாயில்லை. ஊருணியில் குடி தண்ணீருக்கான வகையில் சந்திரவிருத்தியில் வெட்ட வேண்டுமென்றால் அப்படி வெட்டுங்கள் என்று கட்டளையிட்ட மன்னர்பெரிய மருது என்பது சரித்திரத்தைப் படிக்கின்றபோது மெய்சிலிர்க்கிறது.

இன்னும் சொல்லபோனால், வீரத்தில் நிகரற்றவர். எத்தனையோ ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள். ஆஸ்திரேலியர்கள் பயன்படுத்தும் பூமராங் என்று அழைக்கப்படும் இந்தஆயுதம் எதிரிகளைத் தாக்கிவிட்டு விட்டெறிந்தவர்களின் காலடியில் நாய்குட்டியைப் போல் கிடக்கும். அதற்கு பெயர் தான் வளரி என்று பெயர். இந்த வளரியைப் பயன்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்க மாவீரர்கள் பெரிய மருதுவும் சின்னமருதுவையும் மட்டும் தவிர வேறு யாருக்கும் அந்த அளவுக்குப் பயிற்சி கிடையாது. ஒரு ஆங்கிலேயர் படை வீரரே எனக்கு வளரியைப் பயன்படுத்த சின்னமருது கற்றுக் கொடுத்தார் என்று எழுதியுள்ளார். அதை வேகமாக வளைத்து வீசி எறிய வேண்டும். அந்த வளரி என்கிற ஆயுதம் சிவகங்கையிலே மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட பின்னர் போராளிகளிடமிருந்து ஆயுதங்களை எல்லாம் பறிமுதல் செய்தார்கள். அப்படி பறிமுதல் செய்யப்பட்ட போது போராளிகளிடமிருந்து எடுக்கப்பட்ட வளரிகளின் எண்ணிக்கை, பத்தாயிரத்திற்கும் மேல். அந்த ஆயுதத்தைச் சாதாரண ஆள் பயன்படுத்த முடியாது. திப்புச் சுல்தானின் வாளுக்கு எவ்வளவு பெருமை இருக்கிறதோ அதேபோல் திப்புசுல்தான் இறந்த பின்னர்அவரது வாளில் பதிக்கப்பட்ட வைரங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அதேபோல் வளரியும் ஒரு அற்புதமான ஆயுதம்.

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தின் வட பகுதியிலிருந்து பெரிய மருது வீசிய வளரி, தெப்பக்குளத்தின் மையப்பகுதியையும் தாண்டி தெற்குப் பகுதியில் உள்ள முக்தீஸ்வரர் மேட்டில் போய் விழுந்தது என்று வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தெப்பக்குளம் என்பது தெற்கு வடக்காகச் சுமார் ஆயிரம் அடி தூரம். கிழக்கு மேற்காகச் சுமார் தொள்ளாயிரத்து எழுபது. இதுவரையில் இந்த பூமரங்கு ஆயுதத்தைப் பயன் படுத்தியவர்கள் எவரும் பெரிய மருது எரிந்த இந்த சாதனையை மிஞ்சிய ஒலிம்பிக்வீரர்கள் எவரும் இல்லை.

அப்படிப்பட்ட மாவீரரிடம் ஊமைத்துரை அடைக்கலமாக வந்தார். ஊமைத்துரையை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்

என்று கர்னல் அக்னியு பேசினார் என்று அக்னியுவே எழுதியிருக்கிறார். ஊமைத்துரையை எங்களிடம் ஒப்படைக்காவிட்டால் நீங்களும் கலகக்காரர்களாகக் கருதப்படுவீர்கள் என்று எச்சரித்து விட்டு வந்திருக்கிறார். எச்சரித்து வந்ததற்குப் பின்னர் என்ன நடந்தது. ஊமைத்துரையை ஒப்படைத்தார்களா ? சின்ன மருது பாண்டி எல்லா பாளையக்காரர்களையும் ஒருங்கிணைப்பதில் பேசிக்கொண்டிருந்தார். ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சின்ன மருதுவுக்கும், திப்புசுல்தானுக்கும் நட்பு இருந்தது. தீரன் சின்னமலைக்கும் நட்பு இருந்தது. இன்னும் சொல்லப்போனால், மாவீரன் நெப்போலியனுக்குமே நட்புஉண்டு. கருப்பையா சேர்வை என்பவரை நெப்போலியனுக்குத் தூதுவராக அனுப்பி வைத்தார். அந்த கருப்பையா என்பவர் தீரன் சின்னமலை இடத்தில் அமைச்சராக இருந்தவர். அவர் நெப்போலியனிடத்தில் பதில் கடிதம் வாங்கி வந்து திப்புசுல்தானை வந்து சந்திக்கின்ற பொழுது, நோய்வாய்பட்டு இறந்து போய்விட்டார் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகிறது.

ஊமைத்துரையை ஒப்படையுங்கள் என்று கேட்ட நேரத்தில் சின்னமருது பாண்டியர் வெள்ளை ஆதிக்கத்தை வேரறுப்பதற்காகச் சகல திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருந்தார். ஒரு குறிப்பைக் குறிப்பிட விரும்புகிறேன். சின்ன மருது பாண்டியர் போர் பிரகடனத்தை எழுதினார். அந்த பிரகடனத்தை ஸ்ரீரங்கம் கோவில் மதில் சுவரில் ஒட்டச் செய்தார். ஸ்ரீரங்கம் கோயிலில் ஒட்டினால் இந்துகள் மட்டும் தான் படிப்பார்கள். எல்லாரும் படிப்பதற்காகத் திருச்சி மலைக்கோட்டையில் ஒட்டச்செய்தார். அந்த பிரகடனத்தின் காப்பி அப்படி வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. அதில் அவர் எழுதியிருக்கிறார் இதைபடிக்கிறவர்கள் எழுத்து எழுத்தாகக் கவனமாகப் படிக்க வேண்டும். இதனால் சம்புத் தீவில் இருக்கிற சகல ஜாதி மக்களுக்கும் நான் தெரிவிக்கிறேன். சம்புத் தீவு என்பது ஒட்டுமொத்த இந்தியாவை, இந்தியாவிலுள்ள சகல ஜாதி மக்களுக்கும் தெரிவிக்கிறேன் என்று தெரிவித்துவிட்டு சின்னமருது கடுமையான வார்த்தைகளில் ஆங்கிலேயர்களை திட்டியிருக்கிறார். ஐரோப்பியர்களைக்கண்ட இடத்தில் விடாதீர்கள். கொல்லுங்கள். வேரறுங்கள். விடாதீர்கள். அவர்களுக்குக் கீழ் பணியாற்றாதீர்கள். அவர்கள் சொன்ன வேலையைச் செய்யாதீர்கள். நம்மாலேதான் இந்த நாட்டை பிடித்தார்கள். நம்முடைய வீரர்களைப் பயன்படுத்தித்தான் இந்த நாட்டை கைப்பற்றினார்கள். ஆகவே அத்தகைய ஐரோப்பியர்களை ஒட்டமொத்தமாக வேரறுக்க வேண்டும் என்று சின்ன மருதுபாண்டியர் எழுதியிருக்கிறார். அதனைப் படியெடுத்து படிக்க சொல்கிறார். அதனை அத்தனை நண்பர்களுக்கும் அனுப்பச் சொல்கிறார். அதனை படியெடுத்துக் கொடுக்காதவர் பன்றியின் இரத்தத்தைக் குடித்த பாவத்திற்கு ஆளாகிறான் என்று சொல்லிவிட்டு கீழே எழுதுகிறார். இப்படிக்குச் சிவகங்கை பேரரசின் ஊழியக்காரன் ஐரோப்பியர்களை ஒருபோதும் மன்னிக்காத சின்ன மருதுபாண்டி என்று எழுதி ஸ்ரீரங்கம் கோவில் மதில் சுவரில் ஒட்டினார்.

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தார் திப்புசுல்தான். திப்புசுல்தானின் ராஜ்ஜியம் பெரியது. அந்த போர் எத்தனை நாள் நடந்தது. 2 மாத காலத்திற்குள் வெள்ளைக்காரர்கள் முடித்துவிட்டனர். ஆனால் சிவகங்கைச் சீமையோடு வெள்ளக்காரர்கள் நடத்திய போர், எட்டு மாத காலம் நீடித்தது. தொன்னூற்று எட்டு பயிற்சி பெற்ற வெள்ளையர் தளபதிகள் சிவகங்கையில் இறந்தார்கள். திப்புசுல்தானுடன் நடத்திய போர்களத்தில் இழந்ததை விட அதிகமான வெள்ளைய வீரர்களைச் சிவகங்கை சீமைக் களத்தில்தான் அதிக அளவில் பறி கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஜெனரல் வீர்ச் என்பவரால் எழுதப்பட்ட நாட்குறிப்பின் உச்சகட்ட தகவல்தான் அன்றைய நாள். 1801 அக்.24 சனிக்கிழமை அன்றுதான் இந்த மாவீரர்கள் இரண்டு பேரையும் பிடித்தார்கள். காட்டுப்பகுதியில் பெரிய மருதுவைத் தலைமறைவாக நடத்தினார். அவர்கள் வாழ்க்கையில் அனுபவித்த அத்தனை துன்பங்களையும் தெரிவிக்க நேரம் இல்லை. காட்டில் முள் தைத்து விட்டது. உட்கார்ந்து முள்ளை எடுக்க நேரமில்லை. ஆகவே, இடையில் இருக்கும் வாளை எடுத்து அதன் கைபிடியால் முள்ளை அடித்து முழுமையாகக் காலின் உள்ளே செலுத்திவிட்டு மதகுபட்டி காட்டை நோக்கி நடந்தவர் பெரிய மருது.

அதே போல் சின்ன மருதுவைத் தொடையில் சுட்டு பிடித்துதான் சிவகங்கை கொண்டு வந்தார்கள். ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவத்தில் இறந்தவர்கள் 400 பேர். ஆனால் அதற்கு 118 ஆண்டுகளுக்கு முன்பே மருது சகோதரர்கள் மற்றும் 500 பேர் தூக்கிலிடப்பட்டு அவர்களின் தலை துண்டிக்கப்பட்டு வெறும் முண்டத்தை ஆங்கிலேயர்கள் ஊர்வலமாக இழுத்து வந்தனர். ஜாலியன் வாலாபாக் சம்பவத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், மருது சகோதரர்களுக்கு வழங்கப் படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. வீரர்கள் புதைக்கப்படுவதில்லை. விதைக்கப்படுகிறார்கள். விதைக்கப்பட்ட வீரர்கள் மருது சகோதரர்களுக்கு வீரத்தின் விளைநிலமாகத் திகழும் தமிழக முதல்வரின் பெரும் முயற்சியால் தபால் தலை வெளியிடும் வரலாற்று நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய அஞ்சல் பணிகள் வாரிய உறுப்பினர் புதுடெல்லி திரு.ஆர்.கணேசன், இ.அ.ப., அவர்கள் மருதுபாண்டியர் தபால்தலையை வெளியிட்டார்.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு.ஆர்.விஸ்வநாதன் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.எம்.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எல்.சந்தானம், திருமதி வளர்மதி ஜெபராஜ், திரு.காமாட்சிபுரி ஆதினம் சாந்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள் சேர்வை, மாமன்னர் மருதுபாண்டியர் பண்பாடு மற்றும் நலச்சங்க தலைவர் திரு.லெ.கருப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சி.துரைராஜ், திரு.எஸ்.எம்.சீனிவேல், திரு.பி.பொன்னம்பலம், திரு.ஆர்.சாமி, திரு.வி.ஆர்.இராஜாங்கம், திரு.கு.அன்பழகன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.மா.இளங்கோவன், தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாடு வாரியத் தலைவர் திரு.எம்.ஜெயராமன், மாவட்ட அறங்காவல் குழுத்தலைவர் திரு.கு.செல்லப்பாண்டி, மாவட்ட வேளாண் விளைபொருள் விற்பனைக்குழுத் தலைவர் திரு.வி.எஸ்.பூமிபாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வாரியத் தலைவர்கள், மாமன்னர் மருதுபாண்டியர் பண்பாடு மற்றும் நலச்சங்க தலைவர் திரு.லெ.கருப்பையா, செயலர் ஆர்.சி. இராமசாமி, மாமன்னர் மருதுபாண்டியர் பேரவை அமைப்பாளர் ஏ.ரத்தினவேல், மூவேந்தர் பண்பாட்டுக் கழகத்தின் மாநில தலைவர் திரு.எஸ்.பரங்குன்றம், மாவீரன் பூலித்தேவன் ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த டாக்டர் என். ராசையா, திரு.காமாட்சிபுரி ஆதினம் சாந்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள் சேர்வை. திரு.எஸ்.பாஸ்கரன், பட்டுக்கோட்டை ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று பேசும்போது, நமது இந்திய திருநாட்டில் விடுதலைப் போராட்ட வரலாற்று குறிப்பில் தென்னிந்தியாவிற்குத் தனி இடம் உண்டு. இவ்வரலாற்றில் இடம்பெறுகின்ற வகையில் தென் தமிழகத்திலே மருதுபாண்டியர் சகோதரர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் தம்பி ஊமைத்துரை அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக வெள்ளையர்களின் கோபத்திற்கு ஆளாகி கடைசியில் தூக்கு தண்டனைப் பெற்று தியாக தீபங்களாக





விளங்குகின்றனர். இந்த தியாக செம்மல்களுக்குத் தபால்தலை வெளியிடுவதன் மூலமாக தேசமே இன்று மருது சகோதரர்களை நினைவு கூறுகிறது.

இந்தியத்திருநாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தன்னுயிரையும் பொருட் படுத்தாது இரத்தம் சிந்திய மருதுபாண்டியர் சகோதரர்களின் திருவுருவ தபால்தலை வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இன்றைக்கு மாமன்னர் மருதுபாண்டிய சகோதரர்களின் தபால்தலை வெளியிட மத்திய அரசு உத்தரவிட்டத்தின் பேரில் தபால்தலை வெளியீட்டு விழா மதுரையில் மிக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

விடுதலைப்போராட்ட வீரர்களாக இருந்தாலும் சரி, விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்ற தியாகிகளாக இருந்தாலும் சரி, அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் அக்கறை எடுத்து அவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியமாக ரூ.3,000/–ம் மாதம் ரூ.15/– வீதம் மருத்துவ செலவிற்கும் வழங்கி தியாகிகளின் குடும்பங்களையும் பாதுகாத்துக் கௌரவித்து வருகிறார்கள். கடந்த மாதம் விடுதலைப் போராட்ட தியாகி ஒருவருக்கும் இந்த மாதம் இரண்டு நபர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்க அரசு உத்தரவிட்டதின் பேரில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வருவாய் துறை அமைச்சர் நேரில் வந்து ஓய்வூதிய ஆணையை வழங்கி கௌரவித்தார்கள். ஆக, தமிழக முதல்வர் அவர்கள் விடுதலைப் போராட்ட தியாகிகளையும் வீரர்களையும் கௌரவிப்பதிலும் அவர்களின் குடும்பங்களை அரவணைத்து செல்வதிலும் முதன்மையாகிறார் என்று கூறினார். முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கா. ஆசைத்தம்பி அவர்கள் நன்றி கூறினார்.

**– சிவ.க.சரவணன்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தமிழக மீனவர் நன்றி

இலங்கை கடற்படையினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தமிழக மீனவர் திரு. நாகநாதனின் உயிரைக் காப்பாற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இட்ட ஆணையின்படி, அந்த மீனவர் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுத் தீவிர உயர் சிகிச்சை அளிக்கப்பட்டு, பூரண குணமடைந்துள்ளார். துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அபாய நிலையிலிருந்து மீண்டு மறு பிறவி எடுத்துள்ள திரு. நாகநாதன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை **13.10.2004** அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

தனுஷ்கோடிக்கும், கச்சத் தீவுக்கும் இடையே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவரான பசும்பொன் கிராமத்தைச் சேர்ந்த தவசி ஆண்டித்தேவர் என்பவரது மகன் திரு. நாகநாதன் **8.9.2004** அன்று, இலங்கை கடற் படையினர் துப்பாக்கியால் சுட்டதில் தொண்டையில் குண்டு பாய்ந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். இந்த நிலையை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவருக்கு உடனடியாக உயர்நிலை அறுவை சிகிச்சை நடத்தி அந்த துப்பாக்கிக் குண்டை அகற்ற, விமானம் மூலமாக சென்னைக்கு அழைத்து வந்து அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதித்து, அறுவை சிகிச்சை செய்திட ஆணையிட்டார்கள். இதன்படி, **11.9.2004** அன்று மதுரையில் இருந்து சென்னைக்கு விமானம் மூலமாக அழைத்து வரப்பட்ட மீனவர் நாகநாதன், அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில், திரு. நாகநாதனுக்கு உயரிய சிகிச்சைகள் சிறப்புடன் வழங்கப்பட்டு அவர் தற்போது பூரண குணம் அடைந்துள்ளார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது ஆணையின்படி திரு. நாகநாதன் மதுரையில் இருந்து சென்னைக்கு அழைத்து வரப்பட்ட விமானச் செலவு மற்றும் அப்பல்லோ மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக் கொண்டது.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தனக்கு மறு பிறவி அளிக்கும் வகையில் தக்க சிகிச்சை அளிக்கவும், அதற்குண்டான அனைத்துச் செலவுகளை அரசே ஏற்கவும் ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து தனது நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்று திரு. நாகநாதன் விரும்பினார்.

திரு. நாகநாதனின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், **13.10.2004** அன்று தலைமைச் செயலகத்திற்கு அவரை வரவழைத்து நேரில் சந்தித்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்த திரு. நாகநாதன் மற்றும் அவரது மனைவியும் கண்ணீர் மல்க தங்களது நன்றியைத் தெரிவித்தார்கள். அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திரு. நாகநாதன் மற்றும் அவரது துணைவியாரிடம், தமது தனிப்பட்ட பரிசாக ரூ.5,000–மும் மேலும், புது ஆடைகளையும் வழங்கி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். □


Internet Kiosk by SHGs
Districts of Tamilnadu
* Existing - 626
* New - 1113
Total - 1739

தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518

